# பாரத மணி

ஷு புரட்டாசி

ஸரஸ்வதி பூஜை மலர்

SEPTEMBER 1941



OFFICE OF THE REGISTRAR
24 SEP 1942
MADRAS

6-3

M.41.6.3.
311189

விலை அணா 4

THE BHARATA MANI, MADRAS.

நூறு வருஷங்களாக
சுத்திகரிக்கப்பட்ட
பாத்கேட் விளக்கெண்ணெய்

நல்ல கூந்தல்
எண்ணெய் என்று
மதிக்கப்பட்டு
வருகிறது




பாத்கேட்ஸ்

"ஹாமலிஸ்"

ஸ்நோ

விடாமல் உபயோகித்து வந்தால் சருமம் பட்டுப் போலாகும். மேனிக்கு சோபை அளிக்கும். எல்லா
— பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும். —





ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் : 5, வெங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3 / வெளிநாடு ரூ. 5 }

| மாலை 6 | திங்கள் 29-9-41 விஷு ௵ புரட்டாசி ௴ 13௳ | முத்து 3 |
|---|---|---|


# பொருள் அடக்கம்

விஷயம் ... பக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| "ரகுவம்சம்" யார் இயற்றியது ?... ... | கௌண்டின்யன் | 117 |
| புதிய பீதி ... ... | கே. எம். முன்ஷி | 122 |
| ஜடாதரன் ... ... | கா. சி. வேங்கடரமணி | 125 |
| காசி க்ஷேத்திரம் ... ... | ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் | 132 |
| இங்கிலாந்தில் ஆளும் வகுப்பினர்... ... | ஜியார்ஜ் ஆர்வேல் | 133 |
| கவிச்சக்கரவர்த்தி ரவீந்திரநாத தாகூர் ... | ஆர். ராமசாமி | 135 |
| ப்ரோமீத்யுஸ் ... | பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல். | 140 |
| ஆண்டன் செஹாவ் ... | புரசு பாலகிருஷ்ணன், எம். பி. பி. எஸ். | 151 |
| கடும்புயலில் ஓர் குடிசை ... ... | ரா. சந்திரசூடன், பி. எஸ்ஸி. | 154 |
| பன்னு ... ... | ராஜலக்ஷ்மி சேஷாத்ரி | 158 |
| மகா கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் ... | வே. ரா. சுந்தராமன், எம். ஏ. | 162 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# நாரி கல்யாண்

அல்லது

# ஸ்திரீகள் சர்வ ரோக நிவாரண ஔஷதம்

மஹாத்மாக்களான நம் தேசத்து ரிஷிகள் நம்மிடம் கொண்ட கருணையினல் ஆயுர்வேதத்தை யருளிச்செய்தனர். ஆயுர்வேதம் பூர்வத்தில் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது புத்தக ரூபத்தில் நமக்குக் கிடைத்திருப்பவை மிகவும் சொற்பமாகும். ஆயுர்வேதம் அக்காலத்தில் எழுதப்படாமல் வாயினலேயே பயிலப்பட்டு வந்தது. பண்டைக் காலத்து ஓலைச் சுவடிகளிலொன்று எங்களிடம் கிடைத்திருக்கிறது. அதுதான் **நாரி கல்யாண்** என்னும் மருந்து. **நாரி கல்யாண்** வியாதிகளை ஆச்சரியப்படும்படி சொஸ்தப்படுத்துகிறது. **நாரி கல்யாண்** வைத்ய உலகத்துக்கே இது வரையில் புலனுகாத அபூர்வ மருந்து. நாங்கள் இம் மருந்தை எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் குறைந்த விலையில் விற்கிரோம். ஆயுர்வேத வைத்யர்களும் ஆங்கில வைத்யர்களும் இந்த மருந்தைப் பரீக்ஷிக்க வேண்டுகிரோம்.

## நாரி கல்யாண்

மாதவிடாய்க் காலத்தில் அதிகத் தொந்தரவேற்படுதல் (Dysmenorrhoea) மாதவிடாய் நின்று போதல் (Amenorrhoea) வெள்ளை, மாதவிடாய்த் தவக்கம், ஸ்திரீகளின் மலட்டுத்தன்மை, முதலியவைகளுக்கு ஏற்றது என்று பரீக்ஷை செய்து உபயோகப்பட்டிருக்கிறது.

**நாரி கல்யாண்** Menorrohogia, Metrohogia, நரம்புத்தளர்ச்சி, மயக்கம், அடிவயிற்றிலும் அரையிலும் வலி காணுதல் முதலியவைகளுக்கு நிகரற்ற உத்தமமான மருந்து.

**நாரி கல்யாண்** ஆயுர்வேத மருந்துச் சாக்குகளையும் பச்சிலைகளையும் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பதனல் தொடர்ந்து அநேக நாட்கள் சாப்பிட்ட போதிலும் சரீரத்துக்குத் தீங்கு செய்யாது. உலோகப் பொருள்கள் இதில் சேர்க்கப்பட வில்லை.

**நாரி கல்யாண்** மாதவிடாய் சிரமமில்லாமல் ஏற்படச் செய்கிறது. ஆயாசமுண்டாதல், ஹிஸ்டீரியா, தூக்க மின்மை முதலியவைகளுக்கு இணையற்றது. ஒரு டானிக்கைப் போலவும் உபயோகிக்கலாம். இரத்த விருத்தி, சரியான பசி, சரியான மலப்பிர வ்ர்த்தி முதலியவைகளைக் கொடுத்து ஸ்திரீகளின் வாழ்க்கையை ஸந்தோஷ முள்ளதாகச் செய்கிறது.

விவரங்களுக்கு :

**பரசுராம் சித்த ஔஷதாச்ரமம்**

**59-A லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, மதராஸ்**

தலைமை ஆபீஸ்: திருவண்ணமலை.

# பாரத நாடு

"முன்னை பழம் புகழ்சீர் வளம் ஓங்கும்
பொன்னி வாணி அருள் செல்வர் புகழ்ந்த"

*

**நமது நன்னாட்டில் எங்கும் சென்று முன்னோர் பெருமையையும் அவர் திறமையையும் நன்கறிவதே உண்மைக் கல்வியாம்.**

**16 விதமான அகில இந்திய சுற்றுப் பிரயாணங்களுக்கு மலிவான விகிதத்தில் டிக்கட்டுகள் கொடுக்கப்படும்.**

*

விபரங்களுக்கு அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

**சீப் கமர்ஷியல் சூபரின்டென்டென்ட்**

தென் இந்திய ரெயில்வே

திருச்சினாப்பள்ளி

## அறிக்கை

"பாரத மணி"க்கு ஏஜென்ஸியில்லாத இடங்களில் டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

★

விவரங்களுக்கு:
மானேஜர்,
"பாரத மணி" காரியாலயம்,
5, வேங்கடேச அக்ரகாரம்,
மயிலாப்பூர், மதராஸ்.

## தொடர் கதை!

கா. சி. வேங்கடரமணி
எழுதியது

ஆரம்பமாகும்
தேதியை
எதிர்பாருங்கள்

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

## ஜூபிடர் ஜெனரல்
### இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:
ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல்,
தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:
**ஒன்றரைக்கோடி ரூபாய்**

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:
**99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.**

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# “ரகுவம்சம்” யார் இயற்றியது?

[ கௌண்டின்யன் ]

“இதென்ன கேள்வி, அய்யா? மகா கவி காளிதாஸன் எழுதியதென்று உமக்குத் தெரியாதா? அரிக்குழி நோண்டும் பையன்களுக்குக்கூடத் தெரியுமே!” என்று சொல்லுவீர்களோ? அப்பப்ப, அதுதான் இல்லையாம்! சென்னை ஸர்வ கலாசாலை ஸம்ஸ்கிருத இலாகாத் தலைவர் டாக்டர் குஞ்ஜன் ராஜா, ஸர்வ கலாசாலையைச் சேர்ந்த கீழ்நாட்டுக் கலைக்கழகத்துப் பத்திரிகையில், “காளிதாஸனுடையவை யென்று சொல்லப்பட்ட கவிகளில் சந்தேகத்திற் கிடமான சில பாகங்கள்” என்ற கட்டுரை ஒன்று வெளியிட்டிருக்கிறார். அதில் ‘ரகுவம்சத்தில்’ முதல் 8 ஸர்க்கங்களைத் தவிர மற்றவை காளிதாஸன் இயற்றியவை யல்ல வென்றும், முதல் 8 ஸர்க்கங்களிலும் அனேக சுலோகங்கள் பிறரால் பிற்காலங்களில் அவர் நூலின் இடையே புகுத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் தான் பல காரணங்களைக் கொண்டு தீர்மானித்திருப்பதாகவும், இவ்விஷயங்களை ஸாங்கோபாங்கமாய் கூடிய சீக்கிரம் ஒரு புஸ்தகத்தில் தொகுத்து வெளியிடுவதாயும் சொல்லி யிருக்கிறார். அதற்குப் பூர்வ பீடிகையாக மேற்கூறிய கட்டுரையில் சில காரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பது என்ற நியாயப்படி இவைகளைச் சற்று ஆராய்வோம்.

காளிதாஸன் நாடகங்களிலும், ‘குமார ஸம்பவம்,’ ‘மேக தூதம்’ என்ற இரண்டு காவியங்களிலும், பாடாந்தரங்களும், எல்லோராலும் காளிதாஸ கிருதி என்று ஒப்புக்கொள்ளப்படாத சுலோகங்களும் காணப்படுகின்றன வென்றாலும், ‘ரகுவம்சத்தை’ப்பற்றினவரையில் இதுகாறும் இவ்வித பிரஸ்தாபம் ஏற்பட்டதில்லையென்றும்,; அருணகிரிநாதர் என்பவர் உரையில் மட்டும் வெகுகாலமாய் வழங்கி வரும் பாடத்துக்கு விரோதமாய் சில சில சுலோகங்கள் காளிதாஸனுடையதல்ல வென்று தள்ளப்பட்டிருக்கின்றன வென்றும் டாக்டர் குஞ்ஜன் ராஜாவே ஒப்புக்கொள்ளுகிறார். அப்படியிருக்க, சுமார் 2000 வருஷமாய் ஆன்றோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பாடத்தில் தப்புகள் இருப்பதாக லேசில் சம்மதிக்க முடியுமா? அதற்குத் தகுந்த அத்தாக்ஷிகள் வேண்டாமா? மேற்சொன்ன கட்டுரையில் குஞ்ஜன் ராஜா, முதல் முதலாக, ‘ரகுவம்சம்’ முதல் ஸர்க்கத்தில் 77, 78 ஆவது சுலோகங்கள் காளிதாஸன் கைவேலையில்லை என்கிறார். இந்த சுலோகங்களின், மூலம் காமதேனுவால் திலீப மகாராஜாவுக்கு ஏற்பட்ட சாபத்தை வஸிஷ்ட மஹரிஷி ராஜாவுக்குத் தெரிவிக்கிறார். இந்த சுலோகங்களை குஞ்ஜன் ராஜா ஒப்புக்கொள்ளாத காரணங்கள் பின்வருமாறு: (1) காமதேனுவால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட சாபம் “ஆஜன்ம சுத்தானாம்” என்று காளிதாஸனாலேயே வர்ணிக்கப்பட்ட சூர்ய வம்சத் தரசர்களில் ஒருவனான திலீபனுக்குச் சற்றும் பொருந்தாது; (2) நினைத்ததெல்லாம் கொடுக்கும் சக்தி வாய்ந்தவளும் உலகத்திற்கு நன்மையையே செய்பவளுமான காமதேனு ஒருவனை சபித்தாள் என்று சொல்லுவது அபத்தம்; (3) இதே ஸர்க்கத்தில் 8 ஆவது சுலோகத்தின் பொருளுக்கு மேற்சொன்ன 77, 78, ஆவது சுலோகங்கள் முற்றிலும் முறண்பாடா யிருக்கின்றன; என்பனவாம். இவைகளை ஒன்றன்பின் ஒன்றாய் கவனிப்போம்.

77, 78-ஆவது சுலோகங்களின் கருத்தாவது, “எந்தக் காரணத்தினால் என்னை நீ அவமதித்தாயோ (‘அவஜாநாஸி’) அது காரணம்பற்றி என் ஸந்ததியைப் பூஜிக்காத வரையில், உனக்கு ஸந்ததி உண்டாகா’ தென்று அவள் சபித்தாள். ஏ, ராஜனே, ஆகாச கங்கையில்

விளையாடும் திக்கு கஜங்கள் போட்ட சப்தத்தால் அந்த சாபமானது உன் காதிலோ உன் ஸாரதி காதிலோ விழவில்லை,'' என்பது. ஒரு ஸமயம் திலீபன் இந்திர ஸபை சென்றிருந்ததாகவும் திரும்பி வரும் வழியில் காமதேனு படுத்திருப்பதைக் கண்டும் தன் பார்யையின் பஹிஷ்டாகாலம் நிவர்த்தியாகும் தருணமாதலால் வழியில் மெனக்கட்டால் தர்ம லோபம் ஏற்படுமோ என்று பயந்து, தேவ பசுவை விதிப்படி வணங்காமல் ராஜா ஊருக்குச் சென்றுவிட்டதாகவும், அதன்பேரில் கோபித்துக் காமதேனு சபித்ததாகவும் கதை. ராஜா செய்த அபராதத்தைக் குறிப்பிடும் 76-ஆவது சுலோகம் காளிதாஸனுடையதென்று குஞ்ஜன் ராஜா ஒப்புக் கொள்கிறார். அதுபோல், "அவளை அவமதித்ததால், ('தத்வஜ்ஞாநாத்') உன் மனோரதம் தடைப்பட் டிருக்கிறது'' என்று வஸிஷ்டர் கூறுவதாகச் சொல்லும் 79-ஆவது சுலோகத்தையும் ஒப்புக்கொள்ளுகிறார். காமதேனு சபித்ததாகவும் அந்தச் சாபம்தான் மேற்கூறிய தடைக்குக் காரணம் என்று வர்ணிக்கும் நடுவில் வரும் இரு சுலோகங்களை மட்டும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இதற்கு முக்கிய காரணமாக, 'பிரவிமுதற் சுத்தமான' (ஆஜன்ம சுத்தானும்) ரகுவம்சத் தரசர்களில் ஒருவனுக்கு இப்பேர்ப்பட்ட சாபம் விதிக்கலாமா என்று தர்ம நியாயத்தைப் பேசுகிறார். இதற்குச் சற்றும் இடமில்லை. ரகுவம்சத் தரசர்களில் நகுஷாதிகள் சாபத்தால் கட்டுண்டு கஷ்டப்பட்டதாகப் புராணங்களில் வெளிப்படை. ஏன், அவதார புருஷர்களே இத்தகைய சாபங்களைப் பொருக்கவில்லையா? பிராரப்தம் யாரை விட்டது?

புராணாதிகளில் சாபங்கள் ஸகஜமாய்க் கையாளப்படலாம், ஆனால் காளிதாஸனின் மேன்மைத்தன்மையும் தாராள ஸ்வபாவமுமுள்ள கவியுள்ளத்திற்கு சாபம், சபிப்பது என்பதெல்லாம் வெறுப்பையே தந்திருக்க வேண்டுமென்றும், முக்கியமாய் இதை யோசிக்குங்கால் 'ரகுவம்சம்' 9-ஆவது ஸர்க்கம் (தசரதன் கதை) ஆரம்பமாகக் கடைசிவரையில் காளிதாஸன் எழுதியிருக்க முடியாதென்றும், இந்தப் பகுதி யாரோ வேறு மட்டக் கைச் சரக்கு என்றும், குஞ்ஜன் ராஜா கக்ஷி. "8-ஆவது ஸர்க்கத்தில் இந்துமதி சாபம் வருகிறதே, அதற்கு என்ன சொல்லுகிறீர்?'' என்றால், "அது வேறு ஸமாசாரம், அங்கே சாபம் முக்கியமல்ல. காளிதாஸன் அதைத் தந்திரமாக ஒளித்துவைத்து அதன் விவரத்தைக் கடைசியில், போகிற போக்கில் வெளிப்படுத்துகிறார். அதுவும், படிப்பவர் மனம் வேறு விஷயத்தில் ஆழ்ந்திருக்கும் தருணத்தில் தெரிய வருவதால் சாபப்பிரஸ்தாபமும் படிப்பவருக்கொருவித ஆறு தலையே தருகிற'' தென்று வியாக்யானம் பண்ணுகிறார். ஆயினும், சாபம் சாபம் தானே? காளிதாஸன் சாபப் பிரஸ்தாபத்தையே வர்ஜிப்பது வழக்கமென்றால் இந்துமதி சாபம் மட்டும் எப்படி அவரால் சொல்லப்பட்டிருக்கக் கூடும்? வாஸ்தவத்தில் குஞ்ஜன் ராஜா ஊகிக்கும் நிஷேதம் காளிதாஸ கவிகளில் காணப்படவே யில்லை. 'மேகதூதம்' முதல் சுலோகத்திலேயே ஒரு சாபம் சொல்லப்பட்டிருக்கிறது. 'விக்ரமோர்வசீயம்' கதைக்கு ஆஸ்பதமே ஊர்வசி யடைந்த சாபம். தவிர, தசரதன் ரிஷி புத்திரனைத் தெரியாமல் கொன்றுவிட்டதின் பலனாக அவர் ரிஷியால் சபிக்கப்பட்டார் என்ற கதை ராமாயணத்திலிருக்கிறது. வால்மீகி ஒப்புக்கொண்டதை காளிதாஸன் மறுத்தார் என்பது மிகையாகும். மேலும், 'ரகுவம்சம்' 9-ஆவது முதல் கடைசி ஸர்க்கம் வரையில் உள்ள பாகம் காளிதாஸன் எழுதவில்லை யென்றால், அவர் ராம சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு ஒன்றுமே எழுதவில்லையென்று ஏற்படும். மகாகவி என்றால் ராம கதையை எவ்வாறாகிலும் சொல்லித்தான் தீரவேண்டும் என்ற ஸம்பிரதாயம் தொன்று தொட்டு வந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இவ் வழக்கத்திற்குக் காளிதாஸன் விலக்குச் செய்திருப்பாரா?

77, 78 ஆவது சுலோகங்களைத் தள்ளுவதற்குக் குஞ்ஜன் ராஜாவின் முதற் காரணம் பொருத்தமா யில்லை என்பதை விளக்-

கிறேம். இரண்டாவதை கவனிப்போம். காமதேனு நல்லவள், சபித்திருக்கமாட்டாள், சபித்திருந்தாலும் காளிதாஸன் கவி சாபத்தைச் சொல்லாது என்கிறார். ராமாயணத்தில் விசுவாமித்திர சரித்திரத்தில் காமதேனு படுத்தின பாட்டை குஞ்ஜன் ராஜா மறந்துவிட்டாரா? விசுவாமித்திரர் படையை பன்மடங்கு ஒழித்து அவரை முறியடித்து ஓடும்படி செய்த அவள் தப்புக்குத் தண்டனை விதிக்கப் பின் வாங்குவாளா? 'ரகுவம்சம்' 2-ஆவது ஸர்க்கத்தில் காமதேனுவின் பெண் நந்தினி ராஜாவைப் பரீக்ஷிப்பதற்காக ஒரு மாயச் சிங்கத்தை சிருஷ்டி செய்து, ராஜாவைக் கண் கலக்கமடையும்படிச் செய்ய வில்லையா? இதைச் சொல்லும் சுலோகங்களை குஞ்ஜன் ராஜா காளிதாஸனுடையவை யல்லவென்று தள்ளவில்லையே; நந்தினியின் (வெளிப்பார்வைக்குக்) குரூரமான காரியம் காளிதாஸனுக்கு வெறுப்பைத் தரவில்லையென்றால், காமதேனுவின் சாபம் மட்டும் அவரால் ஒப்புக்கொள்ளத் தகாதது என்று எப்படிச் சொல்லலாம்? 'சாபம்' என்பது சபிப்பவன் இஷ்டம்போல் செய்யும் காரிய மல்ல. சபிக்கப்பட்டவன் கர்மாவை அனுஸரித்தது. விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளையாது என்ற நியாயத்தையே தர்ம தேவதையான காமதேனு தன் 'சாப'த்தால் விளக்குகிறாள். ஸந்ததி உற்பத்தியில் அக்கரையினால் ராஜா பூஜிக்கத் தகுந்த அவளை வணங்காமற் சென்றான். அதன் பலனை அவன் அனுபவித்தே தீரவேண்டும். அதற்கு அவன் வினை காரணமே யொழிய, காமதேனுவின் சாபமல்ல காரணம். அந்த சாபம் விமோசனத்திற்கு உபாயத்தைச் சொல்லுவதால் அனுக்கிரகமாகவே மாறுகிறது. (இதுதான் பெரியோரின் மஹிமை, அவர்கள் நிக்ரகமும் அனுக்கிரகமாகவே முடியும்.) "நீ ஸந்ததிக்காகச் செய்த பாபத்தை என் ஸந்ததியை ('மத்ப்ரஸூதிம்') பூஜித்து விலக்கிக் கொள்வாய்," என்று காமதேனு நடக்கப் போவதைத் தன் தீர்க்க திருஷ்டியால் சொல்லுகிறாள். கோபத்தாலோ அஹங்காரத்தாலோ சபித்தவளா யிருக்கும் பக்ஷத்தில் 'என்னைப் பூஜித்தால்தான் உன் பாபம் தொலையும்' என்றிருப்பாள்.

இந்த ரஹஸ்யத்தைக் குஞ்ஜன் ராஜா உணர்ந்திருந்தால், அவர் மூன்றாவது காரணம் அவருக்குத் தகுந்த காரணமாகத் தோன்றியிருக்காது. 80, 81-ஆவது சுலோகங்களில் வஸிஷ்டர், "காமதேனு தற்காலம் நாக லோகத்தில் தீர்க்கஸத்திரம் என்ற யாகம் நடப்பதால் அதற்கு வேண்டிய பால் தயிர் முதலியன கொடுத்துதவ அங்கே போயிருக்கிறாள். ஆகையால் நீ அவளை வணங்கி உன் சாபத்தைப் போக்கிக் கொள்ள ஸந்தர்ப்பப்படாது. ஆனால் அவள் பெண் இங்கே யிருக்கிறாள். அவளைப் பிரதிநிதியாக வைத்துக்கொண்டு உன் பாபத்தைப் போக்கிக் கொள்ளலாம்" என்று சொல்லுகிறார். 77-ஆவது சுலோகத்தில் காமதேனு தான் 'என் பெண் மூலம்' ('ப்ரஸூதிம்' என்பதை 'என் பெண் நந்தினி' என்று குஞ்ஜன் ராஜா பொருள் கொள்கிறார். விமோசனம் அடைவாய்) என்று சொல்லி விட்டாளே, அப்படியிருக்க, காமதேனு இல்லாததால் நந்தினியைப் பூஜி என்று வஸிஷ்டர் சொல்வது முன்னுக்குப் பின் விரோதமாயிற்றே; ஆகையால் 8-ஆவது சுலோகத்தைக் காளிதாஸன் எழுதியிருந்தால் 77 அவர் எழுதியிருக்க முடியாது", என்று குஞ்ஜன் ராஜா வாதிக்கிறார். இது அனாவசியமான அதியுக்தி. காமதேனு 'நந்தினியைப் பூஜிப்பாய்' என்று சொல்லவில்லை. என் 'ஸந்ததியைப் பூஜிப்பாய்' என்று தான் சொன்னாள். உலகத்திலிருக்கும் பசுக்களெல்லாம் அவள் ஸந்ததி; இது ராமாயணத்தில், ஒரு உழவன் தன் நாடோடி எருதுகளை வெயிலில் போட்டு வாட்டியதைக் கண்டு காமதேனுவின் தாய் மனம் நொந்தது என்றுணர்த்தும் கதையிலிருந்து நன்கு விளங்கும். 'ஒரு பசுவைப் பூஜிப்பாய்' என்பதே அவள் சாபத்தின் கருத்து. ஆனாலும் முடிந்தால் அவளையே பூஜிப்பதுமேல் என்று அரசன் எண்ணுவதும், அப்படி அரசன் எண்ணலாம் என்று வஸிஷ்டர் ஊகித்து, 'அப்படிச் செய்ய சந்தர்ப்பம் சரியாய் இல்லை, ஆகையால் நந்தினியைப்

பூஜி, அதுவே போதும்' என்று வஸிஷ்டர் அவனுக்குச் சொல்லுவதும் இயற்கை தானே. அப்படியிருக்க 81-ஆவது சுலோகத்திற்கு 77-ஆவது முறண்பாடாயிருக்கிறது, ஆகையால் அதைக் காளிதாஸன் எழுதவில்லை யென்பது எப்படிப் பொருந்தும்?

இவ்விரு சுலோகங்களிலுபயோகப்பட்டிருக்கும் வார்த்தைகளைக் கவனிக்குங்கால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தமுள்ளதாகவே தெரிகிறது. முற்கூறியபடி, 77-ஆவதில் 'அவஜாநாஸி' என்று குறிக்கப்பட்ட விஷயத்தைத் தொடர்ந்து நமக்கு அந்த சுலோகத்தையே நினைவூட்டுவது போல் 79-வது சுலோகத்தில் 'தத்வஜ்ஞாநாத்' என்று பிரயோகிக்கப் பட்டிருப்பது கவனிக்கத்தகுந்தது. காளிதாஸன் 77-ஆவது சுலோகத்தை யெழுதவில்லையென்றால், அரசன் அவஸரமாகச் சென்றதால் காமதேனுவை அவமதித்தான் என்று வஸிஷ்டர் அபிப்பிராயப் பட்டதாகவல்லவோ கவியின் கூற்றாகும். ராஜா கல்மஷமற்றவன் என்றும், அவனுக்கு அப்பேற்பட்ட கெட்ட எண்ணம் ஒருக்காலும் இருந்திருக்க முடியாதென்றும், விதிவசத்தால் தர்ம ஸங்கடத்துக்குள்ளாகி அபசாரம் செய்தவனானன் என்பதை விளக்கி, அவன் அவஸரப்பட்டதற்குக் காரணம் அவரே கூறியிருக்க, 'அவன் அவமதித்தான்' என்று அவர் சொல்லுவாரா? ஆனால் காமதேனு, ராஜா தன்னை அவமானித்ததாக நினைப்பது ஸகஜம். 78-ஆவது சுலோகத்தைப்பற்றிய வரையில், குஞ்ஜன் ராஜா அபிப்பிராயம் தப்பென்பதற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். காளிதாஸகவி ருசியை அறிந்தவர்கள், அதன் இரண்டாவது பாதியான 'நதத்யாகாச கங்காயா ஸ்ரோதஸ்யுத் தாமதிக்கஜே' என்ற பதக் கோர்வையின் அழகையும் இனிமையையும் காளிதாஸனல்லாது ஸாமாந்யக் கவி செய்திருக்கக் கூடுமென்றொருநாளும் ஸம்மதியார்.

டாக்டர் குஞ்ஜன் ராஜா பூர்வஸூரிகளிடத்திலுள்ள அலக்ஷிய புத்தியால் 'ஆஜன்மசுத்தானாம்' என்ற பதத்திற்குப் பட்டவர்த்தனமாய் அர்த்தம் கொண்டதோடு, கவியும் அப்படியே அதைப் பிரயோகித்திருப்பார் என்ற குறுகிய நோக்கத்தைக் கைப்பிடித்தார். இதனால் தான் இந்த அனர்த்தங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. குஞ்ஜன் ராஜா மல்லிநாதர் போன வழி போகக்கூடாதா? அப்பெரியார் தன் உரையில் 'ஆஜன்மசுத்தானாம்' என்பதற்கு 'நிஷேகம் முதலான ஸமஸ்த ஸம்ஸ்காரங்களையும் பெற்றவர்களுடைய' என்று அர்த்தம் சொல்லுகிறார். இது ஸந்தர்பத்தில் அழகாய்ப் பொருந்துகிறது. கெர்ப்பத்திலேயே சுத்தர்களாயிருக்கப்பட்ட ராஜாக்கள் வம்சத்தில், காமதேனுவின் சாபத்தால் கெர்ப்பந்தரிப்பதே தடைப்பட்டதென்பது நியாயந்தானே? அப்படித் தடைப்படாத பக்ஷத்தில் பிறக்கும் குழந்தையையல்லவோ கெர்ப்பத்திலேயே சாபம் தீண்டி, அவன் 'ஆஜன்மசுத்த'னாகாமல் செய்துவிட்டிருக்கும்? குஞ்ஜன் ராஜா இது அதியுக்தி யென்றெண்ணலாம். அப்படியாகில், ஒரே ஒரு வார்த்தையைத் தன் மனம்போல் அர்த்தம் பண்ணி 2000 வருஷங்களாய் பெரியோர் காளிதாஸ கிருதியென்று ஒப்புக்கொண்ட ஒரு பெரிய கிரந்தத்தை இம்மாதிரி சின்னா பின்னம் அவர் செய்வது நியாயமா? இவ்வளவு சிறிய குருவியின் தலையில் அவ்வளவு பெரிய பனங்காயைச் சுமத்துவது தர்மமோ?

காகிதம் கிராக்கியாயிருக்கிற நாளில் பாரதமணியில் இந்த விஷயத்தைப் பற்றி எழுதி இவ்வளவு இடத்தை யடைத்ததே தப்பாகையால் குஞ்ஜன் ராஜாவின் மற்ற விசித்திரப் பிரச்னைகளை நான் இங்கே ஆராய்வது சாத்தியமில்லை. இந்த இதரப் பிரச்னைகளைப்பற்றி என்ன அபிப்பிராயபேதமிருப்பினும், 77, 78-ஆவது சுலோகங்களைப் பற்றித் தான் சொன்ன அபிப்பிராயத்தை யாவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டுமென்று வீராவேசம் கூறுகிறார். ஆகையால், 77, 78-வது சுலோகங்களைப்பற்றி அவர்சொல்லும் கக்ஷியின் கதி இப்படியானால் மற்றவையைப் பற்றிச் சொல்லவும் வேணுமோ! இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தை சொல்லத்தான்

வேண்டியிருக்கிறது. 'ரகுவம்சம்' முதல் ஸர்க்கத்திலேயே 89-91 சுலோகங்களும் காளிதாஸன் எழுதவில்லையென்கிறார் குஞ்ஜன்ராஜா. இந்த சுலோகங்களில், விதிப்படி அரசனும் அவன் பட்டமஹிஷியும் நந்தினியை சுச்ரூஷை பண்ணிப் பலனடையும் பொருட்டு, வஸிஷ்டர் பசு மேயப் போகும் போது திலீபன் அதை எப்படிப் பின்தொடர வேண்டும் என்று விவரிக்கிறார். "அவள் நடக்கும்போது நீயும் நட; அவள் தங்கினால் நீயும் தங்கு; அவள் படுத்தால் நீயும் இளைப்பாறு; அவள் தண்ணீரைப் பருகினால் நீயும் தாகத்திற்குச் சாப்பிடு" என்றுசொல்லி, பின்னும் பட்ட மஹிஷி பசு வீடு சேர்ந்ததும் எவ்விதம் உபசரிப்பது என்றும் கூறுகிறார். குஞ்ஜன்ராஜா, "இந்த விவரங்களெல்லாம் சொல்லி வஸிஷ்டரா வீண்பொழுது போக்கக்கூடியவர்? இந்தப் பிரமாத காரியத்தை செய்வதற்குச் சக்கரவர்த்திக்கு சொல்லிக் கொடுக்க வேணுமோ? காளிதாஸன் இப்படி அநாகரிகமாயும் அநாவசியமாயுமுள்ள விஷயங்களைப் புகுத்தி யிருக்கவேமாட்டார். 'குமார ஸம்பவ'த்தில் இந்திரன் மன்மதனைப் பரமசிவன் பேரில் புஷ்ப பாணத்தைப் போடும்படி ஏவும் தருணத்தைக் கவி எவ்வளவு உசிதமாயும் சுருக்கமாயும் சொல்லியிருக்கிறார். இந்திரன் காமனை, 'நீ இங்கேயிருந்து கிளம்பு, இவ்வளவு அம்புகளை எடுத்துச் செல்லு, இப்படியடி' யென்றெல்லாமா சொல்லுகிறான்? இல்லையில்லை. காமனைப் பார்த்து, 'உன்னால் பெரிய காரியமாகவேணு' மென்கிறான். காமன், (உத்திரவு), என்று சொல்லி உடனே தன் வேலையைக் கவனிக்கிறான். இவ்விதம் இங்கிதத்தின் அழகை யுணர்த்திய கவி ராஜாவுக்கு மாடு மேய்ப்பதெப்படியென்று வஸிஷ்டர் பாடம் கற்பித்ததாகச் சொல்லி 3 சுலோகம் எழுதியிருப்பாரா? ஒருநாளும் எழுதியிருக்கமாட்டார்" என்று கக்ஷி சொல்லுகிறார். ஒரு சிறிய விஷயத்தை மறந்துவிட்டார் போலும். காமனுக்குப் புஷ்ப பாணம் போடுவது அவன் தொழில், பிறர் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமல்ல. திலீபனுக்கோ இடையன் தொழில் முற்றிலும் புதிதே! தவிர, வஸிஷ்டர் இடையன் மேய்ப்பதுபோல் மாட்டை மேய்ப்பதற்காக அவனை ஏவவில்லை. சாப விமோசனத்திற்குச் சாதனமான ஒரு விரதமாய் அதை விதித்தபடியால், அந்த விரதத்திற்குள்ள நியமத்தையும் தெரியப்படுத்துகிறார். இது அவர் வார்த்தைகளாலேயே விளங்கும். கேவலம் இடையர்கள் மாடுகள் படுத்தால் படுத்திருக்கலாம், நடந்தால் பின்தொடர்ந்தாலும் பின்தொடரலாம். மாடு தண்ணீர் குடித்தாலன்றித் தாம் குடிப்பதில்லையென்று விரதம் இருப்பது யாருக்காவது தெரியுமோ?

மகாகவிகளின் கருத்தைக் காண்பது சாதாரண காரியமல்ல. 'ச்ரோதம் அநஸூயயா' என்று வால்மீகி பகவான் சொன்ன ஆணித்தரமான வார்த்தையைச் சிரமேற்கொண்டு, அஹங்கார மமகாரமில்லாமலும், எல்லா விசாரங்களிலும் பிறர் போகாத வழியே மேலான வழி என்ற ஏமாற்றமடையாமலும், மேல்நாட்டு ஆராய்ச்சி முறைகளிலுள்ள மோஹத்தால் தலைமுறை தத்துவமாய் ஸஹ்ருதயர்பரம்பரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களும் நமது சிற்றறிவுக் கெட்டாவிட்டால் நிராகரிக்கப்பட வேண்டுமென்றெண்ணாமலும் யார் மகாகவிகளை ஸேவிக்கிறார்களோ அவர்களே பயனடைவார்கள்.

# புதிய பீதி

[கே. எம். முன்ஷி]

அகண்ட ஹிந்துஸ்தானுக்கு நான் பலம் திரட்டிக்கொண்டு வருவது பீதியினல் அன்று. நம் நாட்டின் க்ஷேமத்தை நாசம் செய்ய இருக்கும் ஒரு பெரிய பயத்தை எல்லோருக்கும் அறிவிக்கத்தான் இம் முயற்சி.

பிரிட்டிஷ்காரர்கள் இந்திய மண்ணில் கால் வைக்குமுன், முற்றிலும் மாருன கொள்கைகளோடு கூடிய மதஸ்தர்களான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் எவ்வித சண்டை சச்சரவுமன்றி சகோதரர்களாய் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்.

முதலாவதாக, நாட்டில் அரசியல் காரியங்களையெல்லாம் மதத்துடன் சம்பந்தப் படுத்தாமல் இருந்தது. ஹிந்துக்களுடனும் தக்ஷிண பீடபூமியை ஆண்ட முஸ்லிம் அரசர்களுடனும் அடிக்கடி சண்டையிட்டு வந்த ஒளரங்கசீப் இதற்கு விலக்கு. கிழக்கு இந்தியக்கம்பெனியார் மண்ணாசை கொண்டு சிற்றரசர்களுடன் சண்டையிட்ட பொழுது ஹிந்துக்கள் ஹிந்துக்களை எதிர்த்தும், முஸ்லிம்கள் முஸ்லிம்களை எதிர்த்தும் போரிட்டனர். 1857-ல் நடந்த சிப்பாய் கலகத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மொகல் சக்ரவர்த்தியின் தலைமையின் கீழ், நாட்டின் சுதந்திரத்துக்காக பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்துப் போராடினர்கள்.

இரண்டாவதாக, சமூக வியவகாரங்களில் இரு மதஸ்தர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். ஹிந்து, முஸ்லிம் மதத்துக்கு மரியாதை செய்தான்; முஸ்லிம், ஹிந்து மதத்துக்கு மரியாதை செய்தான். அந்தக் காலத்தில் மசூதிக்கு முன்பு மேளம் வாசிப்பதை எவரும் தடுக்கவில்லை. அந்தந்த இராஜதானி பாஷை தான் அவ்விருவர்களுடைய தாய்ப் பாஷை.

மூன்ருவதாக, ஒவ்வொரு இராஜதானியிலும், ஒரு வகுப்பிலுள்ள எல்லா மதஸ்தர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். பஞ்சாபிலுள்ள ஜாட் ஹிந்து, ஜாட் முஸ்லிம் ஜாட் சீக்கர்களிடம் அதிக உறவு பாராட்டினன். அதே உறவு தமிழ் நாட்டு ஹிந்துவுடன் பாராட்டுவான வென்பது சந்தேகந்தான்.

நான்காவதாக, சமயக் கோட்பாடுகளும், கூட்டுக் குடும்பமும் இரு மதஸ்தர்களிடமும் காணப் பட்டது.

ஐந்தாவதாக, ஒரு மதத்தினர் மற்ற மதத்தினருடைய கொள்கைகளை அப்யசித்து வந்ததனல் எவ்வித மத எதிர்ப்புக்கும் இடமில்லாமல் இருந்தது. சைதன்யரிடம் அநேக மகமதிய சிஷ்யர்கள் இருந்தனர். ஹிந்துமுஸ்லிம் ஐக்கியத்துக்கு கபீர்தாஸ் அஸ்திவாரமாக இருந்தார். தயால் பவனும், ஜமாலி சுல்தானும் அத்யந்த நண்பர்களாய் இருந்தனர். இப்பொழுதும் அவர்களுடைய சமாதிகளை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேவை செய்து வருகின்றனர். பாவா ஷஹாஜ வென்ற ஹிந்து மஹான் ஒரு முஸ்லிம் குருவினுடைய சிஷ்யர்.

ஆருவதாக, முஸ்லிம் ஆட்சியில் மத மாறுதல் இருந்தும், இந்தியர்கள் ஒரே இனத்தினர்களாய் இருந்ததால், அவர்களுடைய பொருளாதாரத்தில் ஒற்றுமை காணப்பட்டது.

1857-ல் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியா முழுமையும் பிடித்துக் கொண்டதும், சுதந்திரத்துக்காக இரு மதத்தினர்களும் ஒன்றுசேர்ந்து பொது எதிரியை எதிர்த்துப் போராடினர்கள். அச் சுதந்திரப் போரில் இருவர்களுடைய ரத்தமும் ஒன்ருய்க் கலந்தோடியது. அதற்குப் பிறகும் பொது எதிரியான பிரிட்டனை எதிர்க்க இருவரும் கூடினர்கள். இதன் முடிவுதான் இந்திய தேசீய சபை.

1857-ல் பிரிட்டன் சீக்கர்களின் உதவியினல் ஹிந்துக்களையும், மகமதியர்களை

யும் அடக்கி அவர்களிடமிருந்த ஆதிக்கத்தைப் பிடுங்கிக் கொண்டது. பின்பு நாட்டில் சமாதானம் நிலவியதும், அதிகாரத்திலும், பொருளாதாரத்திலும் வெற்றிபெற ஒவ்வொரு வகுப்பினரும் முயன்றனர்.

நாட்டில் பெரும்பான்மையான ஹிந்துக்கள் கல்வி கற்றும், தனம் படைத்தும் இருந்ததனுல் அவர்களே இம்முயற்சியில் வெற்றிபெற்றனர். இதைக்கண்டு சகிக்காத பிரிட்டிஷார்கள் மகமதியர்களைக் கிண்டிவிட ஆரம்பித்தனர். ஹிந்துக்களின் நன்மைக்கு எதிராக மற்றும் பல காரியங்களை ஒளிமறைவின்றி அரசாங்கத்தார் செய்யலாயினர்.

இதன் விளைவாகத் தனித் தொகுதி வேண்டுமென மகமதியர்கள் கிளர்ச்சி செய்யஆரம்பித்தனர். இதை அங்கீகரித்து 1909-ல் பிரிட்டிஷார் மகமதியர்களுக்குத் தனித் தொகுதியைக் கொடுத்தனர். தேசிய 'ஒற்றுமையைக் குலைத்துவிடு மென்று, சையத் ஹாஸான் இமாம்,ஜின்னு முதலியவர்கள் இதை எதிர்த்தனர்.

இதனுல் மகமதியர்கள், மதத்தில் மட்டும் சிறுபான்மையர்களல்லர், அரசியலிலும் சிறுபான்மையர்கள் என ஒப்புக் கொள்ளப்பட்டது. இதிலிருந்து பிரிட்டிஷார் மகமதியர்களுடைய முன்னேற்றத்தில் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தனர். முஸ்லிம்களுடைய வேண்டுகோட்களுக் கெல்லாம் அரசாங்கம் ததாஸ்து போட ஆரம்பித்தது. இதன் விளைவாக நாட்டில் எங்கும் வகுப்புக் கலகங்கள் வளர ஆரம்பித்தன. பிரிட்டிஷ் அரசாங்கம் முதலிலிருந்தே ஹிந்துக்களை, தேசிய மஹா சபையான காங்கிரஸையும் எதிர்த்துக் காரியங்களைச் செய்து கொண்டே வந்தது.

இவ்வளவு செய்தும் முஸ்லிம் தலைவர்கள் திருப்தியடையவில்லை. இந்திய விடுதலைக்கு நாங்கள் பாடுபட வேண்டுமானுல் மற்றும் பதினுன்கு வேண்டுகோட்களை நிறைவேற்ற வேண்டுமென்று கூறினுர்கள். அதில் முக்கியமானவைகள் :

1. முதலிலேயே ஆறு மாகாணங்களில் முஸ்லிம்களுக்காக ஏற்படுத்தப் பட்ட இடங்களை நிரந்தரமாக்க வேண்டும்.

2. எக்காலத்திலும் மாறக்கூடாத மெஜாரிட்டி வங்காளத்திலும், பஞ்சாபிலும் இருக்கவேண்டும்.

3. மாகாணங்கள் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் சரி சமானமாக இருக்க, ஸிந்து, தென்மேற்கு எல்லை மாகாணம் என்ற இரு மாகாணங்களையும் சிருஷ்டி செய்யவேண்டும்.

இதை எல்லோரும் எதிர்த்தனர். ஆனுல் பிரிட்டிஷார் முஸ்லிம்களை கையில் போட்டுக்கொள்ள இம்மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றினுர்கள். தேசியவாதிகளும், ஹிந்துக்களும் கூட்டுத் தொகுதிகூடப் பெறக்கூடாதபடி அரசாங்கத்தார் செய்துவிட்டனர்.

காலம் செல்லச் செல்ல முஸ்லிம்கள் 'தாங்கள் சிறுபான்மையினர்' என்று கூறிக்கொள்வதும் சென்று இப்பொழுது அவர்கள் 'பெரும்பான்மையினர்' என்று சொல்லிக்கொள்ளவும் ஆரம்பித்துவிட்டனர்.

ஒவ்வொரு மாகாணங்களிலும் முஸ்லிம்களின் அதிகாரம் தலை தூக்க ஆரம்பித்தது. எம் மாகாணங்களில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருக்கின்றனரோ, அம் மாகாணங்களிலெல்லாம் அவர்களுக்கு அதிக சலுகை காட்டவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர்.

1. முஸ்லிம்களுடைய நாகரிகத்தை அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். பசு பலி நிறைவேற அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

2. "வந்தே மாதரம்" பாடக்கூடாது. காங்கிரஸின் மூவர்ணக்கொடியை நிராகரிக்கவேண்டும், அல்லது முஸ்லிம்லீக் கொடியையும் தேசீயக் கொடிக்குச் சரி சமானமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. இந்திய முஸ்லிம்களை யெல்லாம் காப்பாற்றும் கட்சி முஸ்லிம்லீக் ஒன்று தான் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு மாகாணங்களிலும் கூட்டு மந்திரிசபை ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும்.

இந் நான்கும் முஸ்லிம்லீக்கின் கோரிக்கைகள். ஆனல் இவைகளை தேசிய வாதிகளும், ஹிந்துக்களு மட்டுமன்றி முஸ்லிம்களும் எதிர்க்க ஆரம்பித்தனர்.

1939-ல் லீக்கின் கோரிக்கைகள் அதிகமாயின.

1. சட்ட சபைகளிலும், வேலைகளிலும் முஸ்லிம்களுக்கு 50 சத விகிதம் வேண்டும்.

2. உர்துவை தேசீய பாஷையாக ஒப்புக்கொள்ளவேண்டும். இந்திய நாட்டின் முப்பதுகோடி மக்களின் தேவ பாஷையான சம்ஸ்கிருதத்தில் ஒரு வார்த்தை கூட நாட்டில் நடமாடக்கூடாது. 4·40 சத விகிதம் முஸ்லிம்கள் இருக்கும் மத்திய மாகாணத்தில் கூட "வித்தியா மந்திரம்" என்ற வார்த்தை உபயோகப் படுத்தக் கூடாதாம். ஒவ்வொரு முஸ்லிம் சிறுவனும் உர்துவைத் தவிர்த்து வேறு பாஷையை வாசிக்கக் கூடாது.

இவ்விதமாக சிற்சில பிற்போக்காயுள்ள தலைவர்கள் ஹிந்துவுக்கும், முஸ்லிமுக்கும் இடையில் ஓர் பெரிய பிளவு உண்டாக்கி, ஒருவித சமரசத்துக்கும் வரவொட்டாதபடி அடித்துவிட்டனர்.

கடைசியாக பாகிஸ்தான் பிறந்தது. இதை சிருஷ்டித்தவர்கள் காந்திஜியை ஹிந்துக்களின் தலைவர் எனக் கூற ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் இனிமேல் அரசியல் சிறுபான்மையினரல்லர். ஆனல் அவர்கள் ஒரு தனி தேசத்தவர்களாய் விட்டனர். காங்கிரஸோ ஹிந்து தேசத்துக்குத் தான் தேசீய மஹா சபை!

கடைசியாக லீகர்கள் 1940ல் இந்தியாவையே ஆள்வதற்குப் பிரயத்தனம் செய்தார்கள். காங்கிரஸ் மந்திரி சபை கூட்டினல் எல்லா சபைகளிலும் முஸ்லிம்களுக்கு 50 சதவிகிதம் சலுகை காட்ட வேண்டும். காங்கிரஸ் மந்திரி சபை கூட்டாவிட்டால் பெரும்பான்மையாக முஸ்லிம்களுக்குத் தான் சலுகை காட்ட வேண்டும். இதற்குப் பிறகு அரசாங்கத்தில், எக்காலத்திலும், எக்காரணத்தை முன்னிட்டும் எவ்வித மாறுதலும் ஏற்படுத்தக் கூடாது.

தேசியம் இவ்விதமாக அழியவேண்டியது; ஹிந்துக்கள் கைகட்டிக்கொண்டு சேவகம் புரியவேண்டியது; ஆங்கிலேயர்களும் முஸ்லிம்களும் அதிகாரம் செலுத்த வேண்டியது!

முஸ்லிம்கள் தாங்கள் 'சிறுபான்மையினர்' என்று கூறிக்கொண்டிருந்த காலம் போக இப்பொழுது 'பெரும்பான்மையினர்' எனச் சொல்லிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். படிப்படியாக எல்லாச் சலுகைகளும் பெற்றுவிட்ட பின்பும், நாட்டை ஆள அஸ்திவாரமும் போட ஆரம்பிக்கின்றனர். அத்துடன் மட்டுமன்றி ஹிந்துக்களையே சிறுபான்மையினராக்கவும் பார்க்கின்றனர்.

முஸ்லிம்கள் தற்சமயம் இருக்கும் மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றாலும், அவ்விதம் அமைத்த மாகாணங்களில் அவர்கள் அதிகசலுகைவேண்டுமெனக் கேட்டாலும், அவர்கள் தங்களுடைய நாகரிகத்துக்கும், மதத்துக்கும் போதிய பாதுகாப்பு வேண்டுமென்றாலும், அவர்கள் கோரிக்கைகளை எவரும் நிராகரிக்கப் போவதில்லை.

ஆனல் இப்பொழுது அவர்கள் கேட்பதோ நாட்டிற்கும், நாட்டிலுள்ள மக்களுக்கும் (முஸ்லிம்கள் உள்பட) பெரிய நாசத்தை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை. இப்பயம் இருந்துகொண்டே வருமானல் நாட்டில் கலகம் அதிகமாகி, சமாதான வாழ்க்கை குலைந்துவிடும்.

இப்பீதி எவ்விதமிருந்தாலும் அதைச் சாதுர்யமாக எதிர்க்கவேண்டும். அகண்ட ஹிந்துஸ்தான் என்றும் வாழ்க.

—ஸோஷல் வெல்பேர்

# ஜடாதரன்

த 11189

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

மொழிபெயர்த்தவர்:
கு. ப. ராஜகோபாலன்

உண்மையான திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர் யார் என்றால் ஜடாதரனைத் தான் சொல்லவேண்டும். 'கும்பினி' யாரிடமிருந்து இந்தியா ஆங்கில அரசாட்சிக்குக் கை மாறினதற்குக் காரணமான சிப்பாய் கலகம் நடந்தபோதுதான் அவன் பிறந்தான். அதனால் அவன் வாழ்க்கை எவ்விதமாகவும் மாறுதல் அடையவில்லை; என்றாலும் அவன் ஜனன காலமும் இந்தியாவில் ஆங்கில அரசாட்சி ஆரம்பமான காலமும் ஒத்திருந்தது ஒரு விசேஷம்தானே ?

சூரியனே அஸ்தமானமாகாத ஒரு சாம்ராஜ்யத்தின் பிரஜையாக அவன் தோன்றினான் என்ற சுப சூசகமிருந்தாலும் அவன் தாயார் என்னமோ அவனுக்கு அதன் கீழ் பெயரும் புகழும் பெருக வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கவில்லை—தன் குழந்தை தீர்க்காயுளாய் இருந்தால் போதும் என்றது ஒன்றுதான் அவள் பிரார்த்தனை. பயங்கரமான சிசு மரணம் தாண்டவமாடும் இந்த நாட்டில் அவள் பெற்ற பதினொரு குழந்தைகளுக்குள் அவன்தான் மிச்சம்; பாலும் தேனும் பெருகி வழியும் இந்தப் பாரத வர்ஷத்தில் சிசுக்களுக்கு உணவுதானா இல்லை? "மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்" என்ற நம்பிக்கை தாய் உள்ளத்தில் சளைக்காமல் இருக்கிறது. ஜடாதரனுடைய தாயார் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை.

காக்கழனி என்று அழகிய சிறு கிராமத்தில் இருபத்தைந்தே வீடுகள்தான்; ஜடாதரன் குடும்பம்தான் அங்கே மிகவும் கை ஓய்ந்தது. அந்த இருபத்தைந்து வீட்டாரும் தமிழ்ப் பிராமணர்கள் என்றாலும் அவர்களுக்குள் மூன்று உட்பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு க்ஷேத்திரத்தாரும் தாம் தான் மேலானவரென்று சாதித்தார்கள். பொழுது போகாத வேளையில் தர்க்க வாதங்கள் செய்வதற்கு இது ஒரு ரஸமான விஷயமாக இருந்தது.

பெயர்போன கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்தவன் ஜடாதரன். விடாப்பிடியாக முனைந்து விசுவாமித்திர அரசன் கௌசிக ரிஷியானார். முயற்சியாலும் தவவலிமையாலும் ஒருவர் ஜாதியில் உயர்வு பெறலாம் என்பதற்கு அவர் ஒரு நிகரற்ற உதாரணம். பிரஜோத்பத்தி விஷயத்தில் கௌசிக கோத்திரம் ஒரு முதல்தரமான பரீட்சைக் கூடம். வேறொன்றும் இல்லாவிட்டாலும் குடும்ப சங்கியையில் அது மற்றெல்லா கோத்திரங்களுக்கும் பேர் போனது; பாரத்வாஜ கோத்திரத்தை வேண்டுமானால் அதற்குக் கொஞ்சம் உயர்வாகச்சொல்லலாம். கௌசிக கோத்திரம் புத்தி கூர்மைக்கும், தத்வஞானத்திற்கும், உழைப்பிற்கும் பேர் போனது. உபயோகமற்ற சுயேச்சைத் தன்மை, லௌகிகத்திற்கு உதவாத குணம், கூர்ந்து அறியும் சக்தி, எதிலும் நம்பிக்கை வைக்காத சுபாவம், வீட்டில் வெற்றி, வெளியில் தோல்வி, வாழ்க்கை பூராவும் நல்ல தசையிலோ கெட்ட தசையிலோ வரவு செலவைச் சரிக்கட்டாத தன்மை—இதெல்லாம் பொதுவாக அந்த கோத்திரத்தின் தனிப் பெருமை. ஜடாதரனுக்கும் கோத்திரப் பரம்பரையாக மேற்சொன்ன எல்லா குணங்களும் ஏற்பட்டிருந்தன. அதிலும் கடைசியாகச் சொன்ன சாமர்த்தியம் தலை சிறந்து விளங்கிற்று. ஆனால், பரம்பரை வெற்றியை நிலைநாட்டக்கூட நான் கதையை முந்திக்கொள்ளக் கூடாது.

ஹிந்து குடும்ப வழக்கப்படி தாயாரைப் பெற்ற பாட்டனார் வீட்டில்தான் ஜடாதரன் உலகத்திற்குள் பிரவேசித்தான். அவர் ஒரு பெயர்போன ஜோதிஷர். அவருடைய தொழில் வலுத்து

இருந்த நாட்களில் பிருகத் ஜாதகத்தையே ஒப்பிக்கும் சக்திவாய்ந்தவர்! ஏதோ சுமாராக நடக்கும் என்று அரைமனதுடன் நல்லது சொல்லும் ஜோஸ்யத்திற்காகக்கூட அவருக்கு அவ்வளவு பெயர் கிடையாது; கெட்டதைப்பற்றி அவர் என்னென்ன சொன்னாரோ அவை பலிக்காமல் போனதே கிடையாது. எனவே அவரைக் கண்டாலே ஜனங்களுக்குத் திகில். ஜோதிஷ அறிவால் மிதமிஞ்சிப்போன அவர் முகமே பார்க்கச் சகியாது. அதிலிருந்து அம்மை வடுக்களும், கெட்ட தசையைப் பற்றி கோட்பாடு கூறும் கோரத்தை இன்னும் கொஞ்சம் அதிகப் படுத்தின. எல்லா இயற்கைச் சக்திகளைப் போல அவரும் தூண்டப்பட்டு விட்டால் ஒரு பிரளயம்தான்! அவர் முகத்தில் ஒரு புன்னகையோ வாயில் ஒரு நல்லவார்த்தையோ வரும் என்று கிராமமே கரணம் போட்டாலும் நடக்காது. ஆனால் அதெல்லாம் பழைய கதை. இப்பொழுது அவர் திண்ணைக் கோடியில் தொலையாது மடிந்துகொண்டிருந்தார்—வெய்யிலுக்கும் மழைக்கும் அவருக்கு மறைவாக இருக்கும் பாவனையான தென்னந்தட்டி. கிரஹசாரம் பிடித்த இந்த உலகத்திலிருந்து வெளியேற மெதுவாக முனைந்து கொண்டு இருந்தார். நல்லெண்ணம் கொண்ட அந்த முயற்சி வீட்டாரின் கவனக்குறைவால் வெகு துரிதப்பட்டுத்தான் வந்தது.

ஆனால் ஜடாதரன் கிளப்பிய குழந்தைக் குரல் கிழவர் காதில் பட்டது. சுத்தமும் சூதுமான மனிதக்குரல்போல இல்லை அது. கவலை, கபடற்ற பக்ஷிகளின் குரல் போல் இருந்தது. வீட்டில் ஒரே உற்சாகம். ஆண் குழந்தை என்று கிழவரிடம் வேலைக்காரி வந்து சொன்னாள். கிழவருக்குப் பாலியம் திரும்பினதுபோலாகிவிட்டது. பீறிட்டுவரும் பேரன் குரல், கிழவயதின் காய கல்ப மல்லவா? தலையணை கீழ் இருந்த ப்ஞ்சாங்கத்தையும் சுவடிக் கட்டையும் எடுத்தார். பல வருஷங்களாக பிரயோஜனமாகவும் துஷ்பிரயோஜனமாகவும் கையாண்ட சுவடிகூட தேய்ந்துபோயிருந்தது. சந்தோஷத்தால் நடுங்கும் கைகளுடனும் கொட்டாத கண்களுடனும் ஜாதகத்தைக் கணித்தார். திண்ணை வாசற் படியண்டை தான் ஒரு காலத்தில் ராஜ்யாதிகாரம் நடத்தின இடத்திற்கு நகர்ந்து போய் உட்கார்ந்தார். நக்ஷத்திரங்களில் மங்கிய ஒளியில் இளமையின் பார்வையில் திடங்கொண்டவர்போல ஜாதக பலனைப் படிக்க ஆரம்பித்தார். தனக்குள் தானே வியாக்கியானம் செய்து கொண்டார்.

"சிரவண நக்ஷத்திரம்; என் குடும்பத்திற்கு இவ்வளவு கியாதியைக் கொடுத்த என் பாட்டனாருக்கும் இதே நக்ஷத்திரம் தான். நக்ஷத்திரங்களிலேயே சிரவணம் தான் சிலாக்கியம். வேத சாஸ்திரக்கியானம் அபாரமாக இருக்கும். இந்தக் குழந்தை அவர் மாதிரியேதான் இருப்பான். முதலில் பண்டிதன், பாஷாக்கியானி. நாலு பாஷைகளில் வல்லவனாக இருப்பான். ராஜாக்களுக்கு மந்திரி!"

சிறிது நேரம் நிறுத்தி ஜாதகத்தைக் கூர்ந்து கவனித்து மறுபடியும் தீர்மானமாகத் தலையை அசைத்து "காக்கழனிக்கே ஒரு கௌரவமாக இருப்பான். சனியும் புதனும் சேர்ந்து லக்னத்திற்கு மூன்றா மிடத்தில் இருக்கிறார்கள்." என்றார்.

ஆனால் கிழவரின் முகத்தில் சட்டென்று ஒரு களங்கம் தோன்றிற்று. "அடா! ஆறா மிடத்திற்கு உடையவனும் எட்டா மிடத்திற்கு உடையவனும் துல்லியமான ராஜ யோகத்தைப் பங்கப் படுத்துகிறார்கள். குழந்தை ஐகோர்ட் ஜட்ஜியாகவோ, கலெக்டராகவோ இருக்கவேண்டியவன் திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயராகத்தான் இருப்பான். சந்திரன் கடகத்தில் தனியாக இருக்கிறான். அவனுக்கு சுக வீக்ஷண்யம் ஒன்றுமே இல்லை."

கிழவர் ஜாதகம் பார்த்த சுவாரஸ்யத்தில் அது தான் பேரன் ஜாதகம் என்பதுகூட மறந்துபோய் வாழ்நாள் பூராவும் உழைத்துச் சேகரித்த ஜோதிஷ ஞானத்தில் லயித்து, சாஸ்திரப் பற்றுள்ள ஆனந்தத்திலும் வேதனையிலும் ஆழ்ந்தார்.

"நல்ல வேளை எட்டா மிடத்தவன் சுத்தமாக இருக்கிறான். பையனுக்கு தீர்

காயுசு! ஆனால் இரண்டா மிடத்தவனுக்குத்தான் எவ்வளவு கோளாறுகள். வீட்டில் பயங்கரமான அம்மை வார்க்கும்—மரணம் ஏற்படும்—எல்லாம் ஒரு மாதத்திற்குள்! பாட்டனார்; நான்—''

உள்ளே இருந்து கோபக்குரல் ஒன்று கேட்டது. அவர் பெண்தான். சுவருக்கு மறுபுறம் அவளுக்கு எல்லாம் கேட்டது. 'கிழத்தை வாயை மூடச் சொல்' என்றாள் அவள். அவளுடைய பெற்ற மனம் தகப்பனாருடைய விபரீதமான சாஸ்திரப் பற்றைக் கண்டு எரிச்சல் கொண்டது.

அவள் சொல்லி வாயை மூடுவதற்குள் நடுத்தர வயதான கைம்பெண் வந்து கிழவர் கையிலிருந்த பஞ்சாங்கத்தைப் பிடுங்கிக்கொண்டு போனாள். வாயும் கையுமாக இருந்த அவள் ஊரில் நடந்த சுபா—சுபம் எல்லாவற்றிலும் ஒரு முக்கியஸ்தியாக இருந்தாள். திருக்காலாக்கியானியை உடனே உளருவாயை மூடச் சொன்னாள். பழையபடி கிழவர் திண்ணை ஓரம் போய் வெடித்த சுவருடனும் மடிந்த தட்டியுடனும் தோழமை கொள்ளலானார்.

ஆனால் குழந்தை ஜடாதரனுடைய அழுகைச் சத்தம் பத்து நாளும் பெரியவரின் காதில் பூரிப்பேற்றியது. பேரன் ஜாதகத்தை அவர் மறக்கவில்லை. தனக்கும் ஆகாயத்தில் பிரகாசித்த நக்ஷத்திரங்களுக்கும், தன்னைக் கிண்டல் செய்துவந்து தொடும் காற்றுக்குமாக அந்த ஜாதகத்தின் பலனைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

புண்ணியாஹவாசன தினத்தைப் பெற்றவள் பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று காலை விடிவதற்கு முன்பே வீட்டில் புண்ணியாஹவாசனத்திற்காக ஏக அமர்க்களம். வாழ்நாள் பூராவும் கிரஹங்களின் கதிகளை ஆராய்ந்து ஆராய்ந்து ஓய்ந்து போனாலும் எண்பத்தைந்தாவது வயதிலும் பேரன் ஜாதகத்தைப் பார்த்த பெரியவர் படுக்கை மேல் மெல்ல விடிவெளிச்சம்பட ஆரம்பித்தது.

குறைந்தது ஐம்பதுவருஷ காலமாக ஒவ்வொரு தினமும் தவறாமல் 'சிவோகம் சிவோகம்' என்ற குரல் அன்று காலை கேட்கவில்லை. காலைக் காற்றில் அந்த மடிந்த தட்டியின் கீத்துக்கூட அசையவில்லை. கிட்டத்தட்ட அவர் வயதான வேலைக்காரி உள்ளேபோய் கிழவர் செய்தியைத் தெரிவித்தாள். ஆமாம்! வாஸ்தவம்தான்! உடனே வீட்டில் கொஞ்ச நேரம் அழுகைக் குரல் கேட்டது. ஊருக்கு செய்தியைத் தெரிவிக்க அது தானே வழக்கப்படி உத்தியோக முறை.

ஆனால் ஜடாதரன் தாயார் நிம்மதியாக மூச்சுவிட்டாள். ஏனென்றால் குடும்பத்திற்கும் தனக்கும் இரண்டு தலைமுறைகளாக ஏற்பட்ட கஷ்டங்களெல்லாம் அவர் தெய்வச் செயல்களை ஜாதகத்தில் கண்டு சொல்லும் குற்றத்தால்தான் என்று அவளுடைய தீர்மானமான அபிப்பிராயம். வீறிட்ட குழந்தையை மார்பில் இருகச் சேர்த்துக்கொண்டு நிம்மதி அடைந்தாள்.

ஆனால் கிழவர் சொன்ன ஜோஸ்யத்தில் முதல்பாகம் பலித்துவிட்டதைக் கண்டு அவளுக்குத் திகில் ஏற்பட்டுவிட்டது.

ஜடாதரன் அழகான குழந்தையாக இருந்தான். நெற்றி விசாலமாகவும் மினுமினுவென்றும் இருந்தது. தலையில் கட்டு மயிர். களங்கமற்ற கண்களில் அப்பொழுதே புத்தி கூர்மையின் ஒளிதென்பட்டன. மூக்கு மெல்லியதாகவும் எடுப்பாகவும் இருந்தது. ஆனால் சிறுத்த முக வாய்க்கட்டை. சமூகத்திலிருந்து பின் வாங்கும் தன்மையையும் தனி யோசனையையும் சூசிப்பித்தன. முகம் தாம்பரம் போல் சிவந்திருந்தது. வீட்டில் அபிப்பிராய பேதத்திற்கு இடமாயிற்று. குழந்தை கறுப்பாக இருப்பான் என்று அத்தை சொன்னாள். ஆனால் தாயாருடன் கூடப் பிறந்தவள் குழந்தைப் பருவத்திலிருக்கும் அந்த நிறம் எப்பொழுதும் வயதானதும் எலுமிச்சம் பழத்தைப்போன்ற நிறமாகும் என்று சாதித்தாள்.

ஆனால் இந்த உட்பிறிவு ஜோஸ்யம் நிர்ணயமாவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. பெரிய ஜோஸ்யம் அதை முறியடித்துவிட்டது. வீட்டில் அம்மை

போட்டி விட்டது. அந்தப் பிறப்பிலும் சாவிலும் ஏற்பட்ட சடங்குகளில் அந்தக் கும்பலில் யாரோ அதைக் கொண்டுவந்து விட்டார்கள். குழந்தை ஜடாதரனுக்கு அம்மை போட்டிற்று. அம்மையின் கொடுமையால் அவன் முகம் முழுவதும் வடுக்கள் தோன்றி நிரந்தரமாக அதை விகாரப்படுத்திவிட்டது.

எனவே ஜோஸ்யத்தின் இரண்டாவது பகுதியும் உண்மையாகிவிட்டது. அந்தக் கிழவரின் அந்திகால நிர்ணயத்தில் பாக்கியும் தானாக நடக்கவேண்டியதுதானே? ஜடாதரன் திண்ணைமேல் தானா ராஜ்ய பாரம் செலுத்துவான்? கிரஹங்களின் தீர்ப்பு அது தானா? கெட்ட பலன்கள் சொல்வதில் கிழவருக்கு இருந்த கொடூர சாமர்த்தியத்தைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கடைசியில் அவரையும் அவருடைய பேரனையுமே இலக்குகளாக்கிவிட்டதே?

ஆனால் காலம் செய்த சிறந்த வைத்தியத்தில் நாளுக்குநாள் ஏற்படும் மாறுதல்களில் நினைவுப் புண்கள் எல்லாம் மாறிப் போய்விடுகின்றன. பெண்ணே கிழவரையும் கிழவரின் ஜோஸ்ய சக்தியையும் மறந்துவிட்டாள். கிழவருடைய 'மரண' வாக்குமூலம் ஜடாதரன் காதுவரை வரவே இல்லை.

## 2

ஜடாதரன் வயது வரவர வெகுகெட்டிக்காரப் பையனானன். துடியாகவும் தீக்ஷண்யமாகவும் இருந்தான். எதையும் கவனித்து ஆராய்ந்துணரும் தன்மை உடையவனாக இருந்தான். கணக்கில் நல்ல தேர்ச்சி; முதலில் இருந்தே ஆங்கிலத்திலும் வான சாஸ்திரத்திலும் அவனுக்கு ருசி ஏற்பட்டது. கும்பகோணத்தில் ஸ்கூலிலும் காலேஜிலும் முதல்தரமாகத் தேறிவந்தான். தஞ்சாவூர் ஜில்லாவில் முதன்முதல் ஆங்கிலம் படித்த சிறுவர்களில் அவன் ஒருவன். நல்ல சர்க்கார் உத்தியோகத்தில் உயர்ந்த பதவியில் இருப்பான் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். போர்டருக்கும் கோபாலராவுக்கும் அவன் மிகவும் அத்தியந்த சிஷ்யன். பாடபுத்தகங்களுக்கு மேல் போனவிஷயங்களை அவர்கள் அவனுக்குக் கற்பித்தார்கள். அவர்களுடைய கவர்ச்சி நிறைந்த தன்மையிலும் தொழிலில் கண்ட ஊக்கமும் அவனுக்கு வாழ்க்கையில் உயர்ந்த படிப்பினையைக் கொடுத்தது. அவன் படிப்பின்மூலம் அந்தப் பெரியார்களின் சேர்க்கையிலும் கல்வி ஆசிரியர் தொழிலிலேயே அவனுக்கு மோகம் ஏற்பட்டது.

அம்மை வடுமுகம்தான் வாழ்க்கை பூராவும் அவனை ஒரு விபரீதமான முறையில் பாதித்தது. ஏன்என்று அவனுக்குத் தெரியாது. பார்ப்பவர்களும் இதரமானவர்களும் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள், என்ன சொல்லுவார்கள், என்ற முறையிலேயே அவன் யோசனைகள் ஓடும். ஆறு என்றால் அவனுக்கு உயிர்— மீனைப்போல! ஆனால், அவன் காவேரியில் குளிக்கிற நேரம்தான் வேதனைநேரம். படித்துறைகளில் சிரித்தும் விளையாடியும், வம்பாடியும் குளிக்கும் இளம்பெண்கள் அவனைப்பற்றி என்ன நினைப்பார்கள்? என்ன சொல்லுவார்கள்?

குழந்தையாக இருந்தபொழுது இருபத்தோருநாள் அவனைத் தொட்டிலில் இட்டு ஆட்டியதேவதை 'மஹாமாரி'— அவனுக்கோர் அழகிய வரம் தந்திருந்தாள்.

தத்துவ ஆராச்சிசெய்யும் மனது! இளமையின் இனியநோத்தில் வெகுவானதை, துக்கமும் விகாரமும் நிறைந்த பலபகற் கனவுகளில் கழித்தான். அதனால் அவன் நிரந்தரமாக சங்கோசமும் வெட்கமும் நிறைந்தவனாகி விட்டான். ஒவ்வொரு அடிக்கும் தேனடை கட்டித்தொங்கும் வாழ்க்கையின் ரோஜாப்பாதையில் செல்ல தனக்கு அனுமதி கிடையாது என்று எண்ணினன். உலகத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் தனக்கில்லை, வாழ்க்கையின் வேடிக்கைகள் இல்லை— இப்படியாக அவன் எண்ணின எண்ணங்கள் ஆற்றில் மலர்களை உள்ளே இழுக்கும் சுழல்களைப் போல அவன் தன்மையை உள்ளத்தின் ஆழங்களுக்குக் கொண்டுபோய் விட்டன.

ஜடாதரன் அப்பொழுதுதான் பி. ஏ. பரீக்ஷைக்கு எழுதி இருந்தான். அவன்

# நிரந்தரமான வெற்றியின்

# அறி குறி

●

சென்ற 33 வருஷங்களில் சொஸைடிக்கு ஏற்பட்டுள்ள விசேஷ அபிவிருத்தியை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன:—

| | | | | |
|---|---|---|---|---|
| அமுலிலுள்ள பாலிஸிகள் | ரூ. | 17 கோடிக்கதிகம் | | |
| ஆயுள் நிதி — | ரூ. | 3 கோடி | 10 லக்ஷத்திற்கதிகம் | |
| மொத்த ஐவேஜுகள் | ரூ. | 3 ,, | 56 ,, | ,, |
| செலுத்தப்பட்ட உரிமைகள் (1907 - 39) | ரூ. | 1 ,, | 97 ,, | ,, |

**நம்பிக்கையான ஊழியத்திற்கு**

**புகழ்பெற்றது.**

●

## ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
## இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா.

சென்னை பிராஞ்சு :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
அரண்மனைக்கார தெரு, சென்னை.

மூன்று முதல்கிளாஸ் பெறுவான் என்று எல்லோரும் எதிர் பார்த்தார்கள். அவனும் மனப்பூர்வமாக நன்றாகஎழுதி இருப்பதாகவே எண்ணி இருந்தான். நண்பர்களும் ஆசிரியர்களும் ஏகமனதாக வாழ்த்துக்கூற கும்பகோணத்தை விட்டு தன் சொந்தக் கிராமமான காக்கழனிக்குப் புறப்பட்டான். பதினைந்து வருஷப்படிப்பின் உழைப்பிற்குப் பிறகு தாயாருடன் நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்பது அவன் ஆவல்.

## 3

ஜனசங்கிய விஷயத்தில் காக்கழனியின் பெருமையைக்கண்டு எந்தக் கிராமமும் பொறாமை கொள்ளலாம். பாரத்வாஜ கோத்திரர்களும் கௌசிக கோத்திரர்களும் தான் அதிகம். பார்க்கப்போனால் வாழ்க்கையின் லக்ஷ்யமே குடும்பவிருத்தி தானே? இரு கோத்திரத்தாரும் அதில் போட்டி போட்டுக்கொண்டு முனைந்தார்கள். பரம்பரைத்தொடர்புக்கேற்ப புதுப்புது வகையிலும் வேற்றுமையிலும் தெருவில் விளையாடின குழந்தைகளின் கணக்கை வருஷாவருஷம் அவர்கள் அதிகரித்துக்கொண்டே வந்தார்கள்.

அந்தத்தடவை முதன் முதலாக ஜடாதரன் தன் கிராமத்தில் கட்டைவண்டியில் வந்திறங்கும் திருப்தியை அளித்துக் கொண்டான். எந்தக்கிராமத்திலுமே அது ஒரு பெரிய நிகழ்ச்சி. காக்கழனியில் அது முன்பின் நடைபெறாத விஷயம். வண்டிச் சத்தமும் மணி ஓசையும் கேட்டதுமே வீடுகளில் இருந்த குழந்தைகளெல்லாம் வெளியே வந்தன. சிறுவர்களும் சிறுமிகளுமாக ஒருசிறியசேனை அவனுக்கு ராஜயோகமாக வரவேற்பளித்தது. அந்த அழகிய காட்சியைக்கண்டு அவன் மனம் உருகி விட்டது. அவ்வளவு அழகிய குழந்தைகள் தங்கள் இளமையை உபயோகமற்ற கிராமவிளையாட்டுகளில் கழித்து வீணாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்தக் குழந்தைகளின் இன்பக் குரல்கள் கற்பித்தகானமுழக்கத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தான். குழைந்தைகளும்குதூகலமாக வாசல்வரை அவனுக்குத்துணை வந்தன.

அவன் வீட்டுத்திண்ணை எப்பொழுதும் போல சுத்தமாகவும் அழகாகவும் இருந்தது. பளிங்குபோல பளபளப்பாகவும் மெதுவாகவும் குளுமையாகவும் இருக்கும்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது அவன் தாயாரே அதை மெருகு கொடுத்துவந்தாள். அந்த உற்சாகமான வரவேற்பில் வீணாகும் அந்தக் காக்ஷியும் அந்நாள் பூராவும் அவனை யோசனையில் ஆழ்த்திவிட்டது. காவேரியிலிருந்து பிரிந்துவரும் வீரசோழன் அந்தக்கிராமத்தில் பாய்ந்து சுற்றிய நிலங்களில் நீரை நிறப்புகிறது. மாலையில் சந்தியா வந்தனத்திற்காக அங்கேபோனான். இரட்டிப்பு பக்தியுடன் செய்து காயத்திரியும்ஆயிரம் தடவை ஜபித்தான். ஒரு அரசமரத் தடியில் உட்கார்ந் திருந்தான்.

பிறைச்சந்திரன் மௌனம் பூண்ட கம்பீரத்துடன் மேற்கே ஒரு மேகத்தின் ஒட்டகக் கழுத்தின் வழியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். வீர சோழன் மெதுவாக முணுமுணுத்து சுழல்கொண்டு சமுத்திரத்தை நோக்கிச் சென்றது. அப்பொழுது தெய்வக் கட்டளையைப் போன்றது ஒரு ஒளி தென்பட்டது. அவன் வாழ்க்கையின் உண்மை சேவையைப் பற்றிக் கடவுள் அவன் காதில் ஏதோ சொல்லிவிட்டார். மறுநாட் காலை குழந்தைகளை எல்லாம் தன் வீட்டிற்கு வரவழைத்தான். திண்ணை தேன்கூடு மாதிரி நிறம்பிற்று. சுமார் ஐம்பது வருஷங்களுக்குக் குழந்தைக ளெல்லோருக்கும் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகியது. ஜடாதரன் ஆசிரியரானான்.

அவன் திண்ணைப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தின ஒரு மாதத்திற் கெல்லாம் போர்டாரிடமிருந்து தந்தி வந்தது. 'அவன் பி. ஏ. பரிக்ஷையில் மூன்று முதல் பாஸ் பெற்றான். ஆங்கிலத்திலும், கணக்கிலும் ராஜதானியிலேயே முதல்! சென்னை சர்க்காரின் தலைமை கார்யாலயத்தில் அவனுக்கு ஒரு உத்தியோகம் கிடைக்குமென்றும்' கண்டிருந்தது. தந்தி பயனற்றுத் திண்ணை ஓரத்தில் 'சருகிலை' போல காற்றில் அலைபட்டது.

## 4

திண்ணைப்பள்ளிக்கூட உபாத்தியாயராக ஜடாதரன் ஐம்பது வருஷ காலம் உழைத்தான். ஆனால் மேல் படிப்பில் மட்டும் ஈடுபட்டே இருந்தான். வான சாஸ்திரம்தான் அவனுக்கு மிகவும் மனத்திற்குகந்த ஆராய்ச்சி. அதன் சம்பந்தமாக புதிதாக வெளியாகும் புஸ்தகங்களை என்ன விலையானாலும் கொடுத்து வாங்கி விடுவான்.

இந்திய சிவில் சர்வீஸ்களின்படி ஐம்பது வருஷங்கள் என்பது பென்ஷன் பெருவதற்கான உத்தியோக காலத் தேவைக்கு இரண்டு மடங்கு! ஆனால் ஜடாதரன் குழந்தைகளின் பெற்றோர்களின் இஷ்டப்பட்டுக் கொடுத்ததை வாங்கிக் கொண்டான். எளிய வாழ்வும் உயரிய நோக்கமும் கொண்டவனாகக் காலம் கழித்தான். அந்த ஐம்பது வருஷ உழைப்பில் அவன் எவ்வளவோ கலெக்டர்களையும், வக்கீல்களையும், ஜட்ஜுகளையும், கிளார்க்குகளையும் உற்பத்தி செய்தான். அவன் தயார் செய்தவர்களில் ஒருவராவது உபாத்தியாயராகவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடத்தைப் பற்றிச் சொல்வானேன்?

பல வருஷங்களுக்குமுன் நான் அவனைச் சந்தித்தபொழுது "என்ன காரணம்?" என்று உண்மையான வருத்தத்துடன் கேட்டேன்.

அவன் முகத்தில் துக்கத்தின் நிழல் தட்டிற்று. கண்கள் கலங்கின.

"எனக்கும் அதுதான் வாழ்க்கையின் பெரிய துக்கமாக இருக்கிறது. என் வேலை என் வரையில் முடிவடைகிறது. பிராப்தம் அவ்வளவுதான். கிரஹங்களின் இஷ்டமே அதெல்லாம். இரண்டு ஒன்பது, பத்தாம் இடத்திற்குடையவர்கள் ஆறு, எட்டு, பதினொன்றும் இடத்தில் சேர்ந்து கொண்டுவிட்டார்கள்."

கொஞ்சம் கனைத்துத் தொண்டையைச் சரிசெய்து கொண்டான். அவன் குரலில் ஒலி ஒரு சோகச் சாயை கொண்டு அவன் உள்ளத்தின் வேர் அடிகளிலிருந்து வருவதுபோல் தென்பட்டது.

"என்னுடைய அம்மை வடு முகம், கலியாணமாகாத என் பிரம்மசார்ய வாழ்க்கை, என்னைப்போல மற்றொருவனை உபாத்தியாயனாக்காத உழைப்பிற்குக் காரணம் நான் பிறந்த வேளையில் கிரஹங்கள் கொண்ட மஹத்தான மாறுதல்கள். என் பாட்டனார் இதை எல்லாம் முன்பே தெரிந்து கொண்டார் என்பது தெரிகிறது. என் காலேஜ் நாட்களில் காதலான வான சாஸ்திரம் இந்த ஜோதிஷத்திற்கு முன் நிற்க முடியாது. சாஸ்திரங்களுக்கெல்லாம் சாஸ்திரம் அது. லய சுத்தமான தன் கானக் குரலை எல்லோரும் கேட்டு ஆனந்திக்க முடியாது. ஆத்ம தியானத்திற்கு அதுதான் முதற் படி. நக்ஷத்திரங்களின் நித்திய நிமிஷ ஒளிதான் அந்தராத்மா ஊரும் ஊர்த்துவப்பாதையில் வழிகாட்டுகிறது. அவற்றின் மெல்லிய ஒலியின் உதவியால் என் குணங்களையே ஒருவாறு தீவிரமாக கட்டமைக்குள்ளாக்கி செப்பனிட்டிருக்கிறேன். திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து கொண்ட சமூகத்தின் வாழ்வின் அஸ்திவாரத்திலேயே என் கர்ம பலனை செய்கையாக மாற்றி விட்டேன். அது எனக்கு உண்மையான அமைதியை அளிக்கிறது. ஆனந்தம் அளிக்கிறது. அதனால் ஏற்படும் சாந்தியை வேறொன்றும் கொடுக்காது."

அவன் கண்ணிமையில் நின்ற கண்ணீர்த் துளியில் நிகரற்ற தூய்மையும் ஆக்கிரகமும் பிரதிபலித்து நின்றன. இலக்கண கியானம், பாஷா கியானம், வான சாஸ்திரக் கியானம் எல்லாம் கூடிய திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர்தான் ஜடாதரன் என்று நான் அது வரை நினைத்திருந்தேன். அவன் பெரிய ஜோதிஷ சாஸ்திர வல்லவன். சிறந்த அத்துவைதி என்று எனக்குத் தெரியாது. அவனை அணுக எனக்கு அருள்புரிய விரும்பினேன்.

## 5

சன்னியாசியான ஜடாதரன் சில மாதங்களுக்கு முன் தான் சித்தி பெற்றார். உண்மை நிரம்பினதும் தன்னல மற்றது

(அடுத்த பக்கம் பார்க்க)

# காசி க்ஷேத்திரம்

[ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்]

மனிதனுடைய அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் அப்பால் மறைந்து கிடக்கும் வஸ்துவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் உயர்வையும், விரித்துக் காண்பிக்கவே கல்வி ஏற்பட்டிருக்கிறது. மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் உபநயனமும் அவனால் கண்டுபிடிக்க ஓர் உயர்ந்த உண்மை யிருக்கிறதென்பதையே வற்புறுத்துகிறது. பரிமாணத்தினாலும், நேரத்தினாலும் ஆக்கப்பட்டிருக்கும் இவ்வுலகில் மனிதனுடைய வாழ்க்கைக்கும் இவ் வுயர்ந்த உண்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. கல்வி கற்பது பிறருக்குச் சொல்லிக்கொடுக்க மட்டுமல்ல; மக்களுக்கு மன்னன் உத்திரவை முடிதனைத்து ஆமோதிக்க வேண்டும் என்று கூறமட்டுமல்ல; ஸ்திரீ புருஷர்கள் அதனால் பிழைப்பு சம்பாதித்து வயிற்றைக் கழுவமட்டுமல்ல. ஆனால் எதற்கு? நாம் போற்றிப் பாதுகாக்க ஓர் மதிப்புள்ள வஸ்து இருக்கிறதென்று அறியவேதான். உலகப் பொதுவான, அழியாத அவ் வஸ்துவின் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள்ளக் கல்வி பயன்படுகிறது. நம் நாடு, அதிலும் காசி இவ்விதமான உயர்ந்த கல்வியின் ஊற்று. உலகத்தையே நேர்பாதையில் செலுத்த நமக்குப் போதிய சக்தி இருக்கிறது. அரசியலிலும், பொருளாதாரத்திலும் நம் நாடு பின்னடைந்திருந்தாலும், இந்தியா உலகத்துக்கு ஓத ஓர் அரிய பெரிய சத்திய வழியை வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியா இன்னும், புராதன காலரிஷிகளைப்போலப் புண்ணிய மஹாத்மாக்களையும், புத்தரைப்போன்ற பல தீர்க்கதரிசிகளையும் சிருஷ்டிக்கிறது. இதே நாட்டில்தான் இவ்விதமான மஹான்கள் பிறக்கின்றனர். உலகத்திற்கு நல்லவழி காட்ட மற்றும் அநேக பிரபுக்களும் எழுகின்றனர். இதன் காரணமாகத்தான் இந்தியாவுக்குப் பழய காலத்திலிருந்து ஓர் தனி மதிப்பு. இம்மதிப்புக்குச் சிறந்த நகரமான காசி க்ஷேத்திரமும் ஒரு காரணமாக விளங்குகிறது. அக் காசி க்ஷேத்திரத்தில் நான் வசிக்கிறேன். ஏனென்றால் நமக்கு மட்டுமன்றி அகில உலகத்திற்கு இது புகட்டும் உண்மையையும் தத்துவத்தையும் நான் நம்புகிறேன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மான உழைப்புத் ததும்பின வாழ்க்கைக்கு அதுதானே தகுந்த முத்தாய்ப்பு. பத்திரிகையில் அவர் மரணத்தை எழுதவில்லை. சமாதியிலும், எந்தக் கண்ணீரும் விழவில்லை. ஆனால், நிர்மலமான ஆகாயத்தில் சூரியன் சாய்ந்து கொண்டிருந்தான். மாலைக்காற்று மெதுவாக ஆற்றைக் கிளரி பக்ஷிகளை மரத்திலிருந்து மரத்திற்கு விரட்டிற்று. காவேரியின் சங்க முகத்திற்குச் சற்று மேல் அது அழகாக வளைந்து சூழ்ந்து வரும் இடத்தில் கரை மேலிருக்கும் மணற்குன்று ஒன்றின் மேல் சமாதி இருக்கிறது. அந்த அழகிய இடத்தில் கரைமேலிருக்கும் அரச மரமொன்று தன் புனித நிழலை நிறப்பி நிற்கிறது. காற்றில் அசைவு கொள்ளும் அதன் இலைகளின் முணு முணுப்பு ஜடாதரனுடைய வாழ்க்கையின் இசை மஹிமையை ஒலிக்கும் மனிதக் குரல்போலவே மாறுகிறது.

# இங்கிலாந்தில் ஆளும் வகுப்பினர்

[ஜியார்ஜ் ஆர்வேல்]

சென்ற எழுபத்தைந்து ஆண்டுகளாக நாம் இங்கிலாந்து தேச சரித்திரத்தைக் கவனித்தால், ஆளும் வகுப்பினரின் சக்தி நாளுக்கு நாள் க்ஷீணித்து வருவதைக் காணலாம்.

இதற்குக்காரணம், இந்த இருபதாவது நூற்றாண்டில் கூட அரச வம்சத்தினர்கள் தங்களுடைய பழைய பழக்க வழக்கங்களைச் சிறிதும் மாற்றாமல் "தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்கள் தான்" என்று பிடிவாதத்துடன் இருந்து வருவதுதான். 1832க்குப்பிறகு மிராசுதாரர்களும், பிரபுக்களும் தங்களுடைய அதிகாரத்தையும், செல்வாக்கையும் சிறிது சிறிதாக இழக்கவேண்டி நேர்ந்தது. ஆனால் முற்றிலும் அக்கூட்டம் உலகில் அழியாதிருக்க, அக்கூட்டத்தார்கள் வியாபார வகுப்பினர்களுடனும், முதலாளி வகுப்பினர்களுடனும் கலியாண சம்பந்தங்கள் செய்து கொள்ள ஆரம்பித்தனர். இச் சம்பந்தம் ஆரம்பித்த சிலவருஷங்களில், ஆளும் வகுப்பினர்களில் அநேக குடும்பங்கள் வியாபாரமும், தொழிலும் ஆரம்பிக்கலாயின. கப்பல் கட்டுபவனும், மில் முதலாளியும் தாங்கள் அரச குடும்பத்திலிருந்து ஜனித்தவர்கள் என்று பெருமையடித்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

மேற் கூறியவாறு ஆளும் வகுப்பினர் க்ஷீணித்துவரவே, சிறிது சாமர்த்தியம் வாய்ந்த ஈடன், ஹாலிபாக்ஸ், முதலியவர்கள் அரசியலில் முன்னேற்ற மடைந்தனர். அவர்கள் சாமர்த்திய சாலிகளாயில்லாவிட்டாலும், "இவர்களைப்போன்ற அரசியல் ஞானிகள் உலகில் எவருமில்லை" என்று உலகில் புகுத்தப்பட்டனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெருத்த முதலாளிகளின் கைக்குள் சென்றதும், நியாயமான அரசியல் மறைந்து விடுகிறது. அவர்கள் ஏகாதிபத்தியத்தின் நடுவில் உட்கார்ந்துகொண்டு வியாபாரத்திலிருந்து வரும் லாபத்தையும், லேவாதேவியில் கிடைக்கும் வட்டியையும் கொண்டு சுக ஜீவனம் பண்ணுகிறார்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் வாழ்க்கை எவ்விதக் குறைவுமின்றி நடந்து வந்தாலும், சாம்ராஜ்யம் அதிக முன்னேற்றம் அடையவில்லை யென்றுதான் கூற வேண்டும். இந்தியா பண்டை காலத்திலேயே உழன்று தூங்கிக் கிடக்கிறது. குடியேற்ற நாடுகளிலோ வெளி நாட்டார்களுக்கு இடமில்லை. சாம்ராஜ்யத்தின் ஹிருதயமான இங்கிலாந்திலோ வரவர ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. மேலும் சிறிய தொழில்கள் பெரிய தொழில்களுடன் கலப்பதால், முதலாளிகளுக்கும் வேலையில்லாமல் போய்விடுகிறது. அவர்கள் செய்யவேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் சம்பளம் வாங்கும் மானேஜர்களும், தொழிலாளிகளும் செய்துவிடுகின்றனர். அநேக தனவந்தர்கள், அவர்களுடைய சொத்தெல்லாம் எங்கு சேமிக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளாமலேயே காலத்தைக் கழித்துக்கொண்டு வருகின்றனர்! அவர்களால் சமூகத்துக்குக் கெடுதலேயொழிய நன்மை இல்லை. அவர்களை, சமூகத்தைச் சிறுகச் சிறுகப் பீடித்து அழிக்கும் தொத்து நோயென்றே கூறலாம்.

1920-ல் இந்நிலைமையை அநேகம் பேர் அறிந்தனர். 1930ல் லட்சக் கணக்கானவர்கள் உண்மையான நிலைமையை அறிந்து கொண்டனர். ஆனால் ஆளும் வகுப்பினர் தங்களால் எவ்வித உபயோகமும் இல்லை யென்று ஒப்புக்கொள்ள முன்வரவில்லை. அவ்விதம் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பார்களானால், தங்களுடைய அந்தஸ்தைத் துறக்கவேண்டி வருமல்லவா?

ஆளும் வகுப்பினர்களுக்கு ஓர் தனி அந்தஸ்தும், மதிப்பும் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் என்று கூறிக் கொள்ள

லாம். தங்களுடைய தேச மக்களின் வயிற்றில் மண்ணை யள்ளிப் போட்டாலும், தாங்கள் பெரிய தேசபக்தர்கள் என்ற பெருமையும் அடித்துக் கொள்ளலாம். சமூக முன்னேற்றத்துக்கு என்ன செய்யலாம் என்று அறிந்துகொள்ள அவர்களால் இயலாவிட்டாலும், தற்சமயம் சமூகம் இருக்கும் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்குச் சாமர்த்தியம் இருக்கிறது.

ஆளும் வகுப்பினருடைய பிற்போக்கு யுத்த முறையைக் கூடத் தடுத்து நிற்கிறது. இருபதாவது நூற்றாண்டில் இதுவரை நடந்த யுத்தங்களிலெல்லாம் இங்கிலாந்து கடைசியில் வெற்றிபெற்றாலும் முதலிலெல்லாம் தோற்றுக்கொண்டுதான் வருகிறது. கடைசியில் வெற்றிபெற, சமூகத்தில் ஒதுக்கிவைக்கப்பட்ட கடைசி வகுப்பினர்கள் அத்தியாவசியமாக வேண்டியிருக்கிறது. உயர்ந்த குடும்பங்களிலிருந்துவரும் பெரிய தலைவர்களெல்லோரும் தற்கால யுத்தத்துக்கு லாயக்கற்றவர்கள் என்று கூறலாம். ஏனென்றால் அவர்களுக்கு, பட்டாக்கத்தி பிடித்த கையினால் துப்பாக்கி பிடிக்க இஷ்டமில்லை; கௌரவக் குறைவு என்றும் நினைக்கிறார்கள். இப்பொழுதுகூட இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பழங்காலத் துப்பாக்கியில்தான் பயிற்சியளிக்கப்படுகிறது. அந்த ஆயுதத்தையோ இக்காலத்தில் தகரடப்பா திறப்பதற்குத்தான் உபயோகப் படுத்துகிறார்கள். ஆகாயப்படையும், கப்பற்படையும் வெற்றிமேல் வெற்றி பெருவது ஏன் என்றால், அவ்விருபடைகளும் ஆளும் வகுப்பினர் கைக்குள் இல்லாமலிருப்பதுதான்காரணம். ஆளும்வகுப்பினர், நாஜியர்களைவிட எல்லாவிதங்களிலும் ஒழுங்கானவர்கள் என்று கூறலாம். ஆனால் நாஜியர்களுடைய எதிர்ப்பை இவர்களால் சமாளிக்க முடியுமா வென்பதுதான் சந்தேகம்.

சைமன், ஹோர், சேம்பர்லின் முதலியவர்கள் ஹிட்லருடன் ஒருவித சமாதானத்துக்குவர ஆசைப்பட்டார்கள். அதற்கு முயற்சியும் செய்துகொண்டு வந்தனர். ஆனால் அவர்கள் எண்ணியபடி சமாதானம் ஏற்படுத்த வேண்டுமானால், சாம்ராஜ்யத்தைச் சிதைத்துத் தங்களுடைய நாட்டினர்களையே அடிமைகளாக விற்கவேண்டியதுதான். ஆனால் இதுவரை இங்கிலாந்து அந்தஸ்திதிக்குவரவில்லை. ஆங்கிலேயர்களிடம் காணப்படும் ஒற்றுமைதான் இப்பேராபத்தை வரவொட்டாமல் தடுக்கிறது.

ஆளும் வகுப்பினரோ இந்த ஈனமான காரியத்தைச் செய்யப் பின் வாங்குவார்கள். யுத்தம் வந்தால் அவர்கள் எதிர்த்து நின்று போராடி மடிவார்களே தவிர தேசத்தைக்காட்டிக் கொடுக்கமாட்டார்கள். அவர்களைத் துரோகிகளென்றும், பயங்காளிகள் என்றும் கூற முடியாது. ஆனால் அவர்கள் அசட்டுத்தனமான காரியங்களைச் செய்வதில் சமர்த்தர்கள். ஏதாவது ஓர் பெரிய தேசத் துரோகம் செய்தால் கூட அதை அவர்கள் மனமறிந்து செய்தார்கள் என்று கூறமுடியாது. தப்பு செய்வது அவர்களுக்கு இயற்கை. அவர்களை, நல்லனவற்றைப் பிறரிடமிருந்து கிரஹிக்கும் சக்தியற்றவர்களென்று தான் கூறவேண்டும்.

—"லைன் அண்டு தி யுனிகார்ன்"



# கவிச் சக்கரவர்த்தி ரவீந்திரநாத தாகூர்

[ஆர். ராமசாமி, மாயவரம்]

பழைய காலத்திலிருந்தே நம் இந்தியாவில் அநேக மஹான்கள் தோன்றியிருக்கின்றனர். அவர்களில் நம் ரவீந்திரரும் ஒருவர். தற்காலத்தில் ஒருவரிடத்திலே ஸாதுத் தன்மையும், கவித் தன்மையும் காண்பதரிது. ஆனால் காலஞ்சென்ற தாகூர் அவ்விரு அரிய குணங்களோடும் கூடியிருந்தார்.

ரவீந்திரநாதர் வங்காளத்திலிருந்த ஒரு பழைமையான கீர்த்திவாய்ந்த குடும்பத்தில் கி. பி. 1861-ல் அவதரித்தார். இவ் வமிசத்தில் பெரிய பெரிய மஹான்களும் ஸாதுக்களும் தோன்றி யிருக்கின்றனர். ரவீந்திர நாதரின் தகப்பனரான மஹரிஷி தேவேந்திரரும் ஒரு பெரிய மஹானாகக் கருதப்பட்டார். இவருடைய சாந்தி, தயை, பொருமை, தர்ம ஞானம் முதலிய உயரிய குணங்களைக் கண்டு ஜனங்கள் இவரை தற்காலத்திலும் மஹரிஷி என அழைத்தனர். நம் ரவீந்திரரின் தாயாரும் இந்த ஸத்வ குணங்களோடு கூடியவர். நற்குணமுள்ள தாய் தந்தையரின் குணங்கள் இளமையிலிருந்தே ரவீந்திரரிடம் காணப்பட்டன. ஆனால் பூஜிக்கத்தகுந்த அவருடைய தாயாரின் மடியில் அதிக நாள் விளையாடும் பாக்கியம் அவருக்குக் கிட்டவில்லை. அவருடைய இளமைப் பருவத்திலேயே அவருடைய தாயார் இறந்தார். பிதா தேவேந்திரர் பரோபகாரம், தர்மப் பிரசாரம், ஈஸ்வர சிந்தனை இவைகளில் மூழ்கியிருந்தார். ஆகையால் ரவீந்திரரின் இளமைப்பருவம் அதிகமாக இயற்கை யன்னையின் மடியிலேயே கழிந்தது.

ஆகையினாலேயே இவருக்கு இளமையிலிருந்தே ஏகாந்தவாஸத்தில் பிரியம் ஏற்பட்டது. ஒருசமயம் ஒரு ஆங்கில நண்பருடன் பேசிக் கொண்டிருக்கும்போது தன் இளமைப் பருவத்தைப்பற்றி அவர் சொன்னதாவது:—

“என் இளமைப் பருவத்திய முக்கியமான விஷயம் நான் ஏகாந்தத்தில் பிரியம் கொண்டதுதான். நான் என் தகப்பனரை மிகவும் அபூர்வமாகத்தான் சந்திப்பேன். ஒரு கைதி சிறையில் சிப்பாய்களின் பாதுகாப்பில் இருப்பதுபோல் நான் என் வீட்டில் இருந்து வந்தேன். நான் அதிகமாக என் அறையிலேயே இருப்பது வழக்கம். என் அறைக்கு வெளியில் உலகில் நடக்கும்விஷயங்களைக்கற்பனைசெய்துகொண்டு அவைகளிலேயே ஈடுபட்டிருப்பேன். இயற்கையில் எனக்கு எவ்வளவு பிரியம் உண்டு என்பதை நான் வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்த முடியாது.”

ரவீந்திருடைய இந்த இளமைப் பருவத்திய கற்பனையிலேயே அவருடைய கவித்துவத்தின் எல்லா ரகஸ்யங்களும் நிரம்பி இருக்கின்றன.

ரவீந்திரர் இளமையில் பள்ளியில் கல்வி கற்றது மிகச் சொற்பமே. ரவீந்திரர் இளமையில் கற்ற பள்ளிக்கூடத்தில் ரவீந்திரரின் ஆசிரியர்கள் பையன்களை அடித்தும் பயமுறுத்தியும் கல்வி கற்பித்தனர். ரவீந்திரரின் ஒரு ஆசிரியர் மிகவும் தயை இல்லாதவராக இருந்தார். ஏதாவது ஒரு சிறிய தவறு செய்தபோதிலும் அவர் ரவீந்திரரைக் கடுமையாகத் தண்டித்து வந்தார். இதனால் அவருக்கு பள்ளிக்கூடத்தில் மிக வெறுப்பு ஏற்பட்டு விட்டது. பள்ளிக்கூடம் போகாமல் இருக்க சாக்குப் போக்குகள் சொல்ல ஆரம்பித்தார். இந்த விஷயத்தை அறிந்து அவருடைய தகப்பனர் அவருடைய பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டிலேயே ஒரு உபாத்தியாயரை நியமித்து அவருக்குக் கல்வி கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார். உபாத்தியாயரின் முயற்சியால் ரவீந்திரரும் தன் சகோதரர்களோடு வித்தியாப்பியாஸத்தில் தேர்ச்சி அடைந்தார். தேவேந்திரர், பையன்களுக்கு எந்த விஷயத்தில் அதிக ருசி உண்டோ அந்தக் கல்வியையே கற்பிக்க வேண்டுமென்ற நோக்கம் உடையவர்.

## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

S. C. 98/1941௵

V. தியாகராஜ முதலியார்—வாதி

சரவணப் பிள்ளை—பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு வாதி வக்கீல் கொடுத்த நோட்டீசு ஷை நெம்பர் வாதியால் பிராமிசரி நோட்டுப்படி தொகை கிடைக்கவேணுமென்று தாவா செய்யப்பட்டு சம்மனை ஒட்டி சர்வுசெய்ய உத்திரவாகி 22-9-41ல் ஈரங்கிபோடப்பட்டிருக்கிற விபரம் இதன் மூலமாய் அறியவும்.

மன்னார்குடி, 4-9-41.

R. ராமச்சந்திரய்யர், வாதி வக்கீல்.

## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1941௵ O. S. நெ. 31.

வீருச்சாமி வன்னியர்—வாதி

நடேச வன்னியர்—பிரதிவாதி

ஷை நெம்பர் பிரதிவாதிபேரில் பெங்தக பத்திரப்பட்டி ரூ.48-4-0க்கு தாவா செய்து 4 தடவைகள் சம்மன் அனுப்பியும் சம்மன் சர்வாகாததால் ஒட்டி சர்வுசெய்ய மனு கொடுத்து உத்திரவாகி 22-9-41ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறபடியால் அன்றையதினம் பிரதிவாதி ஆஜராகாதபக்ஷத்தில் எக்ஸ்பார்ட்டி செய்யப்படும் என்பதை அறியவும்.

V. K. ராஜகோபாலய்யங்கார், வக்கீல்.

மன்னார்குடி, 4-9-41.

## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

S. C. 132/41

T. K. கோபாலய்யர்—வாதி

தற்காலம் Bombay சேர்ந்த Mathunga Bhaudaji Cross Road-ல் No. 18, Shankar Nivas-ல் K. சுப்பிரமணியய்யர் ஜாகையில் வந்திருக்கும் மீனம்பநல்லூர் நாராயணஸாமியய்யர் பாரியை

பருவதத்தம்மாள்—பிரதிவாதி

ஷை வாதி அட்வகேட் அவர்கள் இதனால் தெரிவிப்பதாவது,

இந்த நெம்பர் பிரதிவாதியால் 5-6-38ல் வாதிக்கு ரூ. 40-க்கு எழுதி கொடுத்திருக்கிற பிராமிசரி நோட்டின் வட்டி முதல் தொகை ரூ. 47-2-6 கிடைக்கவேணுமாய் ஷை நெம்பரில் தாவா செய்திருப்பதில் பிரதிவாதிக்கு அறிக்கை சம்மன் சர்வாகாததினால் ஷையார் சம்மனை ஒட்டி சர்வு செய்ய மனு கொடுத்து இவ்விதம் உத்தரவாகி 25-9-41ல் ஈறங்கி குறிப்பிட்டிருப்பதால் ஷை பிரதிவாதிக்கு இந்த தாவா விஷயத்தில் ஏதேனும் கக்ஷியுண்டானால் அன்று கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மன்னார்குடி, 6-9-41.

A. Rajappa Mudaliar, அட்வொகேட்.



ரவீந்திருக்கு இளமையி லிருந்தே காவ்யம், சங்கீதம், நாடகம், சித்திர சாஸ்திரம் முதலியவைகளில் விருப்பமிருந்தது. ஆகையால் அவருக்கு இவ்விஷயங்கள் கற்பிக்கப்பட்டன. இயற்கை ருசி இருந்தமையால் வெகு சீக்கிரத்தில் இக்கலைகளில் தேர்ச்சி யடைந்தார்.

ரவீந்திரர் சுமார் 17, 18-வது வயதுகளில்தான் முதலில் சமூகத்தின் முன்னிலையில் ஒரு கவி ரூபத்தில் தோன்றினார். அச்சமயம் அவரால் எழுதப்பட்ட 'பிரபாத ஸங்கீதம்' 'ஸந்த்யா—ஸமீர்' (सन्ध्या समीर) முதலிய கவிதைகள் மிகவும் பிரபலமா யிருந்தன.

ரவீந்திரர் தமது 17-வது வயதில் முதலில் அயல்நாடு சென்றார். அங்கு பிரசித்தி பெற்ற 'ஜான்மோர்ல்' இடம் ஆங்கில ஸாஹித்யப் பயிற்சி பெற்றார். அங்கு பாரிஸ்டர் ஆவதற்கும் முயற்சி செய்தார். ஆனால் அவர் வெற்றியடையவில்லை.

தமது 23-வது வயதில் ரவீந்திரர் விவாகம் செய்து கொண்டார். 35-வது வயது வரை அவருடைய கிருஹஸ்த வாழ்க்கை யாதொரு தடையு மின்றி சென்றது. 18-வயதிலிருந்தே அவர் காவ்யங்கள் இயற்ற ஆரம்பித்தார் என்று முன்னே சொன்னோமல்லவா? அதன் பின் 35-வயது வரையில் அநேக மனோஹரமான காவ்யங்களை இயற்றினார். வங்காள ஜனங்கள் அவருடைய கவிதைகளை பெரிதும் விரும்பிப் படித்தார்கள். அச்சமயம் அவருடைய கவிதைகளையெல்லாம் ஒன்று சேர்த்து 'மாலா கார்' என்ற புஸ்தகம் வெளியிடப்பட்டது. ஆனால் அவருடைய 35-வது வயதில் நேர்ந்த சில சம்பவங்கள் அவருடைய வாழ்க்கையில் பெரிய புரட்சியை உண்டு பண்ணின. முதலில் அவருடைப பிரிய முள்ள மனைவியும் பிறகு கொஞ்ச காலம் கழித்து க்ஷய ரோகத்தினால் அவருடைய பெண்ணும் இறந்தனர். அவருடைய வாழ்க்கை இயற்கை யிலேயே கடவுள் பக்தி, ஸாதுத்வம் இவைகளின் பக்கமே திரும்பி இருந்ததால் இம்மாதிரி ஒன்றன் பின் ஒன்றாக நேர்ந்த துக்கஸம்பவங்கள் அவரை முற்றிலும் சாதுவாக்கி விட்டன. இவ்விஷயத்தைப் பற்றி ரவீந்திரபாபு தன்னுடைய சிநேகிதர் ஆண்ட்ரூஸி இடம் சொல்லி இருந்தார். அதாவது:—

இந்தச் சாவுகள் எனக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட பெரிய வரங்கள்போல் தோன்றின. கடவுள் என்னிடம் முழு கிருபை வைத்திருக்கிறார் என்று நான் எண்ணினேன். எனக்கு யாதொரு நஷ்டமும் ஏற்படவில்லை. நான் கடவுள்மேல் எல்லா பாரத்தையும் போட்டுவிட்டு முற்றிலும் கவலையற்றவனாக ஆனேன். இது மட்டுமல்ல. என் வாழ்க்கை முற்றிலும் பவித்திரமாகி விட்டது என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. சாவு என்பது என்ன? சாவு என்பதற்கு நிறைந்து இருத்தல் என்று அர்த்தம். அது யாரையும் அழிக்கமுடியாது. அதனால் யாதொரு நஷ்டமும் ஏற்படாது............இவ்வாறு மனதை உறுக்கும்படியாகப் பேசிக் கொண்டிருந்தார்.

மேலே சொல்லப்பட்ட சம்பவங்களால் ரவீந்திரரின் கவிதை வெள்ளம் தடையற்று பெருகிச் சென்றது. அதனுடைய முழுப்பிரவாகமும் அவருடைய 'கீதாஞ்சலி' என்று பெயருள்ள உலகப் பிரசித்தி பெற்ற கவிதையில் காணப்படுகிறது. 1912ல் ரவீந்திரர் தன்னுடைய கவிதையை இங்கிலாந்து சென்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்தக் கீதாஞ்சலியின் புஷ்பங்களாகிற பாட்டுக்களின் மணம் ஐரோப்பியரின் மனத்தைக் கவர்ந்தது. 1913-ல் அவ்ருடைய கவிதைக்காக மஹாத்மா நோபெல் என்பவரால் ஸ்வீடன் தேசத்தில் ஏற்படுத்தப்பட்ட நோபெல் பரிசு அளிக்கப்பட்டது. இந்த வெகுமதியைத் தீர்மானிக்கிற வித்வத்சபை இந்தக் கவிதையை மிகவும் புகழ்ந்து அவருக்கு நற்சாக்ஷிப் பத்திரம் அளித்திருக்கிறது.

கீதாஞ்சலிக்காக இவருக்குக் கிடைத்த ரூ. 120000த்தை அவர் தனக்கு மிகப் பிரியமான போல்பூரிலுள்ள 'சாந்தி—நிகேதன்'. (शान्ति निकेतन) என்ற கழகத்திற்கு அளித்துவிட்டார். நோபெல் பரிசு

கிடைத்தபின் அவருடைய புகழ் உலகெங்கும் பரவியது. கீதாஞ்சலி அநேகமாய் எல்லா பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டது. கீதாஞ்சலியைப் படித்து ஆனந்தமடைந்த மேல் நாட்டாருக்கு ரவீந்திரரைப் பார்க்கவும் அவருடைய உபதேசங்களைக் கேட்கவும் ஆர்வம் ஏற்பட்டது. அநேக தேசத்து வித்வான்கள் ரவீந்திரரைத் தங்கள் நாட்டிற்கு எழுந்தருளவேண்டுமென வேண்டிக்கொண்டார்கள். ரவீந்திரருக்கும் மற்ற தேசங்கட்குப் பிரயாணம் செய்ய மிகுந்த ஆசை இருந்தது. ஆகையால் அவர் சென்ற சில வருடங்களில் இங்கிலாந்து, பிரான்ஸ், இடாலி, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஸ்வீடன், ஸ்விட்ஜர்லாந்து, அமெரிக்கா முதலிய மேல் நாடுகட்குச் சென்றிருந்தார். கீழ்திசை நாடுகளான சைனா, ஜப்பான் முதலியவற்றிற்கும் தன்னுடைய திவ்ய செய்தியை அனுப்பித்துள்ளார். அதன் சாராம்சம் உலக அன்பு. உலக முழுவதிலும் உள்ள மனிதர்கள் ஒரே தகப்பனாரின் பிள்ளைகள். எல்லோரும் ஒரே கயிற்றினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். எல்லோரிடத்திலும் பரஸ்பர அன்பு ஒற்றுமை இவை இருந்தால் தான் நாம் எளிதில் முன்னேற்றமடையலாம். இந்தச் சொற்பொழிவைக் கேட்டதும் உலக மக்கள் அனைவரும் சந்தோஷமடைந்தனர்.

ரவீந்திரபாபு வெவ்வேறு தேசங்களில் செய்த பிரஸங்கங்களின் சாராம்சங்கள் 'ஸாதனா' என்று புஸ்தக ரூபமாக வெளிவந்துள்ளன. ரவீந்திரர் நூற்றுக்கணக்கான கவிதைகள் எழுதியுள்ளார். அவற்றில் நாடகங்கள், உபன்யாஸங்கள், நீதிக்கதைகள் முதலிய எல்லாவித கிரந்தங்களுமிருக்கின்றன. அவருடைய கீதாஞ்சலி என்ற கவிதைக்குக் கிடைத்த பெருமை தற்காலத்தில் வேறு ஒரு கவிதைக்கும் கிடைக்கவில்லை.

ரவீந்திரர் கவியாகவும், பாடகராகவும், நாடகாசிரியராகவும், சித்திரக்காரராகவும், பெரிய பேச்சாளி (Lecturer) ஆகவும் இருந்ததோடல்லாமல் ஒரு பத்திரிகாசிரியராய் இருந்துகொண்டு தன் தாய் பாஷைக்கு அரிய சேவை புரிந்திருக்கிறார். அவர் தம் யௌவன வயதில் 'பாலகன்' (बालक) என்ற மாதப்பத்திரிகையை வெளியிட்டு வந்தார். இதற்குப் பிறகு 'பாரதி' (भारति) 'பாண்டார்' 'ஸாதனா' என்ற பத்திரிகைகளை வெவ்வேறு காலங்களில் வெளியிட்டார். பத்திரிகாசிரியராயிருந்த காலத்தில் அநேக நவீன எழுத்தாளர்களுக்கு மிக அழகிய விதமாக கவிதைகள் எழுதச் சொல்லிக்கொடுத்து அவர்களை உத்ஸாஹப்படுத்தினார்.

ரவீந்திரர் தம்தேசத்து சிறுவர், சிறுமிகளுக்கு இந்தியாவின் பழையகால முறையில் கல்வி கற்பிக்க தன்யுவாவஸ்தையிலிருந்தே மிகப் பிரயத்தினம் செய்தார். இன்றையிலிருந்து சுமார் 35 வருடங்களுக்கு முன்னால் அவர் கல்கத்தாவில் தானாகவே ஒரு சொந்தப் பாடசாலையை ஸ்தாபித்திருந்தார். இப் பாடசாலையை நடத்துவதற்கு அவர் எவ்வளவு முயற்சியும், சுயநலத்தியாகமும் செய்தார் என்பது சொல்லுக்கு அடங்காது இவர் இந்தப் பாடசாலையை நடத்துவதற்காக தன் சொந்தப் புஸ்தகங்களையும், தன்னிடமிருந்த எல்லாவற்றையுமே விற்றார்.

ரவீந்திரருடைய பூஜ்யபிதா தேவேந்திரநாத் தாகூர் கல்கத்தாவிலிருந்து கொஞ்சதூரத்தில் உள்ள போல்பூர் என்றவிடத்தில் ஓர் அடர்ந்த காட்டில் சுமார் 4 வருடங்களுக்கு முன்னால் ஈச்வர பஜனைக்காக ஒரு ஆசிரமம் ஸ்தாபித்திருந்தார். இதில் அவருக்கு மிகுந்த சாந்தி ஏற்பட்டது. இதனால் இந்த ஆசிரமத்திற்குச் சாந்தி நிகேதன் என்ற பெயர் ஏற்பட்டது.

வரவர அங்கு சில மாணாக்கர்களுக்கு கல்வி கற்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ரவீந்திரரும் இந்த ஸ்தாபனத்தில் கலக்கத் தொடங்கினார். சுமார் 25 வருஷங்களுக்கு முன்னால் தன் பிதாவினுடைய அனுமதி பெற்று அங்கு ஒரு பிரம்ம வித்யாலயத்தை ஸ்தாபித்தார். அது பழைய காலத்து குருகுலவாஸத்தை ஒத்திருந்தது. அப்பொழுதிலிருந்தே இந்த சாந்தி-நிகேதன் படிப்படி

யாக் விருத்தி யடைந்து கொண்டே வருகிறது.

இப்பொழுது இந்த சாந்தி-நிகேதன், விஸ்வ-பாரதி என்ற ரூபத்தில் விளங்குகிறது. இங்கே இந்தியர் மட்டுமல்ல, மேல்நாட்டு வித்வான்களும் உபாத்தியாயர்களாக இருக்கிறார்கள். மேல் நாட்டு மாணுக்கர்களும் கல்வி கற்கிறார்கள். எல்லோரும் இங்கு இந்திய நாகரிகப்படிதான் இருக்கவேண்டும். ஒவ்வொரு பௌர்ணமியிலும், அமாவாசையிலும் இலக்கிய மகாநாடும், சங்கீத மகாநாடும் கூடும். கல்வி திறந்த மைதானத்தில் மரங்களின் அடியில் கற்பிக்கப்படுகிறது. இந்த வித்யாலயத்திற்காக ஒரு அச்சுக்கூடமும் இருக்கிறது.

இந்தக் கலாசாலை இவ்விதம் நமக்கு உபயோகமானதாயும் கீர்த்தி வாய்ந்ததாயும் இருக்கிறது. இந்தக் கலாசாலையி லிருந்தும் ரவீந்தரரின் மகிமை உலகிற்கு வெளிப்படுகிறது.

இவ்வாறு பல்வகைகளிலும் நம்மை மகிழ்வித்து வந்தும் இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகிற்கே பெருமையைத் தந்த கவிச் சக்ரவர்த்தி ரவீந்திரநாத தாகூர் தமது எண்பதாவது வயதில் இவ்வுலகிலிருந்து விடுதலை பெற்றது உலக மக்கள் அனைவரையும் துக்க சாகரத்தில் ஆழ்த்துகிறது. கவியின் ஆன்மா சாந்தி யடையுமாறு எல்லாம் வல்ல கருணைக் கடவுளை பிரார்த்திப்போமாக!

"தோன்றிற் புகழொடு தோன்றுக,
அஃதில்லாற் தோன்றலிற்
தோன்றுதல் நலம்."


## இன்ஷ்யூர் செய்து தேச பணத்தைப் பெருக்குங்கள்

ஒரு தேசத்தின் பலத்துக்கு அத்தாட்சி அத்தேசத்திலுள்ள மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுடையவர்களாய் இருப்பதுதான்.

இந்த உலகக் கலவர காலத்தில் ஒவ்வொரு இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி ஹோல்டரும், தான் எவ்வளவு அளவுக்குத் தன்னை வரப்போகும் இக்கட்டுகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

அப்படி இன்ஷ்யூர் செய்து தன்னைக் காத்துக்கொள்ளாதவர்கள் காலதாமதமின்றி இன்ஷ்யூர் செய்து தேசத்தின் செல்வப் பெருக்கை அதிகரிக்கவேண்டும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள் :—

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(தலைமை ஆபீஸ் :—கல்கத்தா) (ஸ்தாபிதம் 1906)

பிராஞ்சு ஆபீஸ்: **நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்**

362, சைனு பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதறாஸ்.

ஸப் ஆபீஸ்கள் : 171, புதுத் தெரு, மதுரை. 5, கெம்பகோடா ரோட், பெங்களூர்.

# ப்ரோமீத்யுஸ்

[பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ. பி. எல்.]

[ப்ரொமீத்யுஸ் என்பவன் தெய்வவர்க்கத்திலே டைட்டன் இனத்தைச் சேர்ந்தவன். மனிதர்களைச் சிருஷ்டித்து, தேவலோகத்திலிருந்து நெருப்பைக் கொணர்ந்து, மனிதர்களுக்குக் கொடுத்த 'குற்றத்திற்காக', தேவாதி தேவனான ஜுபிட்டரின் கோபத்துக்கு அவன் உள்ளாகிக் கடுமையான தண்டனை விதிக்கப் பெறுகிறான், என்பது கிரேக்க நாட்டுப் புராணக்கதை.

இந்த தண்டனையைப்பற்றி அவனுக்கும் ஜுபிட்டரின் மகனாகிய மெர்க்யுரிக்கும் தெய்வக் கொல்லனாகிய வல்க்கனுக்கும் வாக்குவாதம் நடந்ததாகச் சித்தரித்துக் காட்டும் கவி இதன் மூலமாகப் பழங்காலக் கிரேக்க தெய்வங்களைப் புரளி செய்கிறார்.

இதை இயற்றியவர் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே வாழ்ந்தவரான லூஸியன் என்பவர்.]

---

## மெர்க்யுரி: வல்க்கன்: ப்ரொமீத்யுஸ்

மெ: இதோ வந்துவிட்டோமே காக்கஸஸுக்கு, வல்க்கன். அந்த அதிர்ஷ்டங்கெட்ட டைட்டனை இதிலேதானே ஆணி பிடித்துக் கட்டவேண்டும். நீட்டிக் கொண்டிருக்கிற பாறை எங்கேயாவது இருக்கிறதா என்று சுற்றிப்பார்ப்போம். பனி மூடாத பாறையாய் இருக்கவேண்டும். அப்படி யிருந்தால்தான் சங்கிலிக்கு நல்ல பிடிப்பு இருக்கும். குற்றவாளியை எல்லாரும் பார்ப்பதற்கும் சௌகரியமாயிருக்கும்.

வ: அப்படியே. தாழ்ந்த இடத்திலே, பூமி மட்டத்துக்குக் கிட்ட, அவனைச் சிலுவையில் அடிக்கப்படாது. அடித்தால் அவனுடைய கருவிகளான மனிதர்கள் அவனுக்குத் துணைசெய்ய வந்துவிடுவார்கள். அதிக உயரத்திலும் அடிக்கப்படாது—கீழிருந்து பார்க்க முடியாமல் போய்விடும். இந்த இடம் சரியான இடம் என்று தோன்றினால்—இதோ, இங்கே, கிட்டத்தட்டப் பாதி உயரத்திலே, செங்குத்தாயிருக்கிற இந்த இடத்துக்குமேலே, அவனுடைய கைகளை இரண்டு பக்கத்திலும் வைத்து ஆணி அடித்துவிடலாம்.

மெ: ரொம்ப சரி. இங்கேயுள்ள பாறைகளும் தகர்ந்துபோய்க் காடு முரடாயிருக்கின்றன. ஏற முடியாதபடி எல்லாப் பக்கமும் ஒரே செங்குத்தாயிருக்கிறது. கால் கட்டைவிரலைக் கூட ஊன்றுவதற்கு இந்த இடத்திலே இடுக்கு அகப்படுவது துர்லபம். சிலுவையில் அடிக்கிற மாதிரி இவனை அடிப்பதற்கு இதுதான் நல்ல இடம். இன்னும் நேரமாக்காதே, ப்ரொமீத்யுஸ்! எழுந்திரு, வா வா. பாறையில் வைத்து ஆணி அடித்தாகவேண்டும். ஓடி வா.

ப்ரோ: வல்க்கன்! மெர்க்யுரி! நீங்கள் இரண்டு பேர்களும் நல்லவர்களாயிற்றே. அதிர்ஷ்டங்கெட்ட இந்த ஏழையின்மேல் கொஞ்சம் இரக்கம் வைக்கப்படாதா? இத்தனை கஷ்டங்களையும் நான் படவேண்டியவனே அன்று என்பது உங்களுக்குத் தெரியுமே.

மெ: ப்ரொமீத்யுஸ்! உன்மேலா இரக்கப் படவேண்டும்? இலேசாகச் சொல்லி விட்டாய், அப்பா. இரக்கப்பட்டால் எங்கள் கதி என்ன? போட்ட உத்தரவை நிறைவேற்றவில்லை என்று உன்

ளுடுகூட எங்களேயும் இதே இடத்தி லேயே சிலுவையில் அடித்துவிடுவார் களே. அப்பொழுது எங்கள் பாடும் இரக்கப்படும்படி ஆகிவிடுமே. இந்தப் பாறையிலே இன்னும் இரண்டுபேரை வைத்து ஆணி அடிக்க இடம் கிடை யாது என்று நினைக்கிருயா என்ன? வா, வா, சீக்கிரம். உன் வலது கையை இங்கே நீட்டு. இந்தா வல்க்கன்! இதைச் சரியாக வைத்து ஆணி அடி. நகர்த்த முடியாமல் இருக்கும்படி சுத்தி யால் அடித்து இறுக்கு.—சரி. அந்தக் கையைக் கொடு.—ஜாக்கிரதையாய்ப் பார்த்து, அதையும் பலமாக வைத்து இறுக்கு.—சரி. பேஷ். இதோ இப் பொழுது வந்துவிடும். அந்தக் கழுகு— உன்னுடைய ஈரற்குலேயைக் கொத்திப் பிடுங்குவதற்கு. சில்ப வித்தை தெரிந் ததனுல் நீ ஜோராகச் சிருஷ்டித்தாய் அல்லவா? அதற்கெல்லாம் கைம்மேலே பலன் உனக்குக் கிடைக்கவேண்டாமா?

ப்ரோ: ஐயோ ஸாட்டர்ன்! ஐயோ ஐய பேடஸ்! ஐயோ பூதேவித் தாயே! யாதொரு குற்றமும் செய்தறியாத அப்பாவியான எனக்கு என்னவென்ன கஷ்டமெல்லாம் வரவேண்டுமென்று விதித்திருக்கிறது?

மே: நீயா அப்பாவி? நீயா? நன்ருகச் சொன்னுய்! முதலாவது, தேவர்க ளுக்கு இறைச்சியைப் பகிர்ந்து கொடுக் கிற காரியம் உனக்கு இட்டிருந்தார் களே, அப்பொழுது எவ்வளவு அக்கிரம மாகவும் சூதாகவும் நடந்துகொண்டாய்! கொழு கொழுவென்றிருந்த நல்ல துண்டுகளே எல்லாம் தனக்கென்று வைத்துக்கொண்டாய். ஜூபிட்ட ருக்கு வெறும் எலும்பை மட்டிலும் கொடுத்து ஏமாற்றினுயே. நினைவிருக் கிறதா? எனக்கு நன்ருக நினைவிருக் கிறது—சத்தியமாக, ஜூபிட்டர் சாக்ஷி யாகச் சொல்லுகிறேன். நீ அப்படிச் செய்ததாகத்தான் ஹெஸியடும் சொல்லுகிருன். அப்புறம் என்ன செய்தாய் தெரியுமா? வீம்புக் காக மனிதர்களே உண்டாக்கத் தொடங் கினுய். அந்த வர்க்கத்தைச் சேர்ந்த ஜந்துக்களால் விளையக்கூடாத வம்பு எது? எப்பொழுதும் அவர்கள் வம்புக் குத் தயார். இத்தனை கெடுதி போதா தென்று, மேற்கொண்டு, பெண்களையும் வேறு சிருஷ்டித்துவிட்டாய். கடைசி யாக, தெய்வங்கள் மிகவும் அரிய செல்வ மாகக் கொண்டாடும் நெருப்பை அவர் களிடமிருந்து திருடி எடுத்துக்கொண்டு வந்து, அதை மனிதவர்க்கத்துக்குத் தானம் வேறு செய்துவிட்டாய். இவ்வ ளவுபெரிய அக்கிரமங்களைச்செய்ததற்கு அப்புறமும் 'நான் குற்றமற்றவன். அநீதியாய்க் கஷ்டப்படுகிறேனே' என்று சொல்லுகிருய். துணிச்சலைப் பார் துணிச்சலை!

ப்ரோ: குற்றமற்ற ஒருவன்மேல் அபாண்டமாகக் குற்றம் சாட்டப்படும் போது நீகூட அதைக் கவனிப்பதில்லை என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. மெர்க்யுரி! நீ ஒன்றையும் கவனிக்கவில்லை. ஏனென்ருல், நியாய மாகப் பார்த்தால், எந்தெந்தக் காரியங் களை நான் செய்ததற்காக ஜனங்கள் என்னை நன்கு மதித்து, என்னைப் பாராட்டி, எனக்குச் சன்மானம் அளிக்கவேண்டுமோ, அதே காரியங் களையே நான் செய்த குற்றங்களாக என்மேல் சுமத்துகிருய். கேட்பதற்கு உனக்கு நேரமிருந்தால், நீ சாட்டின குற் றங்களுக்கு எல்லாம் சரியானபடி, குசா லாகப் பதில் சொல்லுவேன். ஜூபிட் டர் என்மேல் இட்ட தண்டனை அநியா யம் என்பதை உனக்கு ருசுப்படுத்து வேன். ஆனுல்—நீ நன்ருகப் பேசுகிற வன். வழக்குப் பேசுவதில் மிக்க வல்ல வன் என்று கியாதி பெற்றிருக்கிருய். உன்னேடு பேசினுல், ஒருவேளை நீ அவர்கள் கக்ஷியைச் சேர்ந்துகொண்டு, அவர்கள் செய்தது நியாயம்தான் என்று வாதிக்கத் தொடங்கினுலும் தொடங்கலாம். ஸிதியாவில் உள்ளவர் கள் எல்லாரும் என்னைப் பார்த்து இக ழும்படியாக இந்தக் காக்கஸஸ் மலைச் சரிவிலே, காஸ்ப்பியன் ஜலசந்தியின் அருகே என்னைச் சிலுவையில் அடித்து



4

வைத்த காரியம் சரிதான் என்று நீ நிரூபிக்க முயன்றாலும் முயலலாம்.

மே : நீ என்னை வீணாக வழக்குக்கு இழுக்காதே. அதனாலே உனக்கு என்ன பிரயோஜனம், ப்ரோமீத்யுஸ்? ஆனால் உனக்குப் பேசவேண்டும்போல் தோன்றினால் பேசு. எப்படியும் நான் இங்கே இன்னும் கொஞ்சநேரம் இருந்துவிட்டுத்தான் போகவேண்டும் —கழுகு வருகிற வரையில், உன்னுடைய குடலைப் பிடுங்குவதற்கு வருமே அந்தக் கழுகு அதுவரையில் காரியம் ஒன்றும் இல்லை. பிரசங்க வித்தையில் நன்றாகத் தேர்ச்சிபெற்ற வித்துவான் நீ. அப்பேர்ப்பட்டவனிடமிருந்து சாமார்த்தியமான பிரசங்கம் ஒன்றைக் கேட்பதைவிட மேலான பொழுது போக்கு நமக்கு வேறென்ன அகப்படப்போகிறது.

ப்ரோ : சம்மதமா? அப்படியானால் நீ முதலிலே பேசு. என் மேலே குற்றஞ் சாட்டும்போது கொஞ்சங்கூட இரக்கப் படாதே. கூசாமல் சொல்லு. உன்னுடைய தகப்பன் செய்த காரியம் சரியென்று நிரூபிக்க எப்படி யெப்படியெல்லாம் கக்ஷி சொல்லவேண்டுமோ சொல்லு. ஒன்றையும் விட்டு விடாதே. வல்க்கன்! எங்கள் இரண்டுபேர் வழக்கையும் நீ கேள். கேட்டு நீ தான் தீர்ப்புச் செய்யவேண்டும்.

வல் : ஜூபிட்டர்மேல் ஆணை! மத்தியஸ்தனாகவா இருக்கவேண்டும்? அதற்குப் பதிலாக நானும் மெர்க்யுரியோடு கூடச் சேர்ந்துகொண்டு உன்மேல் குற்றஞ் சாட்டலாம் என்று தோன்றுகிறது. அப்படிச் செய்தாலும் செய்வேன். எங்களிடமிருந்து நீ நெருப்பைத் திருடிக்கொண்டுபோன பிறகு, எங்கள் சாப்பாடெல்லாம் சில்லிட்டுக் குளிர்ந்து போய்விட்டது. இது உன் குற்றம் தானே?

ப்ரோ : அப்படியா? அதுவும் சரி. என் மேல் குற்றம் சாட்டுவதை நீங்கள் இருவருமாகப் பிரித்துக்கொள்ளுங்கள். நான் நெருப்பைத் திருடின சங்கதியைப் பற்றி நீ பேசு. நான் மனிதனை உண்டாக்கினதையும் இறைச்சியைப் பங்கிட்டதையும்பற்றி மெர்க்யுரி பேசட்டுமே. நீங்கள் இரண்டுபேர்கள் மிகவும் நாசூக்கான பேர்வழிகள். உங்களைப் பார்க்கும்போதே பெரிய பிரசங்கிகள் மாதிரி இருக்கிறது.

வல்: எனக்கும் சேர்த்து மெர்க்யுரியே பேசட்டும். வழக்கையும் விவகாரத்தையும் பற்றி எனக்கு என்ன தெரியும்? என் வேலையெல்லாம் பட்டறையிலே தான். மெர்க்யூரியை சொல்லு.—அவன் நல்ல பிரசங்கி. வழக்குப் பேசும் சங்கதி என்றால் அவனுக்கு நிரம்பப் பிடிக்கும்.

ப்ரோ: திருட்டு விஷயத்தைப்பற்றி மெர்க்யுரி வலுவிலே பேசமாட்டான்; என் மேல் குற்றஞ்சாட்டி என்னைக் குற்றவாளி என்று ஆக்க முயலமாட்டான் என்று நினைக்கிறேன். நாங்கள் இரண்டு பேரும் அந்தக் காரியத்தில் கூட்டாளிகள் ஆயிற்றே. இருந்தாலும் அதைப் பற்றிப் பேசுவது பொருத்தம் என்று உனக்குத் தோன்றினால், மையா சுதனே! குற்றஞ் சாட்டத் தொடங்குவதற்கு இதுதான் சமயம்.

மே : [பிரசங்கம் செய்வதுபோல் உரக்கவும் கம்பீரமாகவும்] ப்ரோமீத்யுஸஸே! நீ இயற்றியுள்ள குற்றங்களைக்குறித்து, அவற்றின் தன்மைக்கு ஏற்றவாறு நான் இவ்வமயம் கூறுவதென்றால், அதன்பொருட்டு நீண்டதும் அரியதுமான சொற்பொழிவொன்றை நிகழ்த்துவது இன்றியமையாததாகும் என்பது திண்ணம். ஆயினும், அவற்றைச் சுருங்கக் கூறிச் சுட்டி ஒழிதலே இது காலையிற் போதியதென்று எண்ணுகின்றேன். முதலாவதாக, உனக்கிட்டிருந்த வேலையின் கண்ணே இறைச்சியைப் பகுத்து வழங்குவது உன் கடமையாக இருக்குங்கால் அவ்விறைச்சியிலுள்ள நல்ல துண்டுகள் அனைத்தையும் நீ தனக்கென்று வைத்துக் கொண்டனை. நமது அரசனையும் ஏமாற்றினாய்.

இரண்டாவதாக, காரணமின்றி, ஒழுக்கம் அனைத்துக்கும் முரண்பாடாக மனிதரை இயற்றினாய்; நன்றோ?

மூன்றாவதாக, எம்மிடமிருந்து நெருப்பைக் களவாடினை, அம்மாந்தர்க்கு ஈயும் பொருட்டு. ஆ! அவை எத்துணைப் பெருங் குற்றங்கள்! அவற்றின் அளவை நினைதொறும் நினைதொறும், குறைகூறுவதை நீ அறவே கைவிடவேண்டாமோ? மறுமொழி கூறுகின்றனையே, அது யாங்ஙனம்? இத்துணை எளிதான தண்டனையை உனக்கிட்டு அருளிய ஜூபிட்டரின் பேரன்பை உணர்ந்து, அவரைப் போற்றுவதே நீ செய்தற்குரிய செயலாகுமன்றோ? ஒப்புகின்றனையா? மறுத்தியாயின், நீ இயற்றிய குற்றங்களை நீயே உணருமாறு, நெடியதாயும் விரிவாயும் உள்ள சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி, அழிவழக்காய் யாதொன்றையும் திரித்துப் பேசாது, உள்ளவற்றை உள்ளபடி, செவ்வனே எடுத்துக் கூறி, உண்மையைத் துலங்கச் செய்வது எனக்கு இப்போது வாய்ந்துள்ள கடமையாகிவிடும். நான் எடுத்துக் கூறிய குற்றங்கள் மூன்றின் பாலும் 'குற்றமுற்றேன் யான்' என்று நீ இணங்குவையாயின், எனது குற்றச்சாட்டினை இதனோடு முடித்துக் கொள்ளுகிறேன். அதனை மேன்மேலும் விரித்துரைப்பின், கூறியது கூறல் என்னும் குற்றமாயும், வீணான நேரக் கழிவாயும் அஃது ஆகிவிடுமன்றோ?

ப்ரோ: மெர்க்யுரி! நீ எடுத்துச் சொல்லியவை எல்லாம் அற்பவிஷயங்கள் அல்லவா? நன்றாய்ப்பார். நீ சொல்லியவை என்மேல் குற்றஞ் சாட்டுவதற்குப் போதுமா? முதலிலே, இறைச்சியைப் பற்றிநான் சொல்லுவதைக்கேள். யுரேனஸ் ஆணையாக, நான் சொல்லுவது நிஜம். சாப்பாட்டிலே தமக்குக் கிடைத்த பங்கிலே சிறு எலும்புத்துண்டு ஒன்று கிடந்ததற்காக, ஜூபிட்டர் இவ்வளவு இழிவாக நடந்து கொள்ளுவதையும், இவ்வளவு அற்பத்தனமாய்ப் பொறாமைப் படுவதையும் கண்டு எனக்கு வெட்கம் பிடுங்கிக் கொள்ளுகிறது. இந்த அற்பத்துக்காக என்னைப் போன்ற பழங்குடியில் தோன்றிய தேவனைச் சிலுவையில் அடிக்கச்செய்தாரே. அவருக்கு நான் செய்துள்ள முக்கியமான உபகாரங்களை எல்லாம் மறந்துவிட்டாரே! பக்ஷணத்திலே பெரிதானதைத் தனக்குத் தரவில்லை என்று முணங்குவதும் சிணுங்குவதும் சிறுபிள்ளைத்தனம் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ளவில்லையே. விருந்துநடக்கும்போது, வேடிக்கையாக நடக்கும் இந்தமாதிரியான அற்ப விளையாட்டுக்களை ஒருவரும் மனத்தில் வைக்கக்கூடாது. இதுதான் எனக்குத் தோன்றுகிறது.

மெர்க்யுரி! நீபார். விருந்தாளிகளுள் ஒருவன் விளையாட்டுப் போக்கிலே ஏதோ சற்றே அளவு மீறிவிட்டான் என்றே வைத்துக்கொள். அப்பொழுதும் அதை ஒரு வேடிக்கையாகவேதானே கொள்ள வேண்டும்? சாப்பிட்டு எழுந்திருந்த பிறகு அதை முற்றிலும் மறந்துவிட வேண்டாமா? மறுநாள் வரைக்கும் அதைப் பற்றி அடம் வைத்துக் கொண்டிருக்கிறது, சிறிய வேடிக்கையைப்போய் பெரிய அபராதமாக நினைக்கிறது; அதைப் பெரிதாக்குகிறது; சமயம் பார்த்துக்கொண்டிருந்து பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்று அதை மனத்திற் குள்ளே அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறது—என்ன வெட்ககேடு! இது ராஜாநடக்கிற மாதிரியுமில்லை. தெய்வம் நடக்கிற மாதிரியுமில்லை.

நீயே பார். வேடிக்கைப் பேச்சு உதவாது: விளையாட்டாகவும் விஷமம்கூடாது: ஒருவரைக் கேலிசெய்யப் படாது; ஒருவரையும் புரளி செய்யலாகாது; விகடப் பேச்சு கூடவே கூடாது என்று ஆகி, ஒருவருக் கொருவர் வேடிக்கையாகப் பேசிக் கொள்ளுவதும் வம்புத்தனம் செய்வதும் தள்ளுபடி என்று வந்துவிட்டால் என்ன ஆகும்? கப்சிப் என்ற ஊமைக் கூட்டம் கூடுவதையும், முகத்தைச் சுளிப்பதையும், பொழுது போக்குக்கு வேறு காரியம் இல்லாததால் வயிறு புடைக்கப் புடைக்கத் தின்பதையும், வெறும் ஏப்பம் விடுவதையும் தவிர வேறு என்ன மிஞ்சும்? இவற்றுள் ஒன்றினாலாவது

சாபாட்டுக் கச்சேரிக்குச் சிறப்பு உண்டாகுமா? சாப்பாடு சிறக்கவே சிறக்காது அல்லவா?

ஏதோ துளி வாட்டின இறைச்சியைப் பகிர்ந்து கொடுக்கும்போது, 'நல்லதையும் பொல்லாததையும் பார்த்து அவருக்குப் பொறுக்கத் தெரிகிறதா?' என்று சோதித்தேன். அப்போது அவர் சற்றே ஏமாந்துபோனால் அந்த வேடிக்கையை மறுநாள் வரையிலுமா நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறது? இப்படி ஜூபிட்டர் அதை மறக்காமல் நினைத்துக் கொண்டிருப்பார் என்றுகூட நான் நினைக்கவில்லையே. அப்படி யிருக்கும்போது, அவர் அதைப்பற்றி அவ்வளவு காரமாக இருப்பார என்றாவது, அவ்வளவுதூரம் இந்தக் காரியத்தைப் பற்றித் தவறாகப் பாவிப்பார் என்றாவது நான் எங்கிருந்து எண்ணப் போகிறேன்?

உள்ளதில் மோசமான துண்டாகப் பொறுக்கிப் பார்த்துக் கொடுத்தேன் என்றல்லவோ நினைக்கிறீர்கள். அதோடு நில்லாமல், ஜூபிட்டருக்கு நான் ஒன்றுமே கொடாமல் ஏமாற்றி விட்டேன் என்று வைத்துக்கொண்டு பேசேன், மெர்க்யுரி. இதற்காக சுவர்க்கத்தையும் பூமியையும் ஒரே கலக்காகக் கலக்கிவிட வேண்டுமோ? அதற்கப்புறம் எடுக்கிற பேச்செல்லாம் சிலுவையையும் விலங்கையும் பற்றித்தான் இருக்கவேண்டுமா? வேறொன்றையும் பற்றிப் பேசலாகாதா? போதாதற்கு காக்கஸஸ்மலையையும் பற்றிப் பேச்சில் இழுக்க வேண்டுமா? என்னுடைய குடலைப் பிடுங்குவதற் கென்று ஒரு கழுகை மெனக்கெட்டுத் தேடிப் பிடித்து அனுப்ப வேண்டுமா? இதற்காக—ஏதோ சொல்லுகிற மாதிரி—இத்தனை பாடும் அவர் பட வேண்டுமா? நீயே உன் மனத்தைக் கேட்டுப்பார்.

இப்படிப் பழி வாங்குவது எதைக் காட்டுகிறது? ஆசாபாசங்களை அடக்கத் திறமையற்ற,—அற்பமான,—குறுகிய—இழிவான — மனத்தைக் காட்டுகிறதா? இல்லையா? நாலைந்து கவளம் இருக்கலாம் அந்த மாட்டிறைச்சி. அதில் பங்குக்காக ஒருவனுக்கு இப்படிப் பிசாசுக்கு வருகிற மாதிரிக் கோபம் வருமானால், முழு மாடும் அவனுக்குக் கிடைக்காமல் வேறொருவனுக்குக் கிடைத்தால் அப்பொழுது அவன் என்ன பாடு படுத்துவான்? இப்பேர்ப்பட்ட சர்தர்ப்பங்களில் 'வெறும்' மனிதர்கள்கூட எவ்வளவு புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளுகிறார்கள். கோபதாபங்களுக்கு அவர்கள் இடங் கொடுக்கிறார்கள். உள்ளாகிறார்கள். ஆனால் தேவர்களைப் போல அவ்வளவு மோசமில்லை.

ஏனா? இறைச்சிப் பானையிலே விரலை வைத்தான் என்றாவது, கூழ்ப்பானையை ருசி பார்த்தான் என்றாவது, இறைச்சியை வாட்டும்போது அதில் துளி கிள்ளி வாயில் போட்டுக் கொண்டான் என்றாவது இதுவரையில் எந்த மனிதனாவது தன்னுடைய சமையற்காரனைச் சிலுவையில் அடித்திருக்கிறானா? சொல்லு பார்ப்போம். அப்படிச் செய்தவனை உடனே மன்னித்து விடுவான். அல்லது அதிகமாய்ப்போனால் அவன் காதைப் பிடித்து ஒரு கிள்ளுக் கிள்ளுவான், அல்லது கன்னத்தில் ஓர் அறை கொடுப்பான். அவ்வளவுதான். அதற்குமேல் இல்லை. ஆனால் இப்பேர்ப்பட்ட பிசகு செய்ததற்காக ஒருவனைச் சிலுவையில் அடித்தான் என்று நான் இதுவரை கேட்டதில்லை, என்ன? முதல் விஷயத்தைப்பற்றி இவ்வளவுதான்.

இந்த மாதிரியான குற்றச்சாட்டுக்கும் கூடப் பதில் சொல்ல வேண்டி யிருக்கிறதே என்று எனக்கு வெட்கமா யிருக்கிறது. ஆனால் இவற்றைக் குற்றங்கள் என்று நினைத்தானே ஒருவன், நினைத்துச் சொல்லவும் சொன்னானே அவன் அல்லவோ என்னைவிட வெட்கப்பட வேண்டும்? அவன் முகம் வெட்கத்தால் சிவக்க வேண்டாமா?

இப்பொழுது இரண்டாவது விஷயத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன். நான் மனிதர் என்ற ஜந்துக்களை உண்டாக்கினேன் என்றாயல்லவா? இந்த விஷயத்தில் இயல்பாக இரண்டுவகைப் பிரச்னைகள் கலந்து கிடக்கின்றன. அவற்றுள்ளே அதை நீ குற்றமாக—அல்லது

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: (கல்கத்தா) 1048. (2 லைன்கள்)

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா.



கிளை ஸ்தாபனங்கள்:
லாகூர்; ஜம்ஷேட்பூர்; பேனரீஸ்; பகல்பூர்; பாட்னா; கோமில்லா; தூர்ஸிலாங்; திப்ருகார்.

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. 25 லக்ஷம்

ஸப்ஸ்க்ரைப் செய்யப்பட்ட மூலதனம்
ரூ. 8,70,000

கொடுக்கப்பட்ட மூலதனம்
ரூ. 2,60,000

★

வருமான வரிக்குட்படாத டிவிடண்ட் முதல் வருஷத்தில் (100-க்கு 10 வீதம்) கொடுக்கப்பட்டது.

100-க்கு 6-வட்டி வீதம் ஒருவருஷ பிக்ஸட் டிபாஸிட்டுக்களை ஒத்துக்கொள்கிறோம். செப்டம்பர் 1உ யிலிருந்து வட்டி 100-க்கு 5-வீதம் குறைத்துக் கொடுக்கப்படும்.

சௌரிங்கீ ஸ்கோயரில் நம்முடைய சொந்தக் கட்டட வேலை நடந்தேறிவருகிறது. இக்கட்டடத்தின் அஸ்திவாரக்கல் 1941ஆ ஜூலை மீ 31உ ஆசார்யா ஸர். பி. ஸி. ராயால் வைக்கப்பட்டது.

நமது கிளை ஆபீஸ், ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ரிடயர்ட் ஸூபரிண்டெண்ட் ராவ்சாகிப் நடேசய்யரின் கிர்வாகத்தில், திறந்து வைத்து நடத்தப்படுகிறது.

விலையாகும்படியான எல்லா ஷேர்கள், கவர்ன்மெண்ட் செக்யூரிடிகள் முதலியவற்றில் நாங்கள் வியாபாரம் செய்கிறோம்.

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிபோர்ட்"டுக்கு எழுதுங்கள். வருஷ சந்தா ரூ. 3. மாதிரி பிரதி கேட்பவர்களுக்கு அனுப்பப்படும்.

இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்க ஏஜெண்டுகள் தேவை.

அதிகக் குற்றமாக—நினைக்கிறாய் என்பது எனக்குச் சரியாக விளங்கவில்லை. மனிதரை உண்டாக்கியே இருக்கக் கூடாது என்கிறாயா? அவர்கள் தோன்றுவதற்கு முன்னால் இருந்ததுபோல் உருவமற்ற உயிரற்ற களிமண்ணாகவே அவர்கள் என்றென்றைக்கும் கிடந்திருக்கும்படி நான் விட்டிருக்கவேண்டும் என்பது உன்னுடைய அபிப்பிராயமா? அல்லது, அவர்களை நான் செய்த வடிவத்தில் செய்திருக்கக் கூடாது, வேறு ஏதாவது மாதிரியாகச் செய்திருக்கவேண்டும் என்பதா?

எப்படி யிருந்தால் என்ன? அக்கரையில்லை. இரண்டு ஆக்ஷேபணைக்கும் பதில் சொல்லிவிட்டால் போயிற்று. மனிதருக்கு உயிர் அளித்து, அவரை எழுப்பி விட்டதால் தேவர்களுக்கு ஒரு லவலேசமும் கெடுதி உண்டாகவில்லை: அதற்கு நேர்மாறாகவே நடந்திருக்கிறது ; பூலோகத்திலே மனிதப் பிறவியே இல்லாதிருந்த போது தேவர்களுக்கு என்ன பதவி இருந்ததோ அதைக் காட்டிலும் சிறப்பான,-சௌகரியமான பதவி அவர்களுக்கு உண்டாகியிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். இதை முதலில் நிரூபிக்க முயலுவேன்.

புதுவகைப் பிராணிகளால் நான் பூமியை அலங்கரித்தேன்; இதனால் நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா? நீ இதை முதலில் முடிவு செய். தெய்வங்களையும் வானுலகங்களாகிய தேவதைகளையும் தவிர வேறு உயிர் ஒன்றுமே இல்லாத காலம் ஒன்று இருந்ததல்லவா? அதைச் சற்றே நினைத்துப் பார். அப்பொழுது பூமி எப்படியிருந்தது? கரடு முரடாய், உருவமற்றதாய், பாழடைந்த வனாந்தரமாய், எங்கே பார்த்தாலும் கண்டபடி புதர் அடர்ந்து கிடந்தது. தேவர்களுக்குப் பலிபீடங்கள் உண்டா? கோயில்கள் உண்டா? ஒன்றும் இல்லை. இவைகளே இல்லாதபோது, சிறந்த சிற்ப சாஸ்திர விதிப்படி நிருமிக்கப்பட்ட அழகான தூண்கள் ஏது? சிலைகள் ஏது? ஒன்றும் கிடையா. நான் எப்பொழுதும் பொதுநலத்தை நாடுபவன்; தேவர்களுடைய நன்மையை மேன்மேலும் விருத்திசெய்வதற்கு வேண்டிய முயற்சிகளிலே கண்ணுங் கருத்துமா யிருப்பவன்; பொதுவாக யாவற்றையுமே சிறக்கச் செய்து உத்தமமான நிலையை அவை அடைவதற்கு உரிய முறைகளைத் தேடிக் கொண்டே யிருப்பவன். நான் யோசித்து, யோசித்துப் பார்த்தேன். கொஞ்சம் களிமண்ணை எடுத்து, உருவத்திற் சிறந்த நம்மைப்போல் தெய்வீக உருவமுள்ள, பிராணிகளைக் களிமண்ணால் பிடித்துப் பார்த்தேன். அதைக் காட்டிலும் மேலான காரியம் ஒன்றும் இல்லை என்று எனக்குப் பட்டது. நம்மோடு ஒப்பிட்டுப் பார்த்து, நம்முடைய சிறப்பியல்புகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு வேறு சில பிராணிகள் இருந்தால் அன்றோ முடியும்? சாக்காடு உடைய பிராணிகள் சில இல்லாமல் இருந்தது தெய்வீக இயற்கைக்கு ஒரு குறையாகவே நான் நினைத்தேன். இந்தப் புதிய இனம் சாவுள்ளது. ஆனால் மற்றெல்லா விஷயங்களிலும் அதைக் குறைவில்லாதிருக்க முயன்றேன். திறமையிலும், அறிவிலும் அழகை உணருவதிலும் அதை என்னால் எவ்வளவு சிறப்பாக்க முடியுமோ அவ்வளவையும் முயன்று அதற்குக் கொடுத்தேன். இதைப்பற்றிக் கவி பாடியிருக்கிறார். மண்ணையும் நீரையும் விட்டுக் குழைத்து, மாவைப்போல் நன்றாகப் பிசைந்து, மினேர்வாவைத் துணைக்கு அழைத்தேன். அவளுடைய உதவியால் அதை மனிதனாக்கி முடித்தேன். இதைத்தான் அப்பா தெய்வங்களுக்கு விரோதமாக நான் செய்த பெருந் துரோகம் என்கிறார்.வெறுங் களிமண்ணால் உயிருள்ள பிராணிகளைச் செய்ததும் பெருங் குற்றம்: அதுவரையில், செத்து, உயிரற்றுப் பிண்டமாய்க் கிடந்ததை எழுப்பி நடக்கவைத்ததும் பெருங் குற்றம்! அப்பா! எவ்வளவு பெரிய குற்றம் இது! பூலோகத்திலே சாவுள்ள சில ஜந்துக்கள் வந்து குடியேறினவாம்; அதனால் தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கெல்லாம் தெய்வீக அம்சம் குறைந்து விட்டதாம்! ஜூபிட்டருக்கு என்மேல் உண்டான கோபத்தையும் வெறுப்பையும்

பார்த்தால், மனித உற்பத்தியினுல் அமரர்களுடைய நிலை சீரழிந்துபோயிருக்கவேண்டும் என்றுதான் ஒருவனுக்குத் தோன்றும். ராக்ஷசர்களைப்போல் மனிதர்களும் தமக்கு விரோதமாகக் கலகம் செய்து, தம்மோடும் தேவர்களோடும் யுத்தத்துக்கு வந்துவிட்டால் என்ன செய்கிறது என்று ஜூபிட்டர் பயந்துவிட்டார் போல் தோன்றுகிறது. ஆனுல் என்னுலாவது, நான் சிருஷ்டித்த ஜந்துக்களினுலாவது உங்களுக்கு எள்ளளவேனும் பாதகம் ஏற்படவே இல்லை என்பது தெளிவு. இல்லையா, மெர்க்யுரி? ஏதாவது ஒரு உதாரணம் காட்டு போதும். எவ்வளவு அற்பமானுலும் பரவாயில்லை. அப்புறம் நான் வாயைத் திறக்கமாட்டேன். நீங்கள் என்னைப் படுத்திவைத்த பாடெல்லாம் ஒன்றுமில்லை என்று ஒப்புக்கொண்டேன் என்றும் வைத்துக்கொள்ளலாம்.

ஆனுல் மனிதர்களால் தெய்வங்களுக்கு எவ்வளவு நன்மை உண்டாயிருக்கிறது என்பதை நீயே பார். பூமியை ஒருதரம் கவனித்தால் போதும், அப்புறம் நீயே ஒப்புக்கொண்டு விடுவாய். முன்னுலே எவ்வளவு காடு முரடாயும் அவலக்ஷணமாயும் கிடந்தது அது? இப்பொழுது அதிலே அழகிய நகரங்களும் பச்சைப் பசேல் என்று பயிர் செய்த புலன்களும், சிங்காரமான தோப்புக்களும் இருப்பதைப் பார். எவ்வளவு அலங்காரமா யிருக்கிறது! கடலிலே கப்பல்கள் நிறைந்திருக்கின்றன! எத்தனை தீவுகளில் மனிதர்கள் குடியேறியிருக்கிறுர்கள்! எங்கும் பலிபீடங்களும், யாகசாலைகளும், கோயில்களும் மலிந்து கிடக்கின்றன. எங்கே பார்த்தாலும் விழாக்கூட்டம். பொதுவீதிகளிலும் அங்காடிகளிலும் ஒரே ஜூபிட்டர் மயம். நன்ருய்ப் பார். எனக்காக வென்று மனிதர்களைச் செய்தேனுனும் சரி, அல்லது என்னுடைய தனிக்காரியங்களுக்கென்றே அவர்களை நான் வைத்துக்கொண்டிருந்தாலும் சரி, அப்பொழுது என்னை லோபி என்றும் பேராசைக்காரன் என்று வைவதற்கு இடம் உண்டு. ஆனுல் நான் அப்படி ஒன்றும் செய்யவில்லையே. தெய்வங்களாகிய உங்கள் அனைவருக்கும் பொது உடமையாக அல்லவோ அவர்களை வழங்கினேன். இது மட்டுமோ? எங்கே பார்த்தாலும் ஜூபிட்டருக்கு பலி பீடங்கள்; அப்போல்லோவுக்கு பலி பீடங்கள்; உனக்குங்கூடப் பலி பீடங்கள், மெர்க்யுரி! ப்ரொமீத்யுஸ்ஸுக்கு பலிபீடம் எங்கேயாவது பார்த்திருக்கிருயா? ஓரிடத்திலும் கிடையாது. நான் என்னுடைய நன்மையை நாடுபவன்! பிறருக்கு துரோகம் செய்து அவர்களுடைய நன்மைக்குக் கெடுதி செய்து வருகிறேன் என்பதற்கு—ஆகா! எவ்வளவு நல்ல அத்தாட்சி!

இது கிடக்கட்டும், மெர்க்யுரி, இதை மட்டிலும் கவனி, போதும். ஏதாவது ஒரு வேலைதான் ஆகட்டும், இல்லை, ஒரு பொருள்தான் ஆகட்டும், அதைப்பார்த்து 'ஆகா! பேஷ்! இது நன்ருயிருக்கிறதே' என்று சொல்லுவதற்கு ஒருவர் வேண்டாமா? ஒருவரும் நன்ருயிருக்கிறது என்று சொல்லாவிட்டால் நம்முடைய மனத்துக்குத் திருப்தியாயிருக்குமா? அல்லது, நாலு பேர்களுக்குக் காட்டி அவர்கள் மெச்சும்போது நம்முடைய மனத்துக்குத் திருப்தியா யிருக்குமா? எது சந்தோஷமாயிருக்கும்? நான் சொல்லுகிறது புரிந்ததா? நீயே ஊகித்துக்கொள். நான் மனிதரைச் சிருஷ்டிக்காதிருந்தால், பிரபஞ்சத்தினுடைய அழகைப் பார்ப்பதற்குச் சாக்ஷிகள் இருந்திரா. அளவற்ற செல்வத்தை நாம் பெற்றவர்களாயிருந்தும், நம்மைப் பாராட்டுவதற்கு வேறு ஒருவரும் இருந்திரார். அதனுல் நமக்கும் கடைசியாக அதன்மேல் மதிப்பில்லாமல் போயிருந்திருக்கும். அதிர்ஷ்ட வசத்தால் நாம் பெற்றுள்ள சௌகரியங்களைப் பெருத ஜந்துக்கள் பிறந்தில்லாவிட்டால், நாம் யாரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்? "அவர்களைக் காட்டிலும் நாம் எவ்வளவு சிறந்தவர்கள்; அவர்களைவிட நாம் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேம்" என்று எப்படித் தெரிந்து கொள்வது? இத்தனை உபயோகமுள்ள புதிய அமைப்பு ஒன்றை உங்களுக்காக நிருமித்துக் கொடுத்த என்னை நீங்கள் கௌரவமாகக் கொண்டாட அல்லவா வேண்டும்? அதற்குப் பதிலாக என்ன செய்தீர்கள் தெரி

யுமா? உங்களுடைய நன்றியறிதலைக் காட்டுவதற்காக என்னைச் சிலுவையில் அடித்தீர்கள்?

ஆனால், பொறு. நீ சொல்லப்போவது எனக்குத் தெரியும். மனிதர்களுக்குள்ளே மகாபாதகம் செய்கிறவர்களும், சோரம் போகிற வர்களும், கையிலகப்பட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஒருவரோடொருவர் சண்டைபோடுகிற வர்களும், தங்களுடைய சொந்த சகோதரிகளையே பெண்டாகக் கொள்ளுகிற வர்களும், தகப்பனைக் கொலைசெய்கிற வர்களும் இருக்கிறார்களே, என்றுதானே சொல்லப்போகிறாய்? தேவர்களுக் குள்ளே வாழ்ந்ததோ? அவர்களுக்குள்ளே நித்தியப்படியாக இவற்றுள் ஒன்றும் நடக்காதது போல! நம்முடைய தாய் தகப்பன் யார்? சொர்க்கமும் பூமியும்—சொந்த அண்ணனும் தங்கையும். அவர்கள் செய்தது மகாபாவம் என்று யாராவது வாய்திறந்து சொல்லு கிறார்களா? அவர்களை ஒருவரும் குற்றம் சொல்லக்காணேமே.

நீ இன்னு மொன்றுகூடச் சொல்லலாம்; இந்த மனிதர்களைக் கவனிக்கவேண்டியவேலை பெரியவேலையாய்வந்து முடிந்துவிட்டது என்னலாம். இது சரியான காரணமாகுமா? இது சரியானால், 'ஐயோ, எனக்கு ஆட்டுமந்தை ஒன்று இருக்கிறதே. இதைக் காப்பாற்றித் தொலைக்க வேண்டி யிருக்கிறதே' என்று ஓர் ஆட்டிடையன் முறையிட்டால் அதுவும் சரிதான். நிஜந்தான். மனிதரைக் காப்பாற்றுவது ஒரு வேலைதான். ஆனால்; அந்த வேலையோடு சந்தோஷமும் கூடவே கலந்துகிடக்கிறது. இது தெய்வா தீனமாகக் கிடைத்த காரியம். மனத்துக்குப் பிடிக்காத பொழுது போக்காகவும் இது இல்லை.

நாம் மேல்பார்ப்பதற்கு ஒருவருமில்லையானால், நாம் என்னதான் செய்வோம்? வெறுமனே சோம்பேறித் தனமாய் உட்கார்ந்து கொண்டிருப்போம். அமிர்தத்தைக் குடித்துக்கொண்டேயிருப்பதைத் தவிர நமக்கு வேறு வேலையொன்றும் இராது. பொழுது போகாத தோஷத்தால் நாம் அளவுக்குமிஞ்சி அமிர்த பானம் செய்வோம்: தெவிட்டிக்கு முட்டித் திண்டாடுவோம். எல்லா வற்றையும்விட எது என் மனத்தை மிகவும் புண்படுத்துகிறது, தெரியுமா? என்னுடைய சிருஷ்டியிலே பெண்களையும் சிருஷ்டித்து விட்டேன் என்று நீங்கள் செய்யும் பெரும் புகார் தான். ஆனாலும் பெண்கள்மேலே தான் உங்களுக்குப் பற்று அதிகம். ஆகையால் மாடுகளாகவும், அன்னங் களாகவும், ஸாடிர்களாகவும் மாறுவேடம் பூண்டு, திரும்பத் திரும்ப பூமிக்கு இறங்கிப் போகிறீர்கள். போய் அவர்களிடத்திலே தெய்வங்களை உற்பத்தி செய்கிறீர்கள்.

ஆனால், உன் கக்ஷி இப்படி இருக்குமோ என்னவோ? நீ செய்தமாதிரியில்லாமல் வேறெந்த மாதிரியாக வேண்டுமானாலும்' மனிதர்களைச் செய்திருக்கலாம்: இந்த மாதிரியாகச் செய்ததுதான் தவறு என்பாயோ என்னவோ? வடிவங்கள் எல்லாவற்றிலும் மேலான வடிவம் எது? தெய்விக வடிவம் அல்லவா? அதைக் காட்டிலும் சிறந்த வடிவம் எனக்கு எங்கிருந்து கிடைக்க முடியும்?

இல்லை. பகுத்தறிவில்லாத, மிருகப் பிராயமான நிலம் வாழ்பிராணிகளாக அவர்களைச் சிருஷ்டித் திருக்கவேண்டும் என்கிறாயா? அப்படி நான் செய்திருந்தால், தெய்வங்களாகிய உங்களுக்கு அவர்கள் எப்படிப் பலியிட்டு, உங்களை ஆராதிக்க முடியும்? நீங்கள் வாயால் என்ன சொன்னாலும் சரி, வாஸ்தவத்தில் அவர்கள் செய்வது உங்களுக்கு மிகவும் ஆனந்தமாகத்தான் இருக்கிறது. பக்தியுள்ள எதியோப்பியர்கள் நூறுமாட்டைப் பலி கொடுத்து உங்களுக்கு விருந்து தொடங்கினால்போதும். கப்பலேறிப் போகவேண்டுமே; கடலைத் தாண்டவேண்டுமே; அதுசிரமாயிருக்குமே என்பதைப் பற்றி நீங்கள் அதிகமாக யோசிப்பது கிடையாது. உண்டா? இருந்தும், என்னை—உங்களுக்கு இத்தனை வழிபாடுகளையும், பலிகளையும் சம்பாதித்துக் கொடுத்த என்னைச் சிலுவையில் அடிக்கும்படி தண்டித் திருக்கிறீர்கள்!

மனிதர்களைக் குறித்துச் சாட்டிய குற்றச் சாட்டுக்கு இவ்வளவு பதில் சொன்

னது போதும். இனி, உனக்கு ஆக்ஷே பணை இல்லையானால்—நெருப்பைக் கள வாடிய மகாபாவத்தைப் பற்றிச் சொல்லு கிறேன். நான் உன்னைக் கேட்கிறேன், தெய்வங்கள் மேலாணை! சத்தியமாகச் சொல்லு. மனிதருக்கு ஏதோ துளி நெருப்புக் கிடைத்துவிட்டதனால், நம்மி டம் இருந்த நெருப்பிலே ஏதாவது குறைந்து போய்விட்டதா? குறைந்தது என்று உனக்குத் தெரியுமா? இதிலே நீ ஒன்றும் பாசாங்கு செய்ய முடியாது. எடுக்க எடுக்கக் குறையாத குணம் உள்ள தல்லவா நெருப்பு? அதைக்கொண்டு இன் னொன்றை மூட்டினால் அது அவிந்து விடுமா? ஒருநாளும் அவியாது என்று தான் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். தப்பா? ஆகையால் உங்களுக்கு எள்ளளவு கெடுதியும் ஏற்படாம லிருக்கும்போதும், அது இல்லையே யென்று திண்டாடுகிறவர் களுக்குத் துளி கொடுப்பது உங்களுக்குத் தாங்கவில்லையானால் அதைவிட மானக் கேடு வேறு வேண்டாம். வெறும் பொறு மையைத் தவிர வேறில்லை. நீங்களோ தெய்வங்கள். ஆகையால், சகலவிதமான நன்மைகளையும் தாராளமாக அளிக்க வேண்டியவர்கள். முணுமுணுப்பும் அதிருப்தியும் உங்களை எட்டிக்கூடப் பார்க்கலாகாதே.

உங்களிடமிருந்த நெருப்பு முழுவதை யுமே நான் அடித்துக்கொண்டு போய்விட் டேன், ஒரு பொட்டு நெருப்புக்கூட உங்க ளுக்கு மீதி வைக்கவில்லை என்று வைத் துக் கொள்ளுங்கள். அப்பொழுதுங்கூட உங்களுக்கு என்ன நஷ்டம் வந்து விடும்? உங்களுக்கு நெருப்பினால் ஆகவேண்டியது என்ன? உங்களுக்கோ உடம்பு குளிருவ தில்லை; நீங்கள் குளிர்காய வேண்டிய அவ சியமில்லை. அமிர்தத்தை வேகவைத்துச் சாப்பிடுகிறீர்களா? அதுவுமில்லை, உங்க ளுக்கு ஏதாவது விளக்கு வேண்டுமா? வேண்டவே வேண்டாம். அடுத்தாற் போல் மனிதரைப் பாருங்கள். அவர்களுக் குக் கணக்கில்லாத காரியங்களுக்கு நெருப்பு இன்றியமையாத அவசியமா யிருக்கிறது. முக்கியமாக, பலி கொடுப் பதற்கு அது வேண்டி யிருக்கிறது. அவர்களுக்கு நெருப்பு இல்லாவிட்டால், எப்படிப் பிராணிகளைப் பலியிடமுடியும்? அவற்றின் நிணங்களின் மணம் வீதிகள் தோறும் எப்படிக் கமழும்? அவர்கள் தூபம் எரிப்பது எப்படி? பலி பீடங்க ளிலே பெரிய பெரிய இறைச்சித் துண் டங்களை வாட்டுவது எப்படி? உங்களுக்கு அவை நிரம்பப் பிடிக்கின்றனவல்லவா? பலிகளினின்று சுழன்று எழும் அடர்ந்த புகையின் மணத்தை உறிஞ்சுகிறீர்களே, உங்கள் மனத்திற்கு உகந்த சிறந்த நல் விருந்தாக அதை மெச்சிக்கொண்டாடு கிறீர்களே, ஆகையால், இந்தக் குற் றத்தை என்மேல் சுமத்தும்போது, உங்க ளுக்குப் பிரியமான காரியத்துக்கு விரோத மாக அல்லவோ நடந்து கொள்ளுவதாகும்? இது இருக்கட்டும்.

இன்னும் ஒன்று எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. சூரியனை வெறுமனேவிட் டிருக்கிறீர்களே. மனிதர்கள் வாழுமிடத் திலே பிரகாசிக்கலாகாது என்று சூரிய னைத் தடுக்காமல் இருக்கிறீர்களே. சாதா ரண நெருப்பைவிட அவனுடைய நெருப்பு அதிகமான தெய்வத்தன்மை பொருந்திய தாயிற்றே. இதில் சந்தேகம் உண்டா? வெறும் நெருப்புத்தான் என்று வைத்துக் கொண்டு பார்த்தாலும், அளவில் மிகப் பெரிய நெருப்பாயிற்றே. 'எங்களுடைய சொத்தை நீ பாழாக்குகிறாய்' என்று அவ னையும் உங்களுடைய நீதி ஸ்தலத்தில் ஏன் கொண்டு வந்து நிறுத்தவில்லை? அயர்ந்து விட்டீர்களா? தெரியவில்லை.

நான் பதில் சொல்லி முடித்தாய் விட்டது. ஆனால் மெர்க்யுரி! வல்க்கன்! உங்கள் இரண்டு பேர்களையும் ஒன்று கேட்டுக்கொள்ளுவேன். நான் சொல்லிக் கொண்டே வந்த விஷயங்களில் ஏதாவது ஒன்றில் தவறிப் பேசியிருக்கலாம். அப்படி ஏதாவது தவறாகப் பேசினேன் என்று உங்களுக்குத் தோன்றினால், அதைத் தயவு செய்து திருத்தமாக, நியாயமாக எடுத்துச் சொல்லி மறுக்க வேண்டும். மறுத்தால், நான் இன்னும் ஒரு முறை பதில் சொல்ல முடியும். சொல்லுங் கள்!

மெ: நீ சாமர்த்தியசாலியான வழக்காளி. உன்னைப் போன்றவர்களோடு போராடுவது லேசான காரியமில்லை. ப்ரோமீத்யுஸ், இப்பொழுது நல்ல வேளையாக நீ சொன்னதை ஜுபிட்டரும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. இதைப்பற்றி நிச்சயமாக நீ சந்தோஷப்பட வேண்டும். ஏன் தெரியுமா? நீ சொன்னது அவர் காதில் பட்டிருந்தால், சந்தேகமில்லாமல், ஒரு கழுகில்லை, பதினறு கழுகுகளைப் பிடித்து அனுப்பியிருப்பான்—உன் குடலைப் பிடுங்கி எடுக்க. பேருக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுவது போல் பேசினய்; ஆனல், வாஸ்தவத்தில், அவரை மிகவும் கடுமையாகத் தாக்கிக் குற்றஞ்சாட்டினய். இவ்வளவிலும் ஒன்றே ஒன்று தான் என்னல் நம்பமுடியவில்லை. அத்தனை ஆச்சரியமாயிருக்கிறது. நீயோ திரிகாலக்ஞானி. இன்ன நடக்கும் என்பதைத் தெரிந்தவன். அப்படியிருந்தும், 'நமக்கு இந்தத் தண்டனை வரும்' என்று நீ தெரிந்து கொள்ளவில்லையே.

ப்ரோ: எனக்கு அது நன்ருகத் தெரியும். அது மட்டுமன்று; என்னுடைய வேதனை தீர்ந்துவிடும் என்பதும் நன்ருகத் தெரியும். வெகு சீக்கிரம் உங்களுடைய தோழன் ஒருவன் தீப்ஸியிலிருந்து இங்கே வருவான். என்மேல் வந்து உட்கார்ந்து கொண்டு என்னைக் கௌவப் போகிறது என்ருயே அந்தக் கழுகின் மேல் அம்பை எய்தி, அதைக் கொன்று தள்ளுவான்.

மோர்: "உன்னுடைய வார்த்தை பலிப்பதாக! நீ மீண்டும் சுதந்திரம் பெற்று, எங்களோடு கூடப் பந்தியில் இருந்து விருந்து உண்பதைக் கண்டு மகிழும் பாக்கியம் எனக்குச் சீக்கிரம் கிடைப்பதாக!" என்பதே என் பிரார்த்தனை. ஆனல் ஒன்று; எங்களுக்கு உணவைப் பகிர்ந்து கொடுக்கும் வேலை மட்டில் உனக்குக் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவே மாட்டேன்.

ப்ரோ: நீ ஒன்றையும் பற்றிக் கவலைப் படாதே மெர்க்யுரி! நான் மீண்டும் உங்களோடு கூடப் பந்தியில் உட்கார்ந்து, உல்லாசமாக உண்டு குடித்துக் களிக்கப் போகிறேன். நான் ஜுபிடருக்குச் செய்த ஓர் உபகாரத்துக்காக—அது அவ்வளவு அற்பமான உபகாரமுமில்லை—ஜுபிட்டர் என்னை விடுதலை செய்யப்போகிருர்.

மோர்: அந்த உபகாரம் எப்பேர்ப்பட்டது என்று கேட்கலாமா?

ப்ரோ: உனக்குத்தான் தீட்டிஸ்ஸைத் தெரியுமே, மெர்க்யுரி!-ஆனல், இப்பொழுது அதைப்பற்றிச் சொல்லக்கூடிய சமயம் இல்லை. அந்த இரகசியத்தை நான் காப்பாற்றி வைத்திருந்தால்தான் எனக்கு விடுதலை கிடைக்கும்.

மோர்: அப்படியானல்,—இரகசியமாக வைத்தால்தான் பிரயோஜனம் என்று இருக்குமானல்—அதைப் பத்திரமாக வைத்துக்கொள், டைட்டன்! சரி. வல்க்கன் நாம் - இனிமேல் போகலாம், வா, அதோ வருகிறது. கழுகு தெரிகிறது. இந்தப் பக்க மாகத்தான் பறந்து வருகிறது. —தைரியமாயிரு. யாரோ தீப்ஸ்காரன் என்ருயே, அவன் சீக்கிரமாக வருவானக! இந்தப் பொல்லாக் கழுகின் வாயிலிருந்து உன்னைச் சீக்கிரம் விடுவிப்பானக!

சிறு கதைச் சக்கரவர்த்தி

# ஆண்டன் செஹாவ்*

[புரசு பாலகிருஷ்ணன், எம். பி. பி. எஸ்.]

## பீடிகை

மாந்தர்களின் ஆசாபாசங்களை விளக்குவதில் முதல்வர் ஷேக்ஸ்பியர்; கவிகளில் சிரேஷ்டர்கள் வால்மீகியும் ஹோமரும்; நவீனத்தில் நிகரற்றவர்கள் டால்ஸ்டாயும் டாஸ்டாயெவ்ஸ்கியும்; சிறு கதை உலகில் சிறந்தவர்கள் செஹாவும் மாபஸாண்டும்.

சிறு கதை நாவலைக் காட்டிலும் உருவத்தில் சிறியது. ஆனால் இலக்கிய மேதையில் செஹாவ் டால்ஸ்டாய்க்குக் குறைந்தவரல்லர். இதை டால்ஸ்டாய் மகானே உணர்ந்து கூறியிருக்கிறார்:

"செஹாவின் கலை-நுட்பமே அலாதி. இக் காரணத்தினால் அவரை இதர ரஷ்ய ஆசிரியர்களுடன் சேர்த்துச் சொல்ல முடியாது. டர்கனீவும் டாஸ்டாயெவ்ஸ்கியும் நானும் சம்பிரதாய முறையைப் பின்பற்றுகிறோம். செஹாவோ ஒரு தனி முறையைக் கையாளுகிறார். அவர் வரைவது எல்லாம் ஏகாக்கிர சித்திரம் (impressionist picture). அங்கும் இங்குமாக அவர் சில கோடுகளை வெகு அலட்சியமாய்த் தீட்டிவிடுகிறார். அவைகளை தனித் தனியே நோக்கும்போது அவை பரஸ்பர சம்பந்தம் இல்லாதவைபோல் நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் நாம் நமது சொந்த எண்ணங்களை மறந்துவிட்டு, எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துப் பார்ப்போமானால்—ஓர் ஆச்சரியமான சித்திரத்தைக் காண்கிறோம்; கண்டபின் அதை மறக்க இயலாமல் இருக்கிறோம். செஹாவைப்பற்றி மற்றொரு விஷயம். அவருடைய கதைகளை நாம் பல முறைகள் திருப்பித்திருப்பிப் படிக்கலாம். அவர் கதை அமைப்பில் மேதாவி என்பதற்கு வேறொரு அத்தாட்சி வேண்டியதில்லை."

டால்ஸ்டாயின் மேற்படி வார்த்தைகள் செஹாவின் தனிச்சிறப்பையும் சிறுகதையின் நுட்பத்தையும் ஒருங்கே விளக்கிக் காட்டுகின்றன. ஒருமேதாவியால் தான் இவ்விதம் விஷயத்தைப் பளிச்சென்று, சில வார்த்தைகளிலேயே சொல்லி முடித்து விடமுடியும்.

---

## செஹாவின் சுயசரிதை

[1884 - ம் வருஷம் பட்டம் பெற்ற டாக்டர்கள் ஒரு பரஸ்பர உதவிச் சங்கம் ஏற்படுத்திக் கொண்டனர். அதன் பொக்கிஷக்காரர், டாக்டர். ஜி. ஐ. ரொஸ்ஸோலிமோ (அவ்வருஷத்திய டாக்டர்களுள் ஒருவரான) செஹாவிற்கு அவருடைய சுய சரிதையை வேண்டி ஒரு கடிதம் எழுதினார். அதற்கு (1899 - ம் வருஷம் அக்டோபர் 11 - ம் தேதி கொண்ட கடிதத்தில்) செஹாவ் பின் வருமாறு பதிலளித்தார்: "என் சுய சரிதையா வேண்டும்? எனக்கு சுய சரிதைக் கிருமியைக் கண்டாலே பயம்! மற்றவர்கள் என்னைப் பற்றி எழுதும் விருத்தாந்தங்களைப் படிப்பதே எனக்குக் கிலேசம் உண்டாக்குகிறது. அவைகளை நானே எழுத வேண்டுமா? சரி, என்னைப் பற்றிச்சில முக்கியக் குறிப்புகளை மாத்திரம் ஒரு தனிக் காகிதத்தில் எழுதி, இத்துடன் அனுப்புகிறேன். அதற்குமேல் என்னால் எழுத முடியாது."]

"ஆண்டன் செஹாவ் என்ற நாமதேயம் கொண்ட நான் 1860 - ம் வருஷம் ஜனவரி 17-ம் தேதியன்று டாகன்ராகில் பிறந்தேன். முதலில் நான் கான்ஸ்டான்டின் மாதாலய கிரீக் பள்ளியிலும், அதன்பிறகு டாகன்ராக் இலக்கணப் பள்ளிக் கூடத்திலும் வாசித்தேன். 1879 - ம் வருஷத்

---

* சமீபத்தில் வெளிவரப்போகும் புஸ்தகத்திலிருந்து இரு அத்தியாயங்கள்.



தமிழ் ... நிலையம்

தில் தான் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் வைத்தியம் படிக்கச் சென்றேன். அச்சமயம் எனக்கு உயர்தரப் படிப்பைப்பற்றி அதிகமாய்த் தெரியாது. எக்காரணம் கொண்டு நான் வைத்திய படிப்பு எடுத்துக் கொண்டேன் என்று எழுத என்னால் இயலவில்லை. ஆனால் நான் ஏன் அதை எடுத்துக் கொண்டேன் என்று பின்னர் ஒருசமயமும் நான் வருந்தவில்லை. அது முற்றிலும் என் நன்மைக்காகவே அமைந்திருந்தது.

“வைத்தியப் படிப்பின் முதல் வருஷத்திலேயே நான் தினசரிகளுக்கும் வாரப் பதிப்புகளுக்கும் எழுதத் தொடங்கிவிட்டேன். பொழுதுபோக்காயிருந்தது. சீக்கிரமே முக்கிய ஸ்தானம் பெற்று, ஒரு தொழிலாய் மாறிற்று. 1888-ல் எனக்குப் பூஷ்கின் பரிசு கிடைத்தது. 1890-ல் நான் ஸாகலீன் தீவுகளுக்கு, அங்குள்ள நம் கைதிகளின் நிலையை விசாரித்து எழுதுவதற்குச் சென்றேன். கோர்ட்டு அறிக்கைகள், விளம்பரங்கள், மதிப்புரைகள், இலக்கியத்துண்டுகள், மேலும் தினசரிகளுக்குத் தினந்தோறும் நான் எழுத வேண்டியிருந்த பலசரக்கு விஷயங்கள், இவைகளைத் தவிர, நான் சென்ற இருபது வருஷங்களில் குறையாமல் 300 புஸ்தகங்கள் எழுதியிருக்கிறேன். இவைகள் அநேகமாய்க் கதைகளும் நாவல்களும். இத்துடன் நான் நாடகங்களும் எழுதியுள்ளேன்.

“என் இலக்கிய மனப்பான்மை என் வைத்தியப் பயிற்சியினால் பரிபக்குவமடைந்தது என்பது எனக்குத் திண்ணம். என்னைச் சுற்றி நான் கண்டிராத எவ்வளவு விஷயங்கள் நான் கவனித்துப் பார்ப்பதற்கு இருந்தன என்று நான் கண்டுகொண்டேன். என் அறிவு விருத்தியாயிற்று. இந்தப் புது அறிவு ஓர் எழுத்தாளனுக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை டாக்டராயிருக்கும் ஒருவனால் தான் முழுவதும் அறிந்துகொள்ள முடியும். வைத்திய சாஸ்திரங்களால் என் இலக்கியப்போக்கு நேர்மையாயிற்று. சாஸ்திர ஞானத்தால் நான் பல இலக்கியத் தவறுகளிலிருந்து விலகிக் கொண்டேன். பிரகிருதி விஞ்ஞானங்களுடனும் ஆராய்ச்சி முறைகளுடனும் எனக்குப் பரிசயம் ஏற்பட்டதனால், நான் எப்பொழுதும் வஸ்துக்களில் அடங்கியுள்ள உண்மைக்கு அடிப்படலானேன். முடிந்தவரையில், நான் எதைப்பற்றி எழுதினாலும், அது அவ்விஷயத்தின் உண்மைத் தத்துவத்தை எவ்வளவு தூரம் அனுசரிக்கிறது என்பதைக் கவனித்துத்தான் எழுதினேன். ஒரு வஸ்துவின் உண்மை ஸ்வபாவத்திற்குப் பொருத்தமாய் என்னால் எழுத முடியாவிடில், நான் அதைப் பற்றி எழுதாமலேயே இருந்துவிடுவேன். ஆனால் ஒரு விஷயம். கலை சிருஷ்டிகளில் எப்பொழுதுமே உண்மையைப் பொருத்தி எழுத முடியாது. உதாரணமாக, நாடக மேடையில் விஷத்தினால் விளையும் மரணத்தை சாஸ்திர உண்மையுடன் காண்பிக்க முடியாது. ஆனால் அதைக்காட்டும் கலை-சம்பிரதாயத்திலும் கூட சாஸ்திர உண்மை மறைந்திருக்க வேண்டும். அதாவது, உண்மை நாடக மேடையில் காட்டப்படாவிடினும், காட்டப்பட்ட முறை சம்பிரதாயத்தை ஒட்டித்தான் என்றும், ஆசிரியனுக்கு அவ்வுண்மை தெரியாத காரணத்தினால் இல்லை என்றும் சபையோர்களுக்குத் தெரியவேண்டும். சாஸ்திரத்தின் ஸ்திரமான உண்மைகளைக் கலை சிருஷ்டிகளில் கவனிக்க வேண்டியதில்லை என்பவர்களில் நான் ஒருவன் அல்ல. சாஸ்திரத்தினால் மாத்திரம் உண்மையை விளக்க முயலும் மனிதர்களுக்கும் நான் தோழனல்ல.”




## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

### தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

# கடும் புயலில் ஓர் குடிசை

[ரா. சந்திரசூடன், பி. எஸ். ஸி. புதுடில்லி.]

'அவன் யமனையே சாப்பிட்டு ஜீரணித்து விடுவானே' என்று சொல்வதுண்டு, அஞ்சா நெஞ்சமும் வீரமும் கொண்ட எவரையாவது புகழ்ந்து. அயர்லாந்தின் தென்பகுதியான ஐரிஷ் சுதந்திரநாடு (Irish Free State) அல்லது ஈராவின் (Eire) பிரதம மந்திரியாக இருந்து வரும் ஐம்பத்தெட்டு வயதினரான ஸ்ரீ ஈமன் டேவாலிரா அப்படிப்பட்ட ஒருவர். பிரிட்டிஷார் முன்னாட்களில் எவ்வாறு அமெரிக்கக் குடியேற்ற நாட்டுடன் சண்டையிட்டு அதை இழந்தனரோ, அதேபோல் ஐரிஷ்மக்களிடம் அவர்கள் மனோபாவத்தை அறிந்து அவர்களுடன் ஒத்துழைத்துத் தங்களுடன் பிணைத்து வைத்திராது, அவர்களுடனும் சண்டையிட்டுத் தலைகுனிந்தனர். இன்று வரை அவர்களுக்குப் புத்திதெளிவு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. அதேமனப்பான்மையைப் பாமர இந்திய நாட்டினரிடமும் இன்று காண்பித்து வருகின்றனர். ஸ்ரீ டேவாலிரா இன்று என்ன சொல்கிறார் என்றால்: "பிரிட்டிஷார் எமது பிரஜைகளிடம் பெரியதன்மை, மதிப்பு, சமஉணர்ச்சி முதலியன காண்பித்துச் சிநேக பாவத்துடன் நடவாது, முரட்டுத்தனமாக அடக்கி ஆள முயற்சித்தனர். அதனால்தான் இந்நாட்டினருக்கு அவர்களிடம் நட்பு குன்றி, சிறிதுசிறிதாக விலகலூக்கம் வளர்ந்தது" என்பதே. மேலும் அவர் கூறுகிறார்: "எங்களுக்கு இங்கிலாந்தின் உதவியும், நட்பும், கலந்து உறவாடுதலும் வேண்டுவது என்னவோ நிச்சயந்தான். ஆனால் அவர்கள் மமதையினால் எங்களை மதிப்பதில்லை. எங்களைக் கேவலம், தங்களுக்கு எவ்விதத்திலும் கீழ்த்தரமான குடிமக்கள் என்று கருதுகின்றனர். நாங்கள் எவ்விதத்திலும் அவர்களுக்குத் தாழ்ந்தவரன்று. என்ன விதமான தியாகமும் நாங்கள் செய்யத் தயார் எங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள."

அவரவர் நாட்டிற்கு விதேசிகளான நெப்போலியன், ஸ்டாலின், ஹிட்லர் போல ஈமனும் அன்னிய பிறப்பு கொண்டவர். அதாவது, தான் பிரதமஸ்தானம் வகிக்கும் நாட்டில் பிறந்தவரன்று. ஸ்ரீ டேவாலிரா சுதந்திர தாகத்தை தாய் வயிற்றிலிருந்து வெளிவந்து கண் திறக்கும்போதே பருக ஆரம்பித்தார். நியூயார்க் நகரத்தில், இவரது தகப்பனார் ஸ்பானிய தேசத்தவர். அமெரிக்காவில் வெகு நாட்களுக்குமுன் சென்று குடியேறி, நியூயார்க்கில் பாட்டு கற்றுக்கொடுத்தும், சிற்ப வேலை செய்தும் பொருளீட்டி ஜீவனம் செய்து வந்தார். அதே நகரத்தில் உபாத்தியாயினியாக இருந்த ஒரு அயர்நாட்டு (Irish) மாதினை மணந்தார். இவர்களுள் விவாகம் நடந்து சரியாக ஒரு வருடம் தாண்டியது. நம் கதாநாயகர் இப்பூவுலகை எட்டிப் பார்த்தார். பின் இருவருடங்களுக்கெல்லாம் அக்குழந்தை தன் தந்தையைப் பறிகொடுத்தது. தாய் வேறு மணம்புரிந்தார். தன்னிடம் வைத்துப் பராமரிக்க இயலாமல், குழந்தையை தன் பிறந்த நாட்டில் தன் சகோதரரிடம் அனுப்பி வைத்தனர். இவ்வாறு இளம்பிராயத்திலேயே "தேவ்" நாட்டுப்புர வளர்ப்பில் நுழைந்து நாடு எங்கும் மிதந்திருந்த வேளாளர்களின் மனக் கசப்பையும், அப்பொழுதைய அரசாங்கத்திடம் கொண்ட வெறுப்பையும் முகர்ந்து வளர்ந்து வந்தார். முதலில் இவர் கத்தோலிக்க பாதிரிமார் தொழில் மேற்கொள்ள எண்ணியிருந்தார். வயதான பின்னர் இந்த மனப்பான்மை மாறிற்று. இவர் சிறுவயதிலிருந்தே கணித சாஸ்திரத்தில் மிக்க விற்பன்னம் காண்பித்து வந்தார். இதனால் சர்க்கார் உதவிச் சம்பளமும், பரிசுகளும் பெற்று வாசித்து வந்தார். டப்ளினில் உள்ள பிரதம சர்வகலா சாலையில் படிப்பு முடித்துப் பட்டம் பெற்றுப்பின் கணித

போதகாசிரியராகவும், தேசியத் தொழிலிலும் ஈடுபட லானுர்.

1916-ல் ஏப்ரல் மாதத்தில் ஐரிஷ் மக்களின் சுதந்திரதாகம் மிகுந்தது. அப்பொழுது முன் மகாயுத்தம் நடந்தவண்ண மிருந்தது. இங்கிலாந்துதான் அதில் மும்முரமாக ஈடுபட்டுத் தன் மற்றைய வியவகாரங்களைக் கவனிக்க முடியாத திக்கிலிருந்ததே. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிக் கிணங்க, அச்சமயம் பார்த்து அயர்லாந்தின் தென்ளுடுகளில் ஆயுதப் புரட்சி ஏற்பட்டது. தலைநகரமான டப்ளின் புரட்சிக்காரர்களிடம் கிட்டத் தட்ட ஒரு வாரம் இருந்தது. பின்னர் பிரிட்டிஷார் தீவிர முயற்சி செய்து அப் புரட்சியை ஒருவாறு அடக்கினர். புரட்சிக் கட்சியின் முக்கிய தலைவர்களுள் கடைசியாகக் கைது செய்யப்பட்டவர் யமன் போன்ற நம் டேவாலிராவே. தனது புரட்சித் துருப்புகளின் நிலைமை மோசமாயிற்று, இனி பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்ப்பதில் கடுகளவும் பிரயோசனமில்லை, தங்களுக்குச் சேதம் தான் ஏற்படும் என்று தெளிந்தவுடன், "தேவ்" தன் கோட்டையைவிட்டு வெளி வந்து தன்னை எதிர்த்துக்கொண்டிருக்கும் ஆங்கில தளபதியை நெருங்கி, "என்னை இஷ்டப்பட்டால் சுட்டுக்கொன்று விடுங்கள். என் தலைமையின் கீழிருக்கும் புரட்சிக்காரர்களைத் தயவு செய்து மன்னித்து விட்டுவிடுங்கள்" என்று எவ்வளவோ மன்றாடினர்.

புரட்சித் தலைவர்களுக் கெல்லாம் சிரச்சேதம் கிடைத்தது. ஆனல் டிவாலிரா அமெரிக்கப் பிறப்பானதால் இதிலிருந்து தப்பினர். அத் தருணம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதவியைப் பிரிட்டன் மகா யுத்தத்தில் தன் சார்பாக மிகவும் தீவிரமாக வேண்டிநின்றது. இந்தத் தாக்ஷண்யத்தினுல் "தேவ்" ஆயுள் பரியந்த சிக்ஷையுடன் இலேசாக விடப்பட்டார்.

1919-ல் ஒரு நாள் காலை லிங்கன் (Lincoln) சிறைக்கூடத்தில் இவருடைய அறையைக் காவற்காரர்கள் எட்டிப் பார்த்தனர். கைதியைக் காணவில்லை. பக்ஷி பறந்தோடி விட்டது. கைதி சிறையிலிருந்து வெளியேறி நேரே அயர்லாந்து சென்று அங்கு ஐரிஷ் தேசியப் புரட்சிக் கட்சியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அதற்கடுத்த இரண்டு வருஷங்களுக்கு பிரிட்டிஷ் போலீஸ், ராணுவப் படைகளைத் தன் ஆட்களுடன் இவர் எதிர்த்து வந்தார். இதன் மத்தியில் நியூயார்க் சென்று தங்கள் கட்சிக்காகப் பிரசாரம் செய்து அதனது நிதிக்கு 10 லக்ஷம் பவுன்கள் (சுமார் 150 லக்ஷம் ரூபாய்) சேகரித்துத் திரும்பினர்.

ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் பிரிட்டனில் பிரதம மந்திரியாக இருந்தபொழுது 1921-இல் அவருடைய பிடிவாதத்தில் ஐரிஷ் பிரச்னையைச் சமரசமாகத் தீர்க்க முயற்சி ஏற்பட்டது. பிரிட்டிஷார் அழைப்பின்மீது ஸ்ரீ டேவாலிரா தன் கட்சியிலிருந்து சிலரைப் பொறுக்கிக் கட்சியின் பிரதிநிதிகளாய் அதன்பொருட்டு வாதம் செய்ய அனுப்பினர். ஆனல் அவர்கள் திரும்பிக் கொணர்ந்த ஷரத்துக்கள் அயர்லாந்தைப் "பாகிஸ்டான்" செய்யத்தான். அல்ஸ்டர் என்ற ஆறு வட மாகாணங்களைப் பிரித்துப் பிரிட்டன் தன் நேர்ப்பார்வையிலும், நிர்வாகத்திலும் வைத்துக் கொண்டது. தெற்கு பாகமான 26 மாகாணங்களுக்குச் சில அம்சங்களில் சுயநிர்வாக மளிக்கப்பட்டது. இது ஈமனுக்குப் போதவில்லை. "இதில் உப்புமில்லை, சப்புமில்லை" என்று அதை உதறி நிராகரித்து விட்டார். ஆனல் ஸ்ரீ வில்லியம் காஸ்கிரேவ் (Mr. W. Cosgrave) என்பவர் இத் தானத்தை ஏற்று நாட்டின் பிரதம மந்திரியாகிப் புதிய இந்த அரசியல் திட்டத்தை நடத்தலானுர். ஸ்ரீ டேவாலிரா சட்ட சபையில் தீவிர எதிர்ப்புக் கட்சித் தலைவராக விளங்கினர். இவ்விருவர் கட்சிகளுக்கும், கட்சிகளை ஆதரிப்போருக்கும் நாளடைவில் விரோதம் முற்றி நாட்டில் கலகம் உற்பத்தியாயிற்று.

பத்து வருடங்கள் இம்மாதிரி சென்றன. மறுபடி ஐரிஷ் மாகாணங்களுக்குப் பொதுத் தேர்தல் நடந்தது. டேவாலிராவின் குடியரசுக் கூட்டம் தேர்தலில் ஏராளமான வெற்றி பெற்றது. டேவாலிரா

வின் கட்சி சட்ட சபையில் மிகப் பெரிய தாக இருந்ததால், அரசாங்கத்தை எடுத்துக் கொண்டது. டேவாலிரா கட்சித் தலைவரா யிருந்ததன்மையால் பிரதம மந்திரி யானர். இவ்வாறு அவருக்கு 30 லக்ஷம் ஐரிஷ் மக்களுக்குத் தலைவராய்த் தொண்டு புரியும் சந்தர்ப்பம் கிட்டிற்று.

இவர் ராஜ்யாதிகாரம் பெற்றதுமுதல் சிறிது சிறிதாகப் பிரிட்டிஷாருக்குத் தன் நாட்டின் மீதிருந்த ஆதிக்கக் கட்டுப் பிரியைத் திரிதிரியாகப் பகுத்து அறுத்தெரிந்தார். ஆங்கில மன்னருக்கு ஐரிஷ் மந்திரிகள் அதுகாறும் செலுத்திவந்த ராஜவிச்வாசப் பிரமாணத்தை ஒழித்தார். பின்னர் தங்கள் தலைநகரமான டப்ளின் (Dublin) கண் இருந்த பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களைப் படிப்படியாகக் குறைத்தார். நாளடைவில் ஐரிஷ் நாடு இவர் தீவிர முயற்சியில் சுய ஆதிக்கம் கொண்டு சுதந்திர நாடாயிற்று. தற்பொழுதுள்ள அரசியல் திட்டத்தில் பிரிட்டன் பெயராவது தற்பொழுதைய பிரிட்டிஷ் மன்னரின் பெயராவது குறிப்பிடவே இல்லை.

ஆனல் எட்டாம் எட்வர்ட் (தற்பொழுது விண்ட்ஸர் பிரபு) மகுடத்தைத் துறக்கும் பொழுது பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஐரிஷ் நாட்டிற்கும் சேர்ந்து ஒரு சட்டம் வகுத்தது. அதன்படி ஐரிஷ் நாட்டிற்கு வெளிநாட்டு விஷயங்களை நிறுவவும், ராஜ தந்திரிகளை நியமிக்கவும், எட்டாவது எட்வர்ட் மன்னரின் வார்சுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. இதை ஐரிஷ் நாடு ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. அதனல் இந்தச் சட்டம் அந் நாட்டை எவ்வாறு பாதிக்கும், இச் சட்டத்தைப் பிரிட்டிஷர் அந் நாட்டின்மீது அமுலுக்குக் கொணர எவ்வளவு தூரம் சாத்தியம் என்று இன்னும் நிச்சயமாகத் தெளியவில்லை. மேற்சொன்ன சட்டம் தவிர ஐரிஷ் நாடு உள்நாட்டு வெளிநாட்டு விஷயங்களில் தற்பொழுது பூரண சுதந்திரம் கொண்டுள்ளது. ஐரிஷ் நாடு இன்னும் பூகோள அரசியல் படங்களில் சிவப்பு வர்ணம் தீட்டப் படுவது மேலே சொல்லப்பட்ட தர்க்கப் பிரச்னை கொண்ட பலவீன மான ஒரு சட்டத்தைக் கொண்டுதான்.

பிரிட்டிஷார் அயர்லாந்தைப் ‘பாகிஸ்தான்’ செய்ததன் தாத்பர்யம் என்னவெனில் அல்ஸ்டர் என்னும் வடமாகாணங்களில் வசிப்பவர் பெரும்பாலர் ஆங்கில மாதா தொழுமுறையைக் கொண்டவர். (Protestants). தெற்கு மாகாணங்களான ஈராவில் வசிப்போர் கத்தோலிக்க வழக்கத்தைத் தழுவுகின்றனர். இவ்விருவகுப்புகளும் மதத் துவேஷங்கொண்டு சண்டையிடுவதைத் தடுப்பதற்காக அரசியல் நிர்வாகங்களை இரண்டினுக்கும் பிரித்துத் தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களைத் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள முயன்றது பொதுஜன நியாயத்தையொட்டியே என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் வாதாடினர்.

ஆனல் ஐரிஷ் சுதந்திர நாட்டில் தற்பொழுது ஜனநாயகத் தலைவராயிருப்பவர் (Dr. Douglas Hyde) டாக்டர் டக்ளஸ் ஹைடு என்ற பெரியார். இதில் விசித்திரமான விஷயம் என்னவெனில் இத்தேசத் தலைவர்—நூற்றுக்குத் தொண்ணூறு கத்தோலிக்கரான நாட்டில்-பிராடஸ்டன்டு மதத்தைத் தழுவி நிற்பவர். முன்நடந்த உள்நாட்டுப் போரில் இவர் நடுநிலைமை வகித்தாராதலால் டேவாலிரா வகுப்பினருக்கும், எதிர்ப்புக் கட்சியினருக்கும் பிரியமானவர். கேலிக் என்ற ஐரிஷ் புராதன பாஷைக்கு அது நசித்து இறக்கும் தருவாயில் புத்துயிர் கொடுத்து மீட்டார். அப் பாஷையில் பிரஸிடென்ட் டக்ளஸ் ஹைடு மிக்க விற்பன்னர்.

ஐரிஷ் பிரதம சட்டசபையில் எதிர்ப்புக் கட்சித் தலைவர் ஸ்ரீ காஸ்கிரேவ் (Mr. Cosgrave) என்பவர். இவரும் பிரிட்டிஷ் ஆட்சியை முன்னம் எதிர்த்துச் சண்டையிட்டுச் சிறை சென்றவர். பின்னர் பிரதம மந்திரியாக இருந்தவர். சட்டசபையில் பிரிட்டிஷாரை ஆதரிக்கும் வகுப்பு என்று ஒன்றுமில்லை. மக்கள் ஆதி கிரிஸ்தவர்களாதலால் ரஷ்யப் பொது உடைமை வாசனை சகியார். நாட்டினுள் ஐரிஷ் ரிபப்ளிகன் கக்ஷி (Irish Republican Party) என்று ஒரு எதிர்ப்புக் கட்சியிருந்து வருகிறது. தற்பொழுதைய சர்க்கார் இக் கூட்டத்தை யெதிர்த்துப் போராடுவதில் மும்மரமாக ஈடுபட்டிருக்

கின்றனர். இக் கூட்டத்தின் எண்ணிக்கை ஏறக்குறைய 5,000. இவர்களுள் சுமார் இரண்டாயிரம் பேருக்கே ஆயுதங்கள் உண்டு. இவர்கள் தலைவர் முன் ஆயுத உற்பத்தி சாலையில் வேலை நன்கு கற்றுப் பின் இம்மாதிரி திரும்பிய ஸ்ரீ ஸீன் ரஸ்ஸல் (Mr. Sean Russell). இந்த மகாயுத்தம் ஆரம்பமானபொழுது இவ் வகுப்பின் முக்கியஸ்தர் அறுநூறுவர் கைது செய்யப்பட்டனர். தலைவர் ரஸ்ஸல் தப்பியோடிச் சென்று தற்பொழுது ஜர்மனியில் இருப்பதாகத் தெரிகிறது. இக் கூட்டத்தின் முக்கிய ஆணை என்னவெனில் தற்பொழுதைய ஐரிஷ் நிர்வாகத்திற்கும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கும் உள்ள உறவைத் தொலைக்கவேண்டும் என்பதே.

பிரிட்டன் இப்பொழுது இவ்வளவு மும்முரச்சண்டையில் ஈடு பட்டிருக்கிறது. இச்சமயம் ஈராவின் (Eire) உதவி பிரிட்டனுக்கு மிக்க உபயோகமுள்ளதாக இருக்கும். அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஜர்மன் நீர்மூழ்கிக்கப்பல்களையும், திருட்டுத்தனமாக நடமாடும் அவர்களது யுத்தக் கப்பல்களையும் நன்ருகக் கண்டிக்க பிரிட்டிஷாருக்கு ஐரிஷ் துறைமுகங்களின் வசதியும், ஐரிஷ் அரசாங்கத்தின் உதவியும் மிக்க சிலாக்கியமானதே. ஆனுல் பிரிட்டிஷ் சைனியமும், கப்பற்படையும் தங்கள் நாட்டில் வந்து தங்கவேண்டுமே, அதனுல் தங்கள் சுதந்திரம் குறையும் என்ற பயமே அவர்களை ஒத்துழைப்பினின்றும் மிரட்டுகிறது. ஸ்ரீ சர்ச்சில் ஈராவைத் தன்னுடன் சேர்ந்து ஜர்மனியுடன் சண்டையிட்டுச் சீக்கிரமாகவே உலக சமாதானம் நிறுவச் செய்யும்படி கூவியும், ஸ்ரீ டேவாலிரா இன்னும் நடு நிலைமை வகித்துவருகிருர். ஐரிஷ்தலைவர் ஸ்ரீ தேவ் சொல்லுகிருர்: "நாங்கள் இந்தப்புயலில் புக மறுக்கிருேம். ஆனுல் எந்தத்தரப்பு எங்களைத் தன்தரப்பில் சேர உபத்திரவமோ அல்லது அதற்காக ஆக்கிரமிப்போ செய்கிறதோ அப்பொழுது அதை எதிர்க்க நாங்கள் ஆயுதம் கொள்வோம். எங்கள் நடு நிலைமையைப் பாதிக்கும் அயல் தூண்டுதலைச்சகியோம்." சில பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் வட ஆறு மாகாணங்களை (அல்ஸ்டர்) ஐரிஷ் சுதந்திர நாட்டுடன் சேர்த்துக்கொள்ள அனுமதிப்பதாகவும், ஆனுல் இதற்குப்பிரதிபலனுக சுதந்திர நாடு பிரிட்டனுடன் சேர்ந்து யுத்தத்தில் உழைக்க வேண்டுமென்றும் ராஜி பேசமுயன்ற பொழுது "எங்கள் சுதந்திரத்தை இந்த நாட்டின் இருபாக ஒற்றுமை யென்ற பிச்சைக்காக இழந்துவிடுவோமா? அது முடியாதகாரியம். எங்களுக்கு சுதந்திரமும் வேண்டும். இவ்விரு பகுதியின் பிணைப்பும் வேண்டும். இரண்டும் சேர்ந்து அடையத்தான் கங்கணம் கொண்டுள்ளோம்" என்றுபதில் வந்தது.

இவ்வளவில் இதற்குள் இவர்களது தலைநகரமான டப்ளினில்மேல் இரண்டு மூன்று முறை வெடிகுண்டு வீச்சு நடந்தது. யார் குற்றவாளி என்று கண்டு பிடிப்பது அசாத்திய மில்லை. ஆனுல் ருசு வேண்டுமே.

ஒருதரம் ஜெர்மன் விமானங்கள்தான் இவ்வாறு செய்தன என்று புலன் தெரிந்தபின் ஐரிஷ் அரசாங்கம் புகார் செய்தபொழுது தான் மிகவும் வருந்துவதாகவும், காற்றின் விசையில் அந்த வெடிகுண்டுகள் தவறி அங்கரில் விழுந்துவிட்டதென்றும், தாங்கள் அதற்குத்தக்க பொருள் நஷ்டத்தை ஈடு செய்வதாகவும் ஜெர்மனி சொல்லிற்று.

ஜெர்மனி ஈராவின்மீது படையெடுத்தால் பிரிட்டிஷ் உதவியின்றித் தன்னை எவ்வாறு அந்நாடு பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பது தீராத பிரச்னை.

உலகமே தவிக்கிறது. பிரளயகாலப் புயலையொத்து இருக்கிறது அந்நாட்டைச் சூழ்ந்திருக்கும் கேடு. கடலெழுச்சியும் பூகம்பங்களும் தங்கள் கால அட்டவணையை யொட்டித் தோன்றியிருக்கின்றன. இவ்வளவிற்கும் நடுவே நிற்கும் இத்தீவின் கதிதான் என்ன ஆகும்? அதன் விதியைக் கையில் கொண்டுள்ள அம்மனிதன் "தேவ்"ன் தைரியம்தான் என்ன

# பன்னு

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி சேஷாத்ரி]

ராஜ புத்திர வீரர்களுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மேவார் பண்டைக் காலத்து இந்தியக் கல்விக்கும் நாகரிகத்திற்கும் முதன்மையான இடம் என்பதும், ராஜபுத்திரர்கள் மிக பராக்கிரம சாலிகள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராஜபுத்திரர்கள் மேவாரின் சாம்பிராஜ்ஜியத்தையும் பெருமையையும் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு எவ்வித கஷ்டங்கள் நேர்ந்த போதிலும் பகைவர்களுடன் போர்புரிவதோடு தங்கள் வாக்கை நிறைவேற்றி சத்தியத்தை நிலைநாட்டினார்கள்.

இத்தகைய ராஜபுத்திர வம்சத்தவருள் பன்னு என்னும் செவிலித்தாய் ஒருத்தி இருந்தாள். இவள் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக செய்த தியாகத்தைப்பற்றி இங்கு கூறுவோம்.

ராணு சங்கா இறந்ததும் விக்கிரமஜீ சிங்கு என்பவன் மேவாரின் ராணுவாக பட்டத்திற்கு வந்ததைக் கேள்விபட்டு குஜராத் அரசனை பகதூர்ஷா மேவாரின் மேல் படை எடுத்தான். இதை அறிந்த அந்தப்புரப் பெண்மணிகள் மாற்றான் கையில் அகப்பட்டு அவமானமடைவதை விட உயிர் துறப்பதே மேல் என்று தீர்மானித்து தீக்குளிக்க அக்கினி வளர்த்தார்கள். ராணு சங்காவின் பத்தினியும் ராஜகுமாரன் உதயசிங்கின் தாயுமாகிய குர்னுவதி தேவியின் உத்தரவின்படி சுமார் 13,000 ஸ்திரீகள் தங்கள் உயிரைத் தியாகம்செய்யச் சித்தமாய் இருந்தார்கள். இந்தப் பயங்கரமான சமயத்தில் தைரியமும், ராஜபக்தியுமுடைய தன் குழந்தையின் செவிலித்தாயாகிய பன்னுவை ராணி குர்னுவதி கூப்பிட்டனுப்பினாள். அந்தப்புரத்தில் தீ வளர்க்கப் பட்டிருக்கின்றது. பாவம், ஒன்றும் அறியாத ஒரு இளங் குழந்தையை விட்டுவிட்டுப்பிரிய ஒரு தாய்க்கு மனம்வருமா? அதுவும் இந்த பயங்கரமான சமயத்தில் பிரிந்தால் அதன் கதி என்னவாகும்? எல்லா அன்பையும் விட தாயின் அன்பல்லவா மிகச்சிறந்த அன்பு!

ராணி குர்னுவதி தன்முன் வணங்கி நின்ற பன்னுவைப்பார்த்து "என் அன்புள்ள பன்னு! அந்தப்புரத்தில் தீ வளர்க்கப்பட்டிருக்கிறது. அந்தப்புர மாதர்கள் என்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீ எனக்கு ஒருவாக்கு அளிக்க வேண்டும். அதாவது என் குழந்தையை பத்திரமாய்ப் பார்த்துக்கொள். இனி நான் இவ்வுலகத்தில் இருக்கமாட்டேன். என்குழந்தைக்கு எவ்விதமான கெடுதியும் நேரிடாதபடி நீதான் காப்பற்றவேண்டும். பின்னிட்டு ஒருசமயத்தில் உதயசிங்கு மேவாரின் அரியணை ஏறுவான் என்பது எனக்கு நிச்சயமாய்த்தெரியும். அப்பொழுது, நீ அவனுக்கு செய்த உபகாரத்திற்கு உனக்கு அவன்பிரதிஉபகாரம் செய்வான்," என்று சொன்னார். உண்மையான ராஜபக்தியுள்ள பன்னு மிகவும் மரியாதையுடன் "என் அரசியே! இராஜ குமாரனை என் சொந்தக் குழந்தையைப்போல் பார்த்துக் கொள்ளுகிறேன். அதனால் எனக்காயினும் என்னைச் சேர்ந்தவர்களுக்காயினும் எவ்வித ஆபத்துக்கள் வந்தபோதிலும் இராஜகுமாரனுக்கு ஒருகெடுதியும் நேரிடாமல் காப்பாற்றுவேன்," என்று வாக்களித்தாள். ராணி குர்னுவதியின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் பெருகிற்று. "பன்னு, உன்னுடைய வார்த்தைகளால் என்னுடைய இருதயம் நிம்மதி அடைந்தது. நீ ஒரு உண்மையான ராஜபுத்திர பெண் பேசவேண்டியது போல் பேசுகிறாய். ராஜ புத்திரர்கள் மரணத்தருவாயில் கூட அவர்கள் வாக்கைப் புரட்டமாட்டார்கள். இனி நான் சந்தோஷமாய் உயிரை விடுவேன்" என்று சொல்லித்தன் குழந்தையைக் கடைசியாக தூக்கி வாரி முத்தமிட்டுப் பன்னுவின்

கையில் ஒப்புவித்து சந்தோஷமாய் தீயில் மூழ்கி உயிர் துறந்தாள். ஆனல் கடைசியில் பகதூர்ஷா தோல்வி அடைந்து ஓடிப் போய்விட்டான். ஆகவே விக்கிரமஜித் சிங்கே மேவாரின் ராணுவாக விளங்கினுன்.

குழந்தை உதயசிங்கு விக்கிரமஜித் சிங்குக்குப் பிறகு மேவாரின் பட்டத்திற்கு உரியவன். ஆனபடியால் ராணு சங்காவின் மருமகனுன பன்விர் என்பவன் விக்கிரமஜித் சிங்கையும் அவனுக்குப்பிறகு பட்டத்திற்கு உரியவனுன குழந்தை உதய சிங்கையும் கொன்று தானே இராஜ்ஜியம் ஆளவேணுமென்று ஓர் சூழ்ச்சி செய்தான்.

குழந்தை உதயசிங்கு அந்தப்புரத்தில் பன்னுவால் வளர்க்கப்பட்டு வந்தான். பன்னுவுக்கும் அதே வயதில் ஒரு பிள்ளை இருந்தான். அவன் பெயர் பபா (Bappa). ஒரு நாள் இரவு எங்கும் நிச்சப்தம் குடி கொண்டிருந்தது. இரு குழந்தைகளும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். பன்னுவுக்கும் கொஞ்சம் தூக்கம்தான். திடீரென்று அந்தப்புரத்தில் கூச்சலும் அழுகையும் கேட்டன. பன்னு திடுக்கிட்டு எழுந்தாள். சுற்றிப் பார்த்தாள். அப்பொழுது ஒரு வேலைக்காரி ஓடிவந்து பன்னுவின் அறையின் கதவைத்தட்டி "பன்னு! எழுந்திரு, சீக்கிரம். ராணு விக்கிரமஜித் சிங்கு கொலையுண்டான். இராஜ குமாரன் உதயசிங்கைக் கொல்ல பன்பிர் வந்துகொண்டிருக்கிறுன். உடனே குழந்தையைக் காப்பாற்று, சீக்கிரம், சீக்கிரம்." என்று எச்சரித்தாள். "பன்னுவுக்கு விஷயம் விளங்கிற்று. ஒரு நிமிஷம் அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தான் குர்னுவதிக்குக் கொடுத்த வாக்கும் அதைக்கேட்டு குர்னுவதி சந்தோஷமாய் தீயில் குதிக்கச் சென்றதும் அவள் மனத்தோற்றத்தில் முன் வந்து மறைந்தன. "இனி ஒரு நிமிஷம்கூட தாமதிக்கலாகாது" என்று சொல்லிக் கொண்டே குழந்தை உதயசிங்கின் நகைகளையும் உடுப்புகளையும் கழட்டித் தன் குழந்தைக்குப் போட்டு அதை உதையசிங்கின் தொட்டிலில் படுக்கவைத்து உதயசிங்கின் பட்டு வஸ்திரத்தால் அதைப்




போர்த்தினாள். பிறகு இராஜ குமாரனைத் தன் இரு கரங்களால் அணைத்துக்கொண்டு போய் அந்தப்புறத்தின் இரகசிய அறையில் ஒருவருக்கும் சந்தேகம் ஏற்படாமல் ஒரு கூடையில் வைத்து இலைகளால் மூடி மறைத்தாள். இராஜ குமாரன் இவை ஒன்றும் அறியாதவனாய் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். பன்னா தனக்கு வேண்டிய வேலைக்காரி ஒருத்தியைக் கூப்பிட்டு இராஜகுமாரனை பத்திரமாய் அந்த இரகசிய அறையின் மூலமாகவே எடுத்துக்கொண்டு வெளியே போய்விடு என்றும் பிறகு தான் அவளைச் சந்திப்பதாகவும் சொன்னாள். இது செய்தபின் தான் பன்னாவின் மனது நிம்மதி அடைந்தது. சத்துருவினிடமிருந்து இராஜகுமாரன் தப்பினான் என்று நினைக்கும்பொழுதே அவளது மனம் பரவசமடைந்தது. அதே சமயத்தில் தன் ஒரே மகன் இன்னும் சில நிமிஷங்களில் உயிர் துறக்கப்போகிறான் என்று நினைக்கும்போது அவள் மனம் பதைத்தது. ஒரு நிமிஷம் நிசப்தம். மறு நிமிஷத்தில் அநேக காலடிச் சத்தங்கள் கேட்டன. பன்னா தன் நாடகத்தை நடிக்கத் தயாராய் இருந்தாள். உடனே கதவு திறக்கப்பட்டது. பன்பிர் கையில் கத்தியுடன் உள்ளே நுழைந்தான். "உதயசிங்கு எங்கே" என்று பன்னாவைக் கேட்டான். பன்னா தன் கையால் தொட்டிலைச் சுட்டிக் காட்டினாள். பன்பிர் பார்த்தான். குழந்தையை தன் கையில் இருந்த கத்தியால் அதன் இருதயத்தில் குத்தி கொன்றுவிட்டு இனி தான் தான் மேவாரின் அரசன் என்ற கர்வத்துடன் வெளியே சென்றான். பன்னா தொட்டிலை நோக்கி ஓடினாள். குழந்தையை தன் இரு கரங்களாலும் கட்டி அணைத்துக்கொண்டு மூர்ச்சையானாள். பிறகு நினைவு வந்தவுடன் அழ ஆரம்பித்தாள். அந்தப்புரத்தில் ராணா இறந்ததற்காக அழுதுகொண்டிருந்த ஸ்திரீகள் ஓடிவந்து இராஜ குமாரனும் இறந்துகிடப்பதைக் கண்டார்கள்.

பன்னா தன்குழந்தையின் ஈமக்கிரியைகளை முடித்து சில நாளைக்குப் பிறகு தன் கிராமத்துக்குப் போவதாய்ச் சொல்லி இராஜகுமாரன் உதயசிங்கை மறைத்து வைத்திருக்கும் இடத்திற்குப் போனாள். பன்னாவின் வருகையை அதி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரி பன்னாவைப் பார்த்ததும் சாந்தி அடைந்தாள். பிறகு இருவரும் இராஜகுமாரனை எடுத்துக் கொண்டு டொங்கர்பூர் போய் அவ்வூர்த் தலைவனையடைந்து குழந்தையைக் காப்பாற்றும்படி அவனைக் கேட்டுக் கொண்டார்கள். அவன் பன்பீருக்குப் பயந்து முடியாது என்று சொல்லிவிடவே, காடுகளையும் மலைகளையும் தாண்டிக்கொண்டு ஆஸாஷா என்னும் ஒரு ஜெயின் தலைவனைநாடி இராஜகுரானை எந்த விதத்திலாவது காப்பாற்றும்படி வேண்டி அவனுக்கு நடந்த சங்கதிகளை எல்லாம் தெரிவித்தார்கள். ஆஸாஷா முதலில் அந்த வேண்டு

---

நோட்டீஸ்

## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1940௵ O. S. No. 71

சுந்திரத்தம்மாள்—வாதி

1. லெக்ஷ்மி அம்மாள்
2. கிருஷ்ணமாச்சாரியார்
3. மைனர் ராமஸாமி

} பிரதிவாதிகள்

ஷை மைனர் 3-ம் பிரதிவாதிக்கு அவன் போஷகியும் தாயாருமான முதல் பிரதிவாதி லெக்ஷிமி அம்மாள் - கார்டியன் ஷை பிரதிவாதிகளுக்கு தெரிவிப்பதாவது,

ஷை நெம்பர் டிக்கிரிப்படி வாதிக்கு கிடைக்க வேண்டிய டிக்கிரி தொகை வகையறுவுக்காக, டிக்கிரியில் பாத்யம் கண்டிருக்கிற Charge சொத்தை ஏலம் போடவும், ஷை நம்பரில் ஏல காலத்தில் ஏலத்துக்கு வரும் சொத்தை வாதியாவது or வாதிக்காக வாதி வக்கீல் V. K. ராஜகோபாலய்யங்கார் அவர்களாவது அயலாருடன் கலந்து உயர்த்தி ஏலம் கேட்டு, ஏல தொகையை டிக்கிரி தொகையில் உளவடைத்துக் கொண்டு ரசீது கொடுக்கும்படி அனுமதி கொடுக்கவேணுமாய் கேட்டும், முறையே மனுக்கள் கொடுக்கப்பட்டு 2 தடவைகளில் ஏலநோட்டீசுகள் அனுப்பியும் சர்வுசெய்து கொள்ளாமல் பிரதிவாதிகள் தலைமறைவாக இருந்துவருவதால், Subsituated Serviceக்கு மனுக்கொடுத்து ஒட்டி சர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் ஆர்டராகி 26-9-41 தேதிக்கு ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. இது விபரம் ஷை பிரதிவாதிகள் அறியவும்.

Mannargudi }
18-9-41 }

V. K. Rajagopala Iyengar
*Pleader for Plaintiff.*

கோளுக்கு இணங்கவில்லை. அதைக்கேட்ட ஆஸாஷாவின் கிழத்தாயார் "அப்படி சொல்வது சரியில்லை. உன் ராணுவின் குழந்தையை நீதான் காப்பாற்ற வேண்டும். இதனுல் பகவான் உனக்கு நல்லதைச் செய்வார்" என்ருள். ஆஸாஷா தன் தாய் வார்த்தையை தட்டமாட்டாமல் சம்மதித்து இராஜகுமாரனைத் தன் சகோதரியின் பிள்ளை என்று சொல்லிக் கொண்டு தன் வீட்டிலேயே வளர்த்து வந்தான். பன்னுவும் தன் சொந்த கிராமம் போய் இராஜகுமாரனுடைய சுகத்திற்கும் பத்திரத்திற்கும் தினம் பகவானை பிரார்த்தித்துக் கொண்டு வந்தாள்.

இப்படியே வருஷங்கள் கடந்தன. இராஜகுமாரன் உதயசிங்கு ஆஸாஷாவின் பாதுகாப்பினுலும் அன்பினுலும் யுக்த வயதை யடைந்தான். உதய சிங்கின் கம்பீர தோற்றமும், நடை உடை பாவனைகளும் அனைவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கின. பிறகு நாளடைவில், உதயசிங்கு ராணு சங்காவின் குமாரன் என்னும் சங்கதி பரவிவிட்டது. இதன் இடையே சித்தூரில் பன்பிர் ஜனங்களால் வெறுக்கப்பட்டவனுனன். கலகங்கள் உண்டாயின. பன்பிர் தன் கீழிருக்கும் உத்தியோகஸ்தர்களையும் பகைத்துக் கொண்டான். அதனுல் அவர்களுக்கு பன்பிர் மேல் கோபம் உண்டாயிற்று. பட்டத்திற்கு உரியவனுன உதயசிங்கு உயிருடன் இருப்பதை அறிந்த அவர்கள் அவனைத் தகுந்த பரிவாரத்துடன் வந்து அழைத்துப் போனுர்கள். உதயசிங்கு சித்தூரில்வந்து மேவாரின் ராணுவாக சிங்காதனம் ஏறினுன். பிறகு அவன் பன்னுவை வரவழைத்து அவளுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து தன் தாயார் ஸ்தானத்தில் அவளைத் தன் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டான். அவள் இறந்த பிறகு அவளை அடக்கம் செய்த இடத்தில் அவளது பெருந்தன்மையையும் சத்தியத்தையும் எப்பொழுதும் ஞாபகப் படுத்துமாறு சலவைக் கல்லால் ஓர் ஸ்தம்பத்தை எழுப்பினுன்.


# ஈழகேசரி

இலங்கையின் சிறந்த தமிழ்த்
தேசிய வார வெளியீடு

வருட சந்தா

| | | |
|---|---|---|
| உள்நாடு : | இலங்கை, இந்தியா | ரூபா 5-0-0 |
| வெளிநாடு : | பர்மா, மலாயா | ரூபா 7-8-0 |

இலக்கண - இலக்கிய - அரசியல் - சரித்திர சம்பந்தமான கட்டுரைகளும் சிறந்த ஆராய்ச்சி விஷயங்களும், புத்தக விமர்சனங்களும் இதில் வெளிவருகின்றன

'ஈழகேசரி' நிலையம்,
பெரிய தெரு,
சுன்னுகம் P.O.
இலங்கை.

தென்னிந்தியப் பிரமுகர்கள்—1

# மகா கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

## குடியேற்ற நாட்டிற்குச் சென்ற கணக்காயர்

[வே. ரா. சுந்தரராமன், எம் ஏ., கல்கத்தா]

லண்டனிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளுள் "டெய்லி ஹெரால்டு" என்பது ஒன்று. அப்பத்திரிகையின் காரியாலயத்தில் ஒருவிவாதம் எழுந்தது. அது "Status" என்னும் ஆங்கிலப்பதத்திலுள்ள "A" என்ற எழுத்திற்கு என்ன உச்சரிப்பு என்பது. விவாதத்தில் கலந்து கொண்ட இருவர்களுள் ஒருவர் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் "மேபலியல்" என்னும் பிரபல கல்லூரியில் படித்துப்பட்டம் பெற்ற உப பத்திராதிபர். மற்றவர் ஓர் சாதாரண பள்ளியில் படித்தவர். அவரும் ஓர் உப பத்திராதிபரே. ஒருவர் கக்ஷி "A" என்னும் எழுத்தை இப்பதத்தில் "ஏ" என்பது போல் உச்சரிக்கவேண்டும் என்பது. மற்றொருவரின் கக்ஷி "A"-க்கு இங்கு "ஆ"-வின் ஒலிபோன்ற உச்சரிப்பென்பது. இருவரும் அதைக்குறித்து ஒரு வித முடிவிற்கும் வராததால் தலைமை பத்திராதிபரிடம் சென்றனர். "யூவர்" என்ற பெயர் பூண்ட அவர் விஷயத்தைக் கேட்டார். குனிந்த தலையுடன் தன்வேலையைச் செய்தபடியே, "ஏ" என்பதுதான் சரியான உச்சரிப்பு என்றார். எதிர்க்கக்ஷியில் வாதித்துத் தோல்வியடைந்த உப பத்திராதிபர் ஆத்திரத்துடன், 'உம்முடைய அபிப்பிராயத்திற்கு ஆதாரமென்ன? ஆக்ஸ்போர்ட்டு அகராதியா?' என்று வினவினர்.

"இல்லை, ஸ்ரீநிவாச சாஸ்திரியார்தான் எனக்கு ஆதாரம். நேற்றிரவு அவர் பேசக்கேட்டேன். அவர் இப்படித்தான் இப்பதத்தை உச்சரித்தார். வேண்டுமானால் நீங்கள் ஆக்ஸ்போர்ட்டு அகராதியையும் பாருங்கள். அதுவும் சாஸ்திரியார் சொல்லுவதையே ஆமோதிக்கும்," என்றார்!

ஆங்கில பாஷையில் உச்சரிப்பு விஷயத்தில் ஆக்ஸ்போர்ட்டு அகராதியில் கூறியுள்ளதுதான் வேதவாக்கு. அதுவும் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரைப் பின் பற்றுகிறதென்று ஒரு ஆங்கிலேயரே சொல்லுவதென்றால் இவருடைய ஆங்கில மொழியிலுள்ள பயிற்சி எவ்வளவு அப்பழுக்கில்லாதது என்பது எளிதில் விளங்கும்!

மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வலங்கிமான் என்னும் ஊரைச் சேர்ந்தவர். ஸ்மார்த்தப் பிராமணமரபில் வடமர் என்னும் பிரிவில் ஓர் உயர்ந்த வம்சத்திலுதித்தவர். அத்வைத மதப் பயிற்சியில் பேர்போன அடையபலம் அப்பைய தீக்ஷதர் என்னும் பெரியாரின் குடும்பத்துடன் தொடர்பு பெற்றவர்.

இவர் பிறந்தது 1869-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ந் தேதி. மகாத்மா காந்திக்கு ஒன்பது நாட்களே வயதில் முற்பட்டவர். இளமையிற் கல்விகற்கையில் சாதாரணமான சோபிதமே தோன்றிற்றே யன்றி பின்பு உலகப்பிரசித்தராகப் போவதைச் சூசிப்பிக்கத்தக்க ஒருவித அறிகுறியும் அம்பொழுது இவரிடம் காணவில்லையாம். சர்வகலாசாலைப் படிப்பு முடிந்ததும், இவர் கல்வி கற்பித்தலையே தன்னுடைய தொழிலாக ஏற்றுக்கொண்டு உபாத்தியாயராக அமர்ந்தார். சில வருஷங்களுக்குப் பிறகு சென்னையில் திருவல்லிக் கேணி ஹிந்து ஹைஸ்கூல் என்னும் உயர்தரப்பள்ளிக் கூடத்தில் தலைமை உபாத்தியாயரானார். இத்துடன் இவருடைய வாழ்க்கை உச்ச நிலையை

# இந்தியன் பாங்கி லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1807)

## தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோடு, மதராஸ்

---

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராஜ நகர், புரசைவாக்கம், ராயப்பேட்டை, சௌகார்பேட்டை.

கிளைகள் :

| | | |
|---|---|---|
| ஆதோனி | கொழும்பு | சேலம் |
| ஆலப்பிழை | தேவக்கோட்டை | சிங்கப்பூர் |
| பெங்களூர் | ஈரோடு | சிவகங்கை |
| பெங்களூர் (கண்டோன்மெண்ட்) | குண்டூர் | திருநெல்வேலி |
| பெஜவாடா | காரைக்குடி | திருப்பூர் |
| பம்பாய் | கும்பகோணம் | திருவாரூர் |
| கள்ளிக்கோட்டை | மதுரை | திருச்சூர் |
| கண்ணனூர் | புதுக்கோட்டை | திருச்சினுப்பள்ளி |
| கொச்சி | கொல்லம் | திருவனந்தபுரம் |
| கோயம்புத்தூர் | ரங்கூன் | தூத்துக்குடி |

ஸப் ஆபீஸ்கள் :

| | | |
|---|---|---|
| குடிவாடா | தெனலி | பீமாவரம் |
| ரேபல்லி | தனுகு | தூக்கிரலா |
| நரசராவ்பேட்டை | உடுமல்பேட்டை | மாருடேரு |
| | பாலகோல் | |

---

| | |
|---|---|
| சந்தா செலுத்தப்பட்ட மூலதனம் | 47,92,800 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | 12,79,280 |
| ரிஸர்வ்களும் இதர நிதிகளும் | 19,18,000 |

---

அன்னிய நாட்டு பரிவர்த்தனை உள்பட எல்லாவிதமான பாங்கிங் தொழிலும் செய்யப்படுகிறது. நிபந்தனைகளுக்கு இந்த பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது மனு செய்துகொள்ளவும்.

N. கோபாலய்யர்,

செக்ரிடேரி.

யடைந்து விட்டதுபோல் தோன்றிற்று. ஏனெனில் அவருக்கு அப்பொழுது வயதும் கிட்டத்தட்ட நாற்பதாயிற்று.

முப்பத்தெட்டு வயது வரையில் ஒரு சாதாரண பள்ளிக்கூட உபாத்தியாயரா யிருந்து பின்பு அரசியல் துறையில் புகழ் கிட்டவேண்டுமென்றால் அதுவும் ஓர் ஆச்சரியமே. இவர் கணக்காயரா யிருக்கையில் இவருக்கு ஓர் சினேகிதர் ஏற்பட்டிருந்தார். அவர்தான் ஜி. ஏ. நடேசன் என்பவர். அச்சிநேகிதர் வெளியிட்டு வந்த "இந்தியன் ரிவியூ" என்னும் மாதாந்தரப் பத்திரிகைக்கு இவர் விஷய தானம் செய்துவந்தார். அப்பொழுது தென்னாப்பிரிக்காவில் நடந்துவந்த போயர் சண்டையைப் பற்றி இவர் எழுதிய ஓர் கட்டுரையைப் படித்து மெச்சி அச் சண்டையில் கலந்துகொண்டிருந்த ஓர் தளகர்த்தர் "எந்தப் போர்வீர எழுத்தாளன் இதை எழுதினான்?" என்று பத்திராதிபரைக் கேட்டாராம். போரின் நுட்பங்களை நேரில் கண்டறிந்த ஒரு வீரனே எழுதக்கூடிய முறையில் அமைந்திருந்தது அக்கட்டுரை!

அந்நாளில் சிறந்த அரசியல் வாதியெனப் பெயர் பெற்றிருந்த கோபால கிருஷ்ண கோகலே என்னும் தேச பக்தரைப்பற்றி இவர் ஓர் புத்தகம் எழுதினார். அதைப் படித்து இன்புற்ற கோகலே இவரை மறக்கவில்லை. சில வருஷங்கட்கப்புரம் கோகலே ஸ்தாபித்த 'இந்திய ஊழியச் சங்கத்தின்' அங்கத்தினராவதற்கு இவர் மனு செய்கையில் தான் முன்பு படித்ததை அவர் பயன்படுத்திக் கொண்டார். அந்த மனுவில் இவர், "என் வாழ்க்கையில் பயனளிக்கத்தக்க பெரும் பகுதி ஏற்கனவேயே கழிந்துவிட்டது. இருந்தாலும் அங்கத்தினராக என்னை ஏற்கும்படி வேண்டுகிறேன்" என்றார். பின்பு கோகலேக் கப்புரம் அச்சங்கத்தின் தலைவராக இவரே, அங்கத்தினரால் ஒரு மனதாக நியமிக்கப் பட்டார்!

இவருடைய உயர்ந்த குணங்களைக் கண்டு தெளிந்தவர் கோகலேதான். அப்பொழுது கர்ஜான் பிரபு என்பவர் ராஜப் பிரதிநிதியாயிருந்து இந்தியாவை ஆ ள வந்தார். அவரை தைரியமாக எதிர்த்து வாதித்து பெரிதும் புகழ் பெற்றிருந்தார் கோகலே. கர்ஜானுக்குப் பின் மிண்டோ பிரபு ராஜப் பிரதிநிதியாய் இந்தியாவிற்கு வந்த பிறகும் கோகலேக்கு அதிக மதிப்பு இருந்துவந்தது. அத்தகைய தேசபக்தர் தேச சேவைக்காக நிறுவிய இந்திய ஊழியச் சங்கத்திற்கு இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இவருடைய யோக்கியதைக்கு ஓர் சிறந்த நற்சாக்ஷிப் பத்திரமாக நிற்கிறது.

சாஸ்திரியார் மத்திய சட்டசபையில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு ஐம்பது வயதிற்கு மேலாகி விட்டது. எனினும் ஒரு சமயத்தில் இவரைவிட அரசியல் வட்டாரங்களில் அதிக செல்வாக்குடையவர் வேறொரு இந்தியருமில்லை.

அரசாங்கத்தினரே இவருடைய புத்தி நுட்பத்தைக் கண்டு மெச்சி இவரைப் பல குடியேற்ற நாடுகளுக்குப் பிரதிநிதியாக அனுப்பினர். சென்ற மகா யுத்தம் முடிந்ததும் நடந்த சாம்ராஜ்யக் கூட்டத்திற்கு இவர் அனுப்பப் பட்டிருந்தார். சர்வதேச சங்கம், அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் என்னும் நகரத்தில் யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்ளுவதற்காக நடந்த ஓர் மகாநாடு, கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து தென்னாப்பிரிக்கா இவைகளுக்கு இவர் பிரதிநிதியாகச் சென்றார். கடைசியில் மன்னர் பிரானின் மந்திராலோசனை சபையிலும் ஓர் அங்கத்தினராக ஆக்கப்பட்டார். இப்பதவியை வகித்ததைக் குறிப்பிடத்தான் இவரை எல்லோரும் "மகாகனம்" என்னும் அடைமொழியுடன் அழைப்பது.

கடைசியாகத் தென்னாப் பிரிக்காவில் அங்கு குடியேறி யிருக்கும் இந்தியரின் விஷயங்களைக் கவனிப்பதற்காக இந்திய சர்க்காரின் சார்பில் ஓர் 'ஏஜெண்டு' பதவி ஏற்பட்டபொழுது, முதன் முதலாக அதில் இவர்தான் நியமிக்கப் பட்டார். அப்பொழுது தன்னுடைய உடல் மெலிந்த நிலையிலிருந்தும் அதையும் பாராட்டாது இவர் அப்பதவியை ஏற்றது பாராட்டத்தக்கது. அதை ஏற்க இவரே மிகத்

தகுதியானவர் என்று தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்களின் உயர்வுக்காகத் தன்னுடல், பொருள், ஆவி, மூன்றையுங் கொடுத்துப் போராடிய மகாத்மா காந்தியே சொல்லி ஆமோதித்ததும் இதையே வலியுறுத்துகிறது.

1921 - ல் லண்டனில் நடந்த சாம்ராஜ்யக் கூட்டத்தில் இவர் தென்னுப் பிரிக்காவின் பிரதம மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவரை நேருக்கு நேராகச் சந்தித்து அவருடைய பிற்போக்கான சில அபிப்பிராயங்களை மறுதளித்துப் பேச வேண்டி யிருந்தது. அங்கு குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியர் கட்குச் சம உரிமை அளிக்க வேண்டு மென்று இவர் வாதித்தது மெச்சத் தக்கதா யிருந்த தென்று காலஞ்சென்ற தீனபந்து ஸி. அப். ஆன்ட்ரூஸ் பாதிரியார் சொல்லி யிருக்கிறுர். பின்பு தென்னுப் பிரிக்காவிற்குப்போன பின்னரும் இந்நற் காரியத்திற்கே பாடுபட்டு உழைத்தார்.

சென்றவிட மெல்லாம் பிறரை இவர் வசீகரித்தது இவருடைய சொற்பொழி வாற்றலால் தான். இவர் செய்யும் பிரசங்கங்களிலும் எழுதும் கட்டுரைகளிலும் சொற்கள் செவ்வனே தேர்ந்தெடுத்த தாயிருக்கும். ஒரு சொல்லைப்பெயர்த்து விட்டு. அதற்குப் பதிலாக வேறென்றை உபயோகப் படுத்துவது முடியாததா யிருக்கும். ஆங்கில மொழியை அவ்வளவு தீர்மானமாய் இவர் ஆராய்ந்திருக்கிறுர். புதிய முறையில் எழுதப்பட்டிருந்த ஓர் ஆங்கில அகராதியை இவர் எப்பொழுதும் கையிருப்பாக வைத்துக் கொண்டு சதா அதைப் படித்துக்கொண்டே யிருப்பார் என்று இவருடைய நெருங்கிய உறவினர் ஒருவரிடத்தி லிருந்து நான்கேட்டிருக்கிறேன்.

இவர் பேசுமுன் தன்னை எவ்வாறு ஆயத்தம் செய்து கொள்ளுகிறுர் என்று கவனித்தால், அது சற்று வியப்பளிப்பதாகவே யிருக்கும். நன்ருய்ப்பேச வல்லவர்கள் என்று பெயர் பெற்றவர்கள் இவ்விஷயத்தில் கொள்ளும் வழிகள் பல. உதாரணமாக, கர்ஜான் பிரபு தன் சொற்பொழிவுகள் ஒவ்வொன்றையும் முன்கூட்டியே தயார் செய்து வைத்துக் கொண்டு அதை ஒருவார்த்தை விடாமல் மனப்பாடம் செய்து விடுவாராம். இங்கிலாந்தின் மாஜி பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் என்பவர் முதலில் தன்பேச்சை எழுதி, அதைப் படித்து விட்டுக் கிழித்துப் போட்டு விடுவாராம். பிறகு முற்றிலும் வேறுபட்ட ஓர் சொற்பொழிவை நிகழ்த்துவாராம். இங்கிலாந்தின் தற்கால பிரதம மந்திரியான வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் தான் பேசுமுன் தனிமையாக ஓர் அறையினுட் சென்று தாளிட்டுக் கொண்டு தன் பிரசங்கத்தை நடத்தி ஒத்திகை செய்து கொள்ளுவாராம். நம் நாட்டிலேயே பேசுவதில் பேர் போன ஒருவர் தன்னுடைய சகாக்கள் பலரைக் கொண்டு பிரசங்கத்தைத் தயார் செய்யச் சொல்லி அவைகளி னின்றும் சொற்களைப் பொறுக்கி யெடுத்துத் தான் பேசப் போவதை எழுதிக் கொள்ளுவாரெனச் சொல்லப் படுகிறது.

சாஸ்திரியாரின் வழியோ இவைகளி னின்றும் முற்றிலும் வேறு விதத்திலமைந்தது. தான் நடத்தப்போகும் பிரசங்கத்தை இவர் முன்னுடியே எழுதிப் பயிலுவதில்லை. ஆனுல் பேசவிருக்கும் விஷயத்தைக் குறித்து மட்டும் சில மணி நேரங்கள் தீர சிந்திப்பார். மனதில் பேச்சை எப்படி அமைப்பதென்று திட்டஞ் செய்துகொள்ளுவார். அவசியமாய்ப் பிரயோகஞ் செய்யவேண்டியவை யென்று தோன்றும் சில சொற்றொடர்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார். இவ்வளவு தான். பிரசங்கம் மட்டும் அச்சமயத்தில் தோன்றியபடியே வந்தமையும்.

இவர் பேச்சைப்பற்றி சில ரஸமான விஷயங்கள் கூறப்படுகின்றன. இவ்வளவு அழகாகப் பேசத் திறமை வாய்ந்த இவருக்கும், பேச வெழும்போது ஒரு பயம் உண்டாகுமாம். கட்டடம் இடிந்து விழுதல், இடி விழுதல், தீப்பற்றல், இவை போன்ற ஏதாவது ஒரு விபத்து ஏற்பட்டு, தான் பேசவேண்டிய அவசியமில்லாமற் போகாதா என்று எண்ணுவாராம். ஆனுல் பேச வாரம்பித்த பின்பு இந்த பயம் பறந்துவிடுமாம். அதே மாதிரியே பேச்சு

முடிந்தவுடன், தான் இன்னும் நன்ருய்ப் பேசியிருக்கலா மென்ருவது, சொல்ல வேண்டிய விஷயங்களில் சிலவற்றை விட்டு விட்டோமே என்ருவது அதிருப்தி யடைவாராம்.

இவருடைய பேச்சைக் கேட்டு மெச்சாதாரில்லை. பால்பர் பிரபு என்பவர், உலகத்திலுள்ள முதல் ஐந்து பேச வல்லவர்களில் இவர் ஒருவர் என்ருர். பேலியல் என்னும் சிறந்த கல்லூரியின் தலைமையதிகாரி ஒருமுறை இவர் பேசுவதைக் கேட்டு விட்டு ஆங்கில மொழியில் இவ்வள வழகு இருக்கிறதா என்று வியந்தார். காலஞ்சென்ற ஐந்தாஞ்ஜார்ஜ் மன்னர் தானே பேசுவதில் சிறந்தவர் எனப் பெயர்பெற்றவர். அவரே இவருடைய பேச்சை மெச்சியிருக்கிருர். இங்கிலாந்தில் மாஜி பிரதம மந்திரி பால்டுவின் என்பவர் இவருடைய பிரசங்கம் ஒன்றைக் குறித்து, "இப் பிரசங்கம் என்னுடையதா யிருக்கக்கூடாதா என்று வருந்துகிறேன்" என்ருராம். சாம்ராஜ்ய மகாநாட்டில் இவருடைய சொற்பொழிவை முழுவதும் இருந்து கேட்பதற்காக அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் என்பவர் அதே சமயத்தில் நடக்கவிருந்த தன்னுடைய மந்திரி சபைக் கூட்டத்தையும் ஒத்திப் போட்டதாகச் சொல்லப்படுகிறது.

பேசுவதில் இவ்வளவு திறமை வாய்ந்த இவர், பிறர்—அதிலும் பள்ளிக்கூட மாணவர்கள்—நன்ருய்ப் பேசிஞல் அதைக் கேட்டுக் களிக்கிருர். ஒரு முறை சென்னை ராஜதானிக் கலாசாலையைச் சேர்ந்த மாணவர் விடுதியில் ஓர் சொற்பொழிவு நிகழ்த்த இவர் இசைந்தார். இவருடைய பேச்சு முடிந்தவுடன் மாணவர்களுள் ஒருவன் இவருக்கு வந்தனமளிப்பதற்காகச் சில வாக்கியங்கள் பேசிஞன். தன் பிரசங்கம் முடிந்தவுடன் அவசரமாய் வேறு ஓரிடத்திற்குப் போகப் புறப்பட்டுவிட்ட இவர் அவனுடைய சிறு பேச்சின் வனப்பைக் கண்டு மெச்சி, திரும்பிவந்து அவனை ஆசீர்வதித்துவிட்டுப் போனுர். அச் சிறுவன் பின்பு ஐ.ஸி.எஸ். பரீக்ஷையில் தேறினுன்; ஆனுல் ஒரு கடுமையான நோயினுல் பீடிக்கப்பட்டு இறந்தான்.

சாதாரண சம்பாஷணைகளிலும் இவர் இப்படியே பேசுகிருர். பொறுக்கியெடுத்த, சந்தர்ப்பத்திற்குத் தகுந்த வார்த்தைகள். இவரைப் பேட்டி காண்பவர்கள் அதனுல் ஒருவித சிரமமும் அடைவதில்லை. இவர் சொல்லிக்கொண்டு வருவதை அப்படியே குறித்துக்கொண்டு அதை நேராக அச்சுக்கு அனுப்பிவிடலாம். அவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும் பேசி இவர் தன் எண்ணங்களை வெளியிடுவார்.

நம் மாகாணத்தில் கடைசியாக இவர் வகித்த பொறுப்புள்ள பதவி அண்ணுமலை சர்வகலாசாலையின் தலைவர் பதவி யென்பது. சிறிது காலம் திறமையுடன் அதை நடத்தியபின் தேக நிலையைக் குறித்து அதைவிட்டு விலகவேண்டி வந்தது.

அந்நிய மொழியில் அழகுடன் எழுதவும் பேசவும் திறமை வாய்ந்த இவர், தாய் மொழியில் பேசவும் எழுதவும் பயிலாமல் அதை அலக்ஷியம் செய்கிருர் என்று சிலர் இவர்மேல் குறை கூறியதுண்டு. இதைத் தீர்ப்பதற்காகத்தானே என்னமோ இவர் வரவர கூட்டங்களில் தமிழிலேயே பேச முன்வருகிருர். தமிழிலேயே தன்னுடைய சுய சரிதமும் எழுதத் தொடங்கியிருக்கிருர்.

---

## அறிக்கை

நமக்கு அனுவசியமான தபால் செலவுக்கு இடங் கொடுக்காமலே, சந்தாதார்கள் நமக்குச் சேரவேண்டிய சந்தா தொகையை அனுப்பி விடும்படிக் கேட்டுக் கொள்ளுகிருேம்.

மானேஜர்

மங்களகரமான நான்காவது வாரம்

செப்டம்பர் 25உ முதல்

| | |
|---|---|
| சாந்தா ஆப்தே,<br>M. S. சுப்புலக்ஷ்மி,<br>Y. V. ராவ், செல்லப்பா,<br>சாரங்கபாணி, துரைராஜ்<br>சாரதாம்பாள்<br>கிருஷ்ணவேணி<br>நடிக்கும் | **சாவித்திரி** |

டைரெக்ஷன் :
Y. V. ராவ்

பாட்டு :
பாபநாசம் சிவன்

ஒளிப்பதிவு :
யூஸப் மூல்ஜி

ஒலிப்பதிவு :
அத்துல் சட்டர்ஜி

| | |
|---|---|
| சிந்தாமணி டாக்கீஸ்,<br>மதுரை.<br>வெலிங்டன் டாக்கீஸ்,<br>திருச்சி.<br>எடிஸன் தியேட்டர்,<br>கோயமுத்தூர். | சென்னை<br>பிரபாத் டாக்கீஸில்<br>எதிர்பாருங்கள் |

மாயவரம் வெள்ளாளர் டாக்கீஸில் 3-வது வாரம்

சாந்தா ஆப்தே, M. S. சுப்புலக்ஷ்மி பாட்டுகளை

H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்.

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ரிஜிஸ்டர். நெ. 1506

# அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

**M. K. கிருஷ்ண செட்டி**

**கோயமுத்தூர்**

மதராஸ் விற்பனையாளர் :—

**V. கனகய்ய செட்டி & Co.,**

**நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்**

**மதராஸ்.**


"மோஹன் எவ்வளவு அசுத்தமாயிருக்கிறான்!"
"...அவன் ஆடைகள் இப்பொழுதான் சலவை செய்யப்பட்டன. ஆனால் அவை சுத்தமாகவே இருப்பதில்லை. மோஹன் தகப்பனார் அதைப் பற்றி என்னிடம் குறைகூறினார். ஆடைகள் மட்டுமல்ல வீடும் அசுத்தமாகவும் சந்தோஷமில்லாமலும் இருக்கிறது. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவே இல்லை."
"இப்படியேதான் நாங்கள் இருந்தோம். ஆனால் ஒரு சினிமாப்படத்தை என் புருஷன் பார்க்கும் வரையில்தான்....
...அது ஸன்லைட் ஸோப்பின் இரகஸ்யத்தைக்காட்டும் சினிமாப்படம். அழுக்கு, அசுத்தம் முதலியவைகளை நீக்குவதில் அது மிக உயர்ந்த சுத்தமான ஸோப். அதன் அதிக நுரை அழுக்குகளை சீக்கிரத்தில் நீக்கி, ஆடைகளைப் புதியவை போல் செய்கிறது. மெல்லிய சருமத்திற்குக்கூடக் கெடுதியளிக்காது. அதற்கு ஒரு நறுமணமும் உண்டு. இவை தவிர, அது மிகவும் சிக்கனமானது."
"ஸன்லைட் ஸோப் எவ்வளவு உயர்ந்ததென்பதைசொன்னாள் லக்ஷ்மி பஹூரான் நான் உபயோகித்துப் பார்க்க இன்று ஒரு ஸோப் கட்டி கொண்டுவா."
கொஞ்ச காலம் கழித்து
"நம் வாழ்க்கையில் அதி சீக்கிரத்தில் மாறுதல். நாம் சந்தோஷமாயும் ஆரோக்கியமாயும் இருக்கிறோம். வீடும் பிரகாசமாய் இருக்கிறது."
"என் வேலையும் இப்பொழுது சுலபமாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் ஸன்லைட் ஸோப்பே."
எப்பொழுதும் உயர்தரமானது
எவ்வித சலவைக்கும் தகுந்தது
ஸன்லைட் சோப்
SUNLIGHT SOAP
S. 24-511 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

நாகரிகத்திற்கு
எடுத்தது மைசூர் ஸில்க்
ஆடைகள்தான். இவ்
வழகிய ஸில்க் ஆடை
கள் 100-க்கு 100 சுத்த
மானவை. மற்றவை
களைக் காட்டிலும் மேல்;
நீண்ட காலம் உழைக்கக்
கூடியவை.



## மைசூர் சில்க்
### ஆடைகள்

பல கலர்கள் கொண்ட ரகங்
கள் விற்பனைக்குத் தயாரா
யிருக்கின்றன. இன்றைக்கே
போய்ப்பார்க்கச் சொல்லுங்கள்

## கவர்ன்மென்ட் ஸில்க் வீவிங் பாக்டரி,

மைசூர்.

சரக்குகள் கிடைக்குமிடம் :—

## தி மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ்,

**1-11, மௌண்ட் ரோட்டு, மதராஸ்**

*Edited & Published by K. S. Venkataramani at No. 5, Venkatesa Agraharam, Mylapore, Madras.*
*Printed by T. K. Venkatesan at The Jupiter Press, 16, Sembudoss Street, G. T. Madras.*